

# தமிழரசு

16-12-76

50 காசு

# அரசு - மிகவுயர்ந்த தரமான
# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு - வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

16 - 12 - 1976

மலர் : 7 இதழ் : 12


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| இந்த அரசியல் சாசனத்தின் தனிச்சிறப்பு ... | 2 |
| 10 கடமைகள் ... | 3 |
| மாணவர்கள் செய்த மகத்தான பணி ... | 4 |
| சிறு தொழில் செழித்திட எல்லா வகையிலும் உதவிடுவோம்! ... | 7 |
| ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது! ... | 10 |
| தமிழ்நாட்டு அறிவு | 11 |
| ராஜாஜியின் நிர்வாகத் திறன் ... | 13 |
| ராஜாஜி—சில நினைவுகள் ... | 17 |
| வாதியும் அவரே, வக்கீலும் அவரே! ... | 19 |
| ர்ராஜாஜி பாட்டு ... | 21 |
| அவர் கையாண்ட யுக்தி! ... | 23 |
| படமும் செய்தியும் ... | 24 |
| தமிழ் இலக்கிய வானிலே ஒரு முழுநிலா! | 29 |
| பித்தளை ஒட்டியாணம் ... | 31 |
| உழவர் பெருமக்களுக்கு உதவும் செய்திகள் ... | 41 |
| பாம்பென்றால் பதறுதீர்! ... | 45 |
| யுனெஸ்கோ ... | 47 |


கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.





மூதறிஞர் ராஜாஜி அவர்களைப் பற்றிய அண்மைக்காலச் செய்திகளைப் பலர் அறிவர். எனவே, ராஜாஜி அவர்களைப்பற்றி பலருக்குத் தெரியாத செய்திகளைத் திரட்டி, ராஜாஜி அவர்களின் நினைவு நாளையொட்டி, வழங்கியுள்ளோம்.

அதுபோலவே, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்ட 'கல்கி' அவர்களின் 'பித்தளை ஒட்டியாணம்' என்ற பழைய கதையையும் 'கல்கி' அவர்களின் நினைவாக வெளியிட்டுள்ளோம்.

—ஆசிரியர்.



# இந்திய அரசியல் சாசனத்தின் தனிச்சிறப்பு

—ஓம் மேத்தா
உள்துறை ராஜாங்க அமைச்சர்

''நாடாளுமன்ற முறையைப் பின்பற்றி வருகின்ற உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் அரசியல் சாசனங்களிலேயே இந்திய அரசியல் சாசனம் தான் சிறப்பிடம் வகித்து வருகின்றது.

''நம் நாட்டின் அரசியல் சாசனக் கர்த்தாக்கள், மக்களுக்குப் பொறுப்புள்ள பிரதிநிதித்துவ அரசாங்கத்தை அமைத்துக் கொடுப்பதற்காக, நம் நாட்டு மக்களுக்கு ஏற்றவற்றை மட்டும் மற்ற நாடுகளின் அரசியல் சாசனங்களிலிருந்து எடுத்துக் கொண்டார்கள்.

''நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூன்று முக்கிய பிரிவுகளான சட்ட மன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகியவற்றின் அதிகாரங்களையும், அலுவல்களையும், அரசியல் சாசனம் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளது. அதே நேரத்தில் நமது அரசியல் சாசனக் கர்த்தாக்களின் முக்கிய கவலையெல்லாம், ஜனநாயகத்தின் இந்த மூன்று முக்கியப் பிரிவுகளும், சுமுகமாகவும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்தும் செயல்பட வேண்டுமென்பது தான். இந்த மூன்று பிரிவுகளும் போட்டி போடுவதற்காக அமைக்கப்படவில்லை. மாறாக, மக்களின் நன்மைக்காக ஒன்றாக இணைந்து செயல்படுவதற்காக அமைக்கப்பட்டவை.

''வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை என்ற மிகப் பரந்த அடிப்படையிலான ஓட்டுரிமையினால் நமது நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டது. நமது அரசியல் சாசனம் வகுக்கப்பட்டபோது, ஓட்டுரிமைபற்றிய இந்த நடவடிக்கை அறிவுடைமையாகுமா என்று சந்தேகப்பட்டவர்களும் இருந்தார்கள். நமது மக்களில் பெரும்பாலானவர்கள் கல்வியறிவில்லாதவர்கள் என்பது தான் அவர்கள் கூறிய காரணம். ஆனால் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலில் சம உரிமை பெற வேண்டுமானால் ஓட்டுரிமை பெறுவதுதான் ஒரே வழி என்று நமது அரசியல் நிர்ணய சபை கருதியது. மக்கள் அனைவரும் நியாயமான பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ஓட்டுரிமைதான் ஒரே வழி. ஆகவேதான், இந்தியா உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாகக் கருதப்படுகிறது. இந்தக் கருத்தும் மிகப் பொருத்தமுடையதே.

''1951-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலின்போது நமது வாக்காளர்களின் எண்ணிக்கை 17 கோடியே 30 இலட்சமாக இருந்தது. இன்றைக்கு அது இரண்டு மடங்காகப் பெருகி 32 கோடியைத் தாண்டியுள்ளது. இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில், 15 பெரிய மாநிலங்களில் ஒரு நாடாளுமன்றத் தொகுதி என்பது ஏறக்குறைய 10 இலட்சம் மக்களைக் கொண்டதாகும். இதுவரை நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஐந்து பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தியாவில் பாராளுமன்ற மரபு வேரூன்றி விட்டது என்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் இந்தப் பொதுத் தேர்தல்கள் நிரூபித்து விட்டன.

''அரசாங்கம் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்துவதற்கு நாடாளுமன்றம் சில குழுக்களை அமைத்திருக்கிறது. பொதுக் கணக்குக்குழு, மதிப்பீட்டுக் குழு, அரசுத்துறை நிறுவனங்களுக்கான குழு ஆகிய மூன்றும் நிதி சம்பந்தப்பட்ட முக்கிய குழுக்களாகும்.

''நீதித்துறை சுதந்தரமாகச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை நமது அரசியல் சாசன கர்த்தாக்கள் உணர்ந்திருந்தார்கள். அதற்கான அதிகாரத்தையும் அதற்கு அளித்திருந்தார்கள். இந்த அதிகாரங்களின் எல்லையைப் பற்றி யாருடைய உள்ளத்திலேயேயும் எந்தவித சந்தேகத்திற்கும் அவர்கள் இடம் வைக்கவில்லை.

'மக்களின் அரசியல் சக்தி நாடாளுமன்றத்தில் குடிகொண்டிருக்கிறது. அந்த அரசியல் சக்தி மற்றெல்லாவற்றிலும் பரவியிருக்கிறது என்பதே நமது அரசியல் சாசனத்தின் திட்டமாகும். மக்கள் சக்திக்கும் மேலாக ஒன்று இருக்கிறது என்றால் அது நாடாளுமன்றம் மட்டும்தான். அதைத்தவிர வேறொன்றுமில்லை, என்ற உண்மையிலிருந்து, நாடாளுமன்றத்தின் பெருமையை மக்களுடன் அதற்குள்ள தொடர்பையும் அறியலாம்.''

[புதுடில்லியில் 1976 நவம்பர் 23-ஆம் தேதி நடைபெற்ற நாடாளுமன்ற முறைகள், நடைமுறைகளுக்கான இரண்டாவது பயிற்சி வகுப்பின் துவக்கக் கூட்டத்தில் ஆற்றிய உரை.]

# 10 கடமைகள்



இந்திய அரசு கொண்டு வந்துள்ள அரசியல் சட்ட 42-வது திருத்தத்தில், இந்திய மக்கள் ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டிய 10 கடமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்திய மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளுக்குப் பாராளுமன்றம், 29-10-1976 அன்று, ஒப்புதல் அளித்தது.


**அந்தப் பத்துக் கடமைகளாவன :—**

1. அரசியல் சட்டம், தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.
2. சுதந்திரப் போராட்டத்தின் உயர்ந்த இலட்சியங்களை என்றென்றும் மனத்தில் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.
3. தேசத்தின் சுதந்திரம், ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும்.
4. தேசத்தைப் பாதுகாக்க வேண்டும். யுத்த சேவைக்கு அழைக்கப்படும் போது செல்ல வேண்டும்.
5. தேசத்தில் உள்ள அனைவருடனும் சகோதர மனப்பான்மையை வளர்ப்பதுடன், பெண்மையை இழிவுபடுத்தும் பழக்கங்களைக் கைவிட வேண்டும்.
6. தேசத்தின் கூட்டுக் கலாச்சாரத்தின் பழம்பெருமையைக் கட்டிக் காத்திட வேண்டும்.
7. இயற்கைச் சூழ்நிலைகளைப் பாதுகாத்து, உயிர்ப் பிராணிகளை அன்புடன் நடத்த வேண்டும்.
8. விஞ்ஞானத்தில் அக்கறை, மனிதத் தன்மை, விசாரித்து அறிந்து உண்மை அறிவதுடன் தவற்றைத் திருத்திக் கொள்வது ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
9. தேசத்தில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதுடன், வன்முறைகளைத் தவிர்க்க வேண்டும்.
10. தனிப்பட்ட முறையிலும், கூட்டு நடவடிக்கைகளிலும் சிறப்பான நிலை அடைய, உழைக்க வேண்டும்.

மேற்கண்ட 10 கடமைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவே, இக்கடமைகளைச் செய்து நமது நாட்டினைக் கண்போல் காத்து, உலக அரங்கில் இந்தியா ஒப்பற்ற இடம் பெறச் செய்ய வேண்டும் என்று தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.





# மாணவர்கள் செய்த மகத்தான பணி



அட்டைப் படக் கட்டுரை.

'பசுமை நிறைந்த நினைவுகளோடு பாடித் திரியும் பறவைகள்!' என்றுதான் மாணவர்களைப் பற்றிப் பலர் எண்ணி வருகின்றனர். ஆனால் மாணவர்கள் நாட்டின் ஆக்கப் பணிகளுக்கு உதவும் நல்லதோர் ஆதாரம் என்பதைச் சென்னை மாநகரில் உள்ள 20 கல்லூரிகளைச் சேர்ந்த தேசிய சேவைத் திட்டத்தில் தொண்டர்களாக உள்ள மாணவர்கள் மெய்ப்பித்து விட்டனர்!



மாட்சிமை பொருந்திய—பாராட்டிற்குரிய—செயல்களைச் செய்கின்றவர்களே மாணவர்கள் என்பதற்கோர் எடுத்துக்காட்டாகவும் சென்னைக் கல்லூரிகளின் மாணவர்கள் விளங்கியுள்ளனர்!

கடந்த நவம்பர் 23, 24, 25 தேதிகளில் சென்னை மாநகரில், வரலாறு காணாத அளவுக்கு அதிக அளவில் மழை பெய்ததால், சென்னை மாநகரின் தாழ்வான பகுதிகள் எல்லாம் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

அவ்வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்றும் பணியில் பல மாணவர்களும் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பச் செட்டியார் இரசாயன தொழில் நுட்பக் கல்லூரி, அம்பேத்கார் கலைக்கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த சில மாணவர்கள், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் வெள்ளத்தில் நீந்திச் சென்று, வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த வீடுகளின் கூரைகளிலும், மாடிகளிலும் நடுங்கிக் கொண்டிருந்த மக்களைக் கரைக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்ட நிகழ்ச்சிகள், நெஞ்சை விட்டு அகலாத நினைவுகளாக உள்ளன.



மகளிர் கல்லூரிகளைச் சார்ந்த மாணவிகள் தங்களுடைய உணவுகளை எல்லாம் எடுத்துச் சென்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுத்துவிட்டு, தாங்கள் பட்டினி கிடந்த செய்தி மறக்க முடியாததாக உள்ளது.

மாணவர்களும், மாணவிகளும் அத்துடன் தங்கள் பணி முடிந்துவிட்டதென்று அமைதியடைந்துவிடவில்லை.





சென்னை வியாசர்பாடியில் கடந்த 4-12-1976 அன்று 20 கல்லூரிகளைச் சேர்ந்த 410 மாணவிகளும், 1,000 மாணவர்களும் தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் வெள்ளத் துயர் துடைப்புப் பணியாற்றுவதற்காகத் திரண்டனர். திரண்ட மாணவர்கள் 4 பிரிவுகளாகப் பிரிந்து செயல்படத் துவங்கினர்.



வெள்ளத்தின் காரணமாக வியாசர்பாடியில் உள்ள சாஸ்திரி நகர் தொழிலாளர் குடியிருப்புகள் சேறும் சகதியுமாகக் காட்சியளித்தன. அச்சேற்றையும், சகதியையும் அப்புறப்படுத்தி, தாழ்வான பகுதிகளில் மண்போட்டு நிரப்பும் பணியில் ஒரு பிரிவினர் ஈடுபட்டனர்.


அம்பேத்கார் கல்லூரியை ஒட்டியுள்ள தாழ்வான பகுதியில் மண்நிரப்பி தரை மட்டத்தை உயர்த்தும் பணியில் 3 பிரிவு மாணவர்கள் ஈடுபட்டனர்.

"ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்" என்று அமரகவி பாரதியார் கூறியது போல், வெள்ளத்தின் காரணமாக வீடுகளில் படிந்த மண்ணை அகற்றும் பணியில் மாணவிகளும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.



மாணவர்கள் மண்வெட்டியால் மண்ணை வெட்டிக் கொடுக்க அதை மாணவிகள் தூக்கிச் சென்று பள்ளங்களில் போட்டு நிரப்பினார்கள்.

வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகளைச் சீர்திருத்துவதிலும், சாலை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்த மாணவர்களின் கடமை உணர்வினைக் கண்டு, தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்ததுடன் மாணவர்களையும், மாணவிகளையும் பாராட்டினார்.



## ஆளுநர் அளித்த பாராட்டு !

''மாணவ, மாணவிகள் இங்கு செய்யும் வேலை பாராட்டத்தக்கது. நிவாரண வேலையில் அவர்கள் காட்டும் ஆர்வம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இதைப் பார்த்து மற்றவர்களும் சேவை செய்ய முன்வருவார்கள் என நம்புகிறேன். சாலை அமைத்தல், தரை மட்டத்தைச் சமப்படுத்துதல் போன்ற வேலைகளில் மாணவர்கள் தொடர்ந்து வேலை செய்ய ஏற்பாடு செய்யும்படி, கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளேன்''—இவ்வாறு தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் கூறினார்.

ஏறத்தாழ ஒரு மணி நேரம் சேற்றில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் நடந்து சென்று மாணவர்களை உற்சாகப்படுத்தியதோடு, யோசனைகளையும் கூறினார்.

வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்ட மாணவர்கள், ''பேனா பிடிக்கும் கைகளுக்கு நாட்டின் நலனுக்காக மண்வெட்டியைப் பிடித்து வேலை செய்யவும் தெரியும்'' என்பதைத் தெளிவுபடுத்திவிட்டனர். அதேபோல், மாணவிகளும், ''நாட்டின் நலனுக்காகக் கடின உழைப்பு மேற்கொள்ளவும் நாங்கள் தயார்!'' ,என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டனர்.

இம்மகத்தான பணியில் ஈடுபட்ட மாணவர்களையும், மாணவிகளையும், அவர்களை இப்பணியில் ஈடுபடுத்திய அலுவலர்களையும் சென்னை நகர மக்களின் சார்பாக ''சபாஷ் மாணவர்கள்'' என்று பாராட்டுகின்றோம்.





# சிறுதொழில் செழிக்க எல்லா வகையிலும் உதவிடுவோம்!

ஆர். வி. சுப்பிரமணியன்
ஆளுநர் ஆலோசகர்

"நூறு நாட்களில் தொழில் துறை இயக்ககத்தால், தமிழ்நாடெங்கும் 5,900-க்கும் மேற்பட்ட சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட முடிந்துள்ளதற்காக மகிழ்ச்சியடைகின்றேன்.

''தொழில் மேம்படுத்தும் திட்டத்தில், சிறு தொழில் துறைக்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு சிறு தொழில் துறைக்குப் பல்வேறு வகையில் உதவி வருகிறது. இம்மாநிலத்தால் தொழிற்சாலைகளைத் துவக்குவதற்காக வழங்கப்படும் உள்ளமைப்பு வசதிகள், இந்த நாட்டின் எப்பகுதியிலும் வழங்கப்படும் வசதிகளை விடச் சிறந்ததாகக் காணப்படுகிறது. இவ்வசதிகளில், தொழிற்சாலைகளைத் துவக்குவதற்குரிய தயார் நிலையில் உள்ள இடம் கிடைக்கச் செய்தல், சிறந்த போக்குவரத்து வசதிகள்,—இரயில் மற்றும் சாலைப் போக்குவரத்து—போதிய மின்சக்தி வழங்கல், பொது மற்றும் தொழில்நுட்பக் கல்விக்குச் சிறந்த வசதிகள், புத்திசாலித்தனம் மிக்க தொழிலாளர்கள், உயர்ந்த அளவில் நகர்ப்புறமாக்குதல் ஆகியவை அடங்கும். 'எலக்ட்ரானிக்ஸ்' மற்றும் அளவைக் கருவிகள் உற்பத்தி செய்தல் போன்ற நுண்மை வாய்ந்த தொழிற்சாலைகளுக்குரிய சிறப்புத் தொழிற்பேட்டைகள் உட்பட நல்ல முறையில் திட்டமிடப்பட்டு, நல்ல முறையில் மேம்படுத்தப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சோதனை மற்றும் மேம்பாட்டு நிலையங்கள், 'டேடா' வங்கிகள், செய்தி நிலையங்கள் முதலியவைகளும் கூட அமைக்கப்பட்டுள்ளன. நுண்மைத் தன்மை வாய்ந்த தொழில் சார்பான மற்றும் நுகர்வோர்களுக்குரிய பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய ஏராளமான தொழிற்சாலைகள் துவக்கப்பட்டு இயங்கி வருவதால், மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகிய இரண்டும் செய்துள்ள உதவிக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய தொழிற்சாலைகள் சில அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. கார், ரேடியோ, 'எலக்ட்ரானிக் புராசஸ் கண்ட்ரோல்' போன்ற நுண்மை வாய்ந்த கருவிகள் சிறுதொழில் துறையிலிருந்து, வளர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

''தொழில் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், காண்போரின் கவனத்தைக் கவருவதாக உள்ளது. ஆயினும் மேலும் செய்ய வேண்டியவை ஏராளமாக உள்ளன. சிறு தொழில்களுக்கு உள்ளமைப்பு வசதிகளையும், நிதி வசதிகளையும் செய்து கொடுப்பது மட்டும் போதுமானதல்ல. விற்பனை வாய்ப்புக் காணுதலும், தொழில்நுட்ப உதவியும் சிறுதொழில்களுக்குத் தேவைப்படுகின்றன. உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் விற்பனை செய்வதில் கடும்போட்டி ஏற்பட்டு உள்ளதால், உற்பத்தி முறைகளை ஒருமுனைப்படுத்துவதும், உற்பத்திச் செலவை குறைந்த பட்சத்திற்குக் குறைப்பதும் அவசியமாகிறது.

''தொழில் முனைவோர்களுக்காக—குறிப்பாகச் சிறு தொழில் முனைவோர்களுக்காக—இனியும் நாம் காத்துக் கொண்டிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழில் முனையும் தன்மையை நாம் மனப்பூர்வமாக ஏற்படுத்த வேண்டும். தீவிர திட்டம் இவ்வகையில் ஒரு முயற்சியாகும். 5,900 சிறு தொழில்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை நமக்கு விதித்துக் கொண்டிருந்தாலும், நம்மால் 8,750 சிறு தொழில்களைப் பதிவு செய்ய முடிந்துள்ளது.

''அவ்வாறு பதிவு செய்யப்பட்டவைகளில், மூன்றில் ஒரு பகுதிக்கும் மேற்பட்டவை தொழில் துறையில் பின்தங்கிய 8 மாவட்டங்களில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பதிவு செய்யப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள சிறு தொழில்கள் உற்பத்தியைத் துவங்குவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள பல சிறு தொழில் யூனிட்டுகளுக்கு வங்கி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த யூனிட்டுகள் அனைத்தும் விரைவில் துவங்கப்படுவதற்குரிய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

''புதிய, சிறிய தொழில் யூனிட்டுகளில் சிறப்புக்கவனம் செலுத்தப்பட்டு வந்தபோதிலும், முன்பே உள்ள யூனிட்டுகளின் தேவை,

புறக்கணிக்கப்படவில்லை. மாநில தொழில் துறை இயக்ககம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரண்டும் முன்பே துவக்கப்பட்டுள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு வலிவூட்டும் பொறுப்பைப் பங்கிட்டுக் கொண்டுள்ளன.

''இந்திய அரசும், சிறுதொழிற்சாலைகளைப் பற்றிய கொள்கை மற்றும் திட்டங்களை முறைப்படுத்துவதுடன் மறுஆய்வும் செய்து வருகிறது. சிறுதொழில் துறையில் நவீனமயமாக்குதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான திட்டம் அண்மையில் இந்திய அரசினுல் அறிவிக்கப்பட்டது. இத்தகைய திட்டங்களின் பயன்கள், சிறு தொழிலதிபர்களுக்கு விரைவில் கிடைத்திடச் செய்ய மாநில தொழில் துறை இயக்ககமும், 'சிட்கோ'வும் ஆவன செய்யும்.

''பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் யூனிட்டுகளில், குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையுள்ள யூனிட்டுகள் ஏதாவது ஒரு காரணத்தால் துவக்கப்படாமலோ, மூடப்பட்டோ, உற்பத்தி நிறுத்தப்பட்டோ உள்ள நிலையில் உள்ளன என்பதை நான் அறிவேன். தற்காலிகச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள அத்தகைய யூனிட்டுகளின் பிரச்சினைகளை ஆராய, அவைகள் தனித்தனியே அணுகப்படும். செயற்படாமல் உள்ள சிறுதொழில் யூனிட்டுகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவைகள் புத்துயிர் பெறுவதற்கான வழிமுறைகளைக் கூறுவதற்காக முதுநிலை அலுவலர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் செயலற்றிருக்கும் யூனிட்டுகளே முன்வந்து தங்களுடைய பிரச்சினையின் வகை மற்றும் அளவுகளைப் பற்றித் தெரிவிக்காவிட்டால், அரசின் முயற்சியால் மட்டும் மேற்கொள்ளப்படும் கணிப்பு, அந்த யூனிட்டுகளை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை முழு அளவில் அறிந்து கொள்ள உதவாது. சிறு தொழில்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளைக் கண்டறியவும் அவைகளுக்குத் தீர்வுகாணவும் அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்குத் தொழிலதிபர்கள் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்கின்றேன்.

''தொழில் முனைவோர்கள் மற்றும் பொது மக்களிடம் தொழில் மயமாக்குவதின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள தீவிர இயக்கம் செய்துள்ள தர அடிப்படையான பணி, மாநிலத்தின் மொத்த உற்பத்தியைப் பெருக்குவதில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள யூனிட்டுகள் செய்யவிருக்கும் எண்ணிக்கை அடிப்படையான பணியைப் போல் முக்கியமானதாகும் என்று கருதுகின்றேன். இப்புதிய யூனிட்டுகள் விரைவில் செழிப்பான தொழில் முனைப்புகளாக மேம்பாடு அடையும் என்றும், மேலும் தொழில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமையும் என்றும் நம்புகின்றேன். அவர்களுடைய முயற்சியில் வெற்றியும் செழிப்பும் ஏற்பட வாழ்த்துகின்றேன்.''

*(19-11-1976 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் நடைபெற்ற 5,900 சிறு தொழில்கள் பதிவு செய்யும் தீவிர திட்ட நிறைவேற்று விழாவிற்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரையின் தமிழாக்கம்).*

# தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் சேர நுழைவுத் தேர்வு!

டேராடூனிலுள்ள தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு, நாட்டின் பல்வேறு இடங்களில் 1977-ம் ஆண்டு பிப்ரவரி 16, 17 தேதிகளில் நடைபெறும்.

டேராடூனிலுள்ள தேசிய ராணுவ அகாடமியின் தலைவரிடமிருந்தும், மாணவர்கள் வசிக்கும் மாநிலங்களின் மாநில அரசு தலைமைச் செயலாளரிடமிருந்தும், **தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களைப் பொறுத்தவரையில் சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் தேர்வுக் கமிஷன்,** ஐதராபாத்திலுள்ள, ஆந்திரப்பிரதேஷ் அரசு ஊழியர் தேர்வுக்கமிஷன் செயலாளர்களிடமிருந்தும் பயிற்சி முறை பற்றிய முழு விவரங்கள், விண்ணப்ப நமூனுக்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் விதிமுறைகள் அடங்கிய புத்தகம் ஒவ்வொன்றும் 90 பைசா விலைக்கு புது டில்லி, சிவில் லைன்ஸ் பகுதியில் உள்ள புத்தக வெளியீட்டுப் பிரிவின் மேலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1977-ம் ஆண்டு ஜூலை முதல் தேதியன்று 11-12 வயது வரம்பிலுள்ளவர்கள் இக்கல்லூரியில் சேரலாம். இக்கல்லூரியில் சேர விரும்புவோரின் பெற்றோர்களோ அல்லது காப்பாளர்களோ தத்தம் பகுதியிலுள்ள மாநில அரசுத் தலைமைச் செயலாளர்களுக்குப் பூர்த்தி செய்த விண்ணப்ப நமூனுக்களின் இரு பிரதிகளை 1977 ஜனவரி 15-ந் தேதிக்குள் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களோடு மாணவர்களின் கையொப்பம் இடப்பட்ட மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களையும் அனுப்ப வேண்டும்.

எழுத்து மூலமான தேர்விலும், நேர்முகத் தேர்விலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் ராணுவ மருத்துவமனைகளில் மருத்துவ சோதனை செய்யப்படுவார்கள். முடிவாக எல்லாச் சோதனைகளிலும் தேர்வு பெற்ற மாணவர்களின் பெயர்கள் அந்தந்த மாநில அரசுகளுக்கு அனுப்பப்படும். பிறகு டேராடூனிலுள்ள தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் தலைவர், தேர்வு பெற்ற மாணவர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்புவார்.



தோற்றம்: 8-12-1878 • மறைவு: 25-12-1972

# ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது!

## — கல்கி




கதைகளில் எத்தனையோ வகைக் கதைகள் இருக்கின்றன. அராபியக்கதை, அத்தைப் பாட்டிக் கதை, விக்ரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை. தற்காலத்து நவீனச் சிறு கதைகள்—எல்லாம் இருக்கின்றன. உபநிஷதங்களிலும், பைபிளிலும் கூடக் கதைகள் இருக்கின்றன. இவற்றில் ராஜாஜியின் கதைகள், உபநிஷதக் கதைகளோடு சேர்க்கப்பட வேண்டியவை.

கட்டுரைகளில் எத்தனையோ வகைகள் உண்டு. ஒரு தடவை படித்து விட்டு எறிய வேண்டியவை, இரண்டு மூன்று தடவைகள் படித்துச் சிந்தித்துப் பயன்பெற வேண்டியவை. படிக்காமலேயிருந்தால் க்ஷேமம் என்ற இனத்தில் சேர்ந்தவை-இப்படிப் பல்வகைக் கட்டுரைகள் உண்டு. பகவத்கீதையைப் போல் தினம் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டிய கட்டுரைகளும் உண்டு.

இந்தக் கடைசி வகையைச் சேந்தவை ராஜாஜியின் கட்டுரைகள்.

சென்ற நாற்பதாண்டுக் காலத்தில் தமிழ் மொழியிலே எத்தனை எத்தனையோ வசன நூல்கள், கவிதை நூல்கள்-பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் வெளியாகியிருக்கின்றன.

இவ்வளவு நூல்களிலே இன்னும் நூறு வருஷங்களுக்குப் பிறகு வரும் தமிழர் சந்ததிகள் படிக்கக் கூடிய நூல்கள் எவை என்று கேட்டால், பாரதியாரின் கவிதைகளும், ராஜாஜியின் கதைகள்- கட்டுரைகளும்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏனெனில் இந்தக் கதைகளில் வரும் பாத்திரங்கள் நம் காலத்து ஸ்திரீகள், புருஷர்களேயானாலும், அவர்களைக் கொண்டு விளக்கப்படும் உண்மைத் தத்துவம் முக்காலத்துக்கும் பொதுவானது: சாசுவதமானது; அழிவில்லாதது, உண்மைத் தத்துவத்தை விளக்கும் காரணத்தினாலே, கதையின் ஓட்டமும் சுவையும் குறைந்து விடுகின்றனவா? படிக்க ஆரம்பிக்கும் போதே, ''இதெல்லாம் பெரிய விஷயங்கள், நமக்கு எங்கே விளங்கப் போகிறது?'' என்று தோன்றி விடுகிறதா?

ராஜாஜி அப்படியெல்லாம் நம்மைப் பயமுறுத்துவதில்லை. சின்னஞ் சிறு பிள்ளைகள் கூடப் படிக்க ஆசை கொள்ளும் முறையிலே கதையைத் தொடங்குகிறார். அப்புறம் கதையின் சுவாரசியத்திலே தங்கு தடை இல்லாமல் நம்மை இழுத்துக் கொண்டே போகிறார். கதையை முடிக்கும் போது, ''இத்தனை நேரமும் நாம் கதை படித்தோமா, வேத மந்திரம் படித்தோமா?'' என்று திகைக்கும்படிச் செய்து விடுகிறார்.


எளிய வாழ்வுக்கும் உயரிய சிந்தனைக்கும் ராஜாஜி உதாரண புருஷராக விளங்குகிறார். இந்த இரண்டு அம்சங்களையும் அவருடைய தமிழ் நடையிலும் காண்கிறோம்.

எளிமை என்றால், இதைவிட எளிமையாகத் தமிழ் எழுதவே முடியாது என்று சொல்லலாம். ஆனால், நடை எவ்வளவுக்கு எளியதோ, அவ்வளவுக்கு ராஜாஜி எழுதும் விஷயங்கள் உயர்வானவை.

இன்னும் ராஜாஜியிடம் நாம் காணும் ஒப்பற்ற தூய்மை, கட்டுப்பாடு, வினைத்திட்பம் ஆகியவற்றையும் அவருடைய தமிழ்நடையில் காண்கிறோம். மலைச் சுனையில் உற்பத்தியாகிப் பாறாங்கற்களின் மீதும் கூழாங்கற்களின் மீதும் சலசல வென்று ஓடும் பளிங்கு போன்ற தூய்மையான ஓடை நீரில் எத்தகைய தெளிவை நாம் காண்கிறோமோ, அத்தகைய தெளிவை ராஜாஜியின் தமிழ் நடையில் காண்கிறோம்.

குற்றாலம், பாபநாசம் முதலிய மலைகளில் தெளிந்த நீரருவி ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் வரும்போது நடுவில் சில இடங்களில் ஆழமான சுனைகளில் விழுந்தும் வருவதுண்டு. அந்தச் சுனைகளில் கழுத்து அளவு ஆழமும், அதைவிட அதிகமான ஆழமுங்கூடச் சில இடங்களில் இருப்பதுண்டு. ஆனால் சுனையில் குனிந்து பார்த்தோமானால், அவ்வளவு ஆழத்தின் அடியில் கிடக்கும் கூழாங் கற்களும் சரள்கற்களும் நன்கு புலனாகும். அப்படியே ராஜாஜியின் கட்டுரைகளைப் படித்துக் கொண்டே போகும் போது சில சமயம் ஆழ்ந்த கருத்துக்களடைந்த பகுதிகளுக்கு வருகிறோம். ஆனால் ஆழத்தைக் கண்டு நாம் பயப்படுவதில்லை. அடியிலுள்ள முத்துக்களையும் ரத்தினங்களையும் தெளிவாகக் கண்டு அதிசயிக்கிறோம். சிலர் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்று உபசாரத்துக்குச் சொல்வதுண்டு. ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகிறதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

—ஆதாரம்: கல்கி இதழ் (1961)



# தமிழ்நாட்டு அறிவு

—திரு. வி. க

ஆச்சாரியார் அறிவு நுண்ணியது; கூரியது; சிந்தை ஆழச் செல்வது; நியாய வாதம் வன்மையது. இராஜதந்திரம் அவர் அறிவுக்கும் சிந்தனைக்கும் வாதத்துக்கும் அகழியாக நிற்கும். தங்கோள் நிறுத்துவதில் ஆச்சாரியார் பேர் பெற்றவர். எனது அரசியல் வாழ்க்கை அவருடனும் உறவு கொண்டது.

எனது அன்பு ஒவ்வொரு தேச பக்தரை ஒவ்வொரு விதமாகச் சிறப்பித்துப் பேசும்; எழுதும். அவ்வன்பு இராஜகோபாலாச்சாரியாரை எப்படிப் பேசும்? எழுதும்? ஒரு முறை லஜபதிக்கும், ஆச்சாரியார்க்கும் பத்திரிகையில் வாக்குவாதம் நடந்தது. அதைப்பற்றி 'நவசக்தி'யில் என் கருத்தைத் தெரிவிக்கப் புகுந்தேன். அப்பொழுது லஜபதியைப் **பாஞ்சால சிங்கம்** என்றேன்-ஆச்சாரியாரைத் **தமிழ் நாட்டு அறிவு** என்றேன்.

சக்கரவர்த்தி இராஜபோலாச்சாரியாரின் சென்னை உறைவிடம் 'திலகர் பவனம்' ஆயிற்று. இப்பவனத்துக்கு அணித்தே 'தேச பக்தன்' நிலையமிருந்தது. அவ்வணிமை ஆச்சாரியாரையும், என்னையும் அடிக்கடி சந்திக்கச் செய்யும். அச்சந்திப்பு ஆச்சாரியாரைத் தொழிலாளர் இயக்கத்திலும் ஈடுபடுத்தியது.

ஆச்சாரியாரைச் சென்னைக்கு அழைத்தது எது? வக்கீல் உலகம். அந்தப் பெரிய வக்கீல் உலகம் ஆச்சாரியாரை ஹைகோர்ட்டில் சில காலமாதல் வாதிக்க விடுத்ததா? இல்லை. இங்கேயே மனித முயற்சிக்கு மேம்பட்ட ஒரு சக்தியிருத்தல் விளங்குகிறது. அச்சக்தி ஆச்சாரியாரை என்ன செய்தது? அகிம்சா தர்ம தீட்சையில் வேட்கை கொள்ள ஏவியது; சத்தியாக்கிரக யாகத்தில் நாட்டம் பெறச் செய்தது; தியாகியாக்கியது.

'ரௌலட்' மசோதாவை முன்னிட்டுக் காந்தியடிகள் பரத கண்டத்தை வலம் வந்தார்; சென்னைக்கும் வந்தார்; எங்கே தங்கினார்? 'திலகர் பவனத்'தில் தங்கினார். அப்பவனத்தில் தென்னாட்டுத் தேச பக்தியே பொங்கித் ததும்பி வழிந்தது. ஆச்சாரியார் நிலையம் திருவள்ளுவர் விருந்ததிகாரமெனப் பொலிந்தது.

'திலகர் பவனம்' குருந்த மரமாயிற்று. காந்தியடிகள் தட்சணா மூர்த்தியானார். இராஜகோபாலாச்சாரியார்வாதவூரடிகளானார். தீட்சை சூட்மமாக நிகழ்ந்தது. ஆச்சாரியாரின் உடல் பொருள் ஆவியெல்லாம் காந்தீயத்துக்கு அர்ப்பணமாயின.

1917-ஆம் ஆண்டில் சேலத்தில் ஆச்சாரியாரை என் கண் எப்படிப் பார்த்தது? 1919-ல் அக் கண் அவரை எப்படிக் கண்டது? அரசராயிருந்த ஆசாரியார், ஆண்டியானார். யான் எப்பொழுதும் ஆண்டி. அதனால் மாற்றம் எனக்கு நன்கு புலனாயிற்று.


இராஜகோபாலச்சாரியாரும் யானும் கதராண்டியானோம்; ஈருடல் ஒருயிரானோம்; சத்தியாக்கிரகப் போர்க் கள்த்தில் நின்றோம்; போர் புரிந்தோம்; பெரும் போர் புரிந்தோம். ஒருடல் சிறைப்பட்டது; மற்றோருடல் சிறைப்பட வில்லை.

வேலூரில் (4-12-1921) தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரியக் கூட்டங் கூடியது. அவ்வேளையில் கூட்டத்திலேயே இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், இராமசாமி நாயக்கர், சுப்பிரமணிய சாஸ்திரியார் முதலிய எல்லோர்க்கும் 144 வழங்கப்பட்டது. எனக்கு மட்டும் அஃது வழங்கப்படவில்லை. அன்று மாலை வேலூர் கோட்டை மைதானத்தில் பெருங்கூட்டம் கூடியது. பேசுவோர் யார்? யான் பேசினேன். என்ன பேசினேன்? 'இப்பொழுது சட்ட மீறல் நடைபெறல் வேண்டும். ஆனால் அது நடைபெறாது. ஏன்? வேலூரில் கதர் மணங்கமழவில்லை. கதர் மணத்திடையே சட்ட மீறல் நிகழ்வது சிறப்பு. இன்னும் ஒரு வாரத்துக்குள் கதர் மணங்கமழ்ந்தே தீர வேண்டும். அம்மணச் சூழலில் நின்று, தேச பக்தர்கள் சட்டமீறுவார்கள்; சிறை புகுவார்கள். ஆதலின் உடனே வேலூர் கதர் அணிவ

தாக; கதர் வண்ணமாவதாக' என்று கருத்துப்படப் பேசினேன்.

வேலூரினின்றுந் திரும்பிய தேச பக்தர் பலர் ஆங்காங்கே சிறைக்கு இரையாயினர். இராஜகோபாலாச்சாரியாரும், சுப்பிரமணிய சாஸ்திரியாரும் வேலூரிலே கதர் மணங் கமழச் சட்டமீறிச் சிறை நோக்கினர்.

வேலூரில் அகிம்சா தர்ம தீட்சிதர் காலம் எப்படிக் கழிந்தது? அவர் மற்றோர் அகிம்சா தர்மத் தீட்சிதருடன் உறவு கொண்டார். அவ்வுறவு ஒரு தமிழ் நூலாகியது. ஆச்சாரியார் 'சோக்ரதர்' என்ற நூலுடன் வெளிவந்தார். ஆச்சாரியார் இயற்றிய அவ்வரிய தமிழ் நூல் எனது அணிந்துரையைப் புனைந்து வெளியாயிற்று.



கயை காங்கிரஸுக்குப் பின்னை ஆச்சாரியாரின் பெரும் பொழுது ஆக்க வேலையில் கழிந்தது. திருச்செங்கோட்டுக்கு அருகேயுள்ள புதுப்பாளையத்திலே காந்தி ஆசிரமம் அமைக்கப்பட்டது. அது சோம்பல் நெளியும் ஆசிரமம் அன்று. அது சுறுசுறுப்பும் ஊக்கமும் முயற்சியும் தாளாண்மையும் மதர்த்து நிற்கும் உயிர்ப்பிடம். காந்தி ஆசிரமம் கதர்ச் சுரங்கம் ஆயிற்று. தென்னாட்டிலே கதர் உற்பத்திக்கு அதுவே பெரும் பீடமாயிருந்தது. அந்த நல்லாசிரமம் ஆச்சாரியார் மேற்பார்வையில் நடந்து வந்தது. அக் கதர் சுரங்கத்தை யான் ஒரே முறை பார்த்தேன். அங்கே யான் போனபோது ஆச்சாரியார் கையில் 'நாலாயிரம்' இருந்தது. அவ்வேளையில் அரிசிப் பொரிமா வந்தது. அதை அவர் எனக்குங் கொடுத்தார்; தாமும் உண்டார். ஆழ்வார் தமிழ்த் தேனில் கலந்த பொரிமா அமிழ்தென இனித்தது.

## நேர்மையாகக் கிடைக்கும் புகழையே விரும்பியவர் !

ஒரு நண்பர் காந்திஜிக்கு தமிழ்நாட்டு அரசியலைப்பற்றிக் கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்துக்கு காந்திஜி பதில் எழுதினார். அதில் ராஜாஜியின் குணத்தையும், திறமையையும் புகழ்ந்து தோத்திரம் செய்து எழுதியிருந்தார் காந்திஜி.

பதிலைப் பெற்ற அந்த அன்பர் காந்திஜியின் கடிதத்தில் ராஜாஜியைப் பற்றி அவர் குறிப்பிட்டிருந்ததைத் தமிழ் மக்களுக்கெல்லாம் தெரிவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். இதனால் தமிழ் மக்களின் ஆதரவு ராஜாஜிக்கு அமோகமாகப் பெருகும் என்று அந்த நண்பர் தீர்மானித்தார். அதன்படியே காந்திஜியின் கடிதத்தைத் துண்டுப் பிரசுரமாக அச்சடித்துவிட்டார். அச்சடித்தபிறகு தான் அவருக்கு அச்சம் பிறந்தது.

'இதை ராஜாஜிக்குக் காட்டாமல் விநியோகிக்கலாமோ கூடாதோ' என்று குழம்பியவர், முடிவில் நோட்டீஸை ராஜாஜியிடம் காட்டித் தம் விருப்பத்தை வெளியிட்டார்.

துண்டுப் பிரசுரங்களைப் படித்தார் ராஜாஜி. பிறகு நிதானமாக, "அச்சடித்த அத்தனை பிரதிகளையும் கண்டிப்பாகக் கொளுத்தி விடுங்கள். இவைகளை விநியோகிக்கவே கூடாது. காந்திஜியின் சிபாரிசினால் நான் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவது பிரயோஜனமில்லை. காந்திஜி போதித்த சத்திய மார்க்கத்தை நான் சரியாகக் கடைப்பிடித்தொழுகி இருந்தால், தமிழ் மக்களின் ஆதரவை நான் ஒருக்காலும் இழந்துவிடமாட்டேன்" என்று கூறினார் !

ராஜாஜியின் இந்த முடிவைக்கேட்ட நண்பர்கள் திகைத்துப் போனார்கள்! உடனடியாகக் கைமேல் கிடைத்த பலனை உபயோகப்படுத்திக் கொள்ளாமல், கனவு உலகில் வாழும் வேதாந்தியாகி விட்டாரே நம் ராஜாஜி என்று வருந்தினார்கள். வியாகுலப்பட்டார்கள். அரிய சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடுகிறாரே என்று அங்கலாய்த்தார்கள் அன்பர் சிலர்! நேர்மையாகக் கிடைக்கும் புகழையே விரும்புபவர் ராஜாஜி என்பதை அறியாத அப்பாவிகள் அவர்கள்! அத்தனை துண்டுப் பிரசுரங்களும் அக்கினி பகவானுக்கு அர்ப்பணமாயின !

(கௌசிகன் எழுதிய 'ராஜாஜி' என்னும் நூலிலிருந்து..)

# ராஜாஜியின் நிர்வாகத் திறன்


—ஆர். வெங்கட்ராமன்,
முன்னாள் தொழில் அமைச்சர்,
தமிழ்நாடு அரசு.

ராஜாஜி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டவர். சுயராஜ்யக் கட்சி வற்புறுத்திய சட்டசபைப் பிரவேசத்தைக் கடுமையாக எதிர்த்தவர். சட்டத்தை மீறி வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரஹத்தைப்புகழுடன் நடத்தியவர்.

இவ்விதமாக சட்ட மறுப்புகள் செய்த அவர் 1937-ஆம் ஆண்டு ஒன்றுபட்டிருந்த சென்னை ராஜதானிக்கு முதல் மந்திரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது பலருக்குப் பலவிதமான ஐயப்பாடுகள் எழுந்தன.

அதே நேரத்தில் தன்து மனச்சாட்சிக்கு எது சரி அல்லது நியாயம் என்று தோன்றுகிறதோ அந்த யார் எதிர்த்தாலும் விட்டுக் கொடுக்கமாட்டார். பாகிஸ்தான் பிரிவினையை அவர் வலியுறுத்தியது, அவரை மக்கள் வெறுப்புக்கும் பாரதத் தலைவர்கள் எதிர்ப்புக்கும் உள்ளாக்கியது என்ருலும் இறுதிவரை அவர் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. அதேபோல தனக்குத் தவறு என்று தோன்றியதை யார் சொல்லுக்காகவும் ஏற்றுக் கொள்ள மாட்டார். இதனல் அரசு ஊழியர்களும், மேல்மட்ட அரசாங்க அதிகாரிகளும்-ஏன்? பொதுமக்களும்கூடச் சற்றுக் கவலை கொண்டனர். சட்டத்தை மீறிய ஒருவரால் எப்படி சட்டம் ஒழுங்கு இவற்றை நிலைநாட்ட முடியும் என்று எண்ணினர்.

பிரிட்டிஷ் அரசாங்கமோ நிர்வாகத் துறையில் ராஜாஜி எந்த முறையைக் கையாளுவாரெனத் தெரியாமல் ஒரு புறம் தவித்தது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் அடக்கு முறைகளை அமல்செய்த அதிகாரிகளுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்று பொது மக்களும் குறிப்பாக. காங்கிரஸ் கட்சியினரும் மறுபுறத்தில் துடித்துக் கொண்டிருந்தனர். ராஜாஜி அவர்கள் தனது தெளிந்த அறிவாற்றலாலும், உயர்ந்த பண்பிஞலும் இந்த நிலையைச் சமாளித்த்துமல்லாமல் நல்ல ஜனநாயக



நாட்டின் நலனுக்காகவே உழைத்த முப்பெருந் தலைவர்கள்!

முறையை வரும் சந்ததியாருக்கு வகுத்தும் கொடுத்தார். ஆளும் கட்சிக்கும் நாட்டின் நிர்வாகத்துக்கும் உள்ள எல்லைகளை வரையறுத்துக் கூறி, சட்டசபை அங்கத்தினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளையும் கற்பித்தார். இதனால் கட்சி அங்கத்தினரிடத்தில் சற்று மனக்கசப்பு ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் தனது கொள்கையை நிறைவேற்றினார்.

நிர்வாகத் துறையில் ராஜாஜி ஒரு சம்பிரதாய பிற்போக்குவாதியா என்று கேட்டால், இல்லை என்றே கூறுவேன். 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலக மந்தத்தின் (World depression) காரணமாக விவசாயப் பண்டங்களின் விலை வெகுவாகச் சரிந்துவிட்டது. நமது நாட்டிலும் வேளாண்மையையே தமது வாழ்வாகக்கொண்ட மக்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாமல் கடன் சுமையில் தவித்துக்கொண்டிருந்ததுமன்றி, தங்கள் நிலங்களை இழக்கும் நிலைக்கு வந்து கொண்டிருந்தனர். வேளாண்மை தமிழ்நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு போன்றது என்பதை உணர்ந்த ராஜாஜி 1938-ஆம் வருஷத்திய கடன் நிவாரணச் சட்டத்தைப் பிறப்பித்து விவசாயிகள் துயர் துடைத்தார்.

இன்றுபோலவே, அன்றும் அச்சட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு உருவாகியது. ஒப்பந்தங்களின் புனிதம் அழிந்துவிடும்; கிராமப் பொருளாதாரம் குறிப்பாகக் கொடுக்கல்—வாங்கல் முறை நசித்துவிடும் என்றெல்லாம் கூப்பாடு போட்டனர். ஆனால் இவை ஒன்றும் ராஜாஜியை அச்சுறுத்தவில்லை. தாம் ஏற்ற பணியைத் தீவிரமாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்தினர்.

1952-54-க்குமிடையே ராஜாஜி இரண்டாவது முறையாக சென்னை ராஜதானியின் முதல் அமைச்சர் பதவி வகித்தபொழுது தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர் பிரச்சனை தலையெடுத்து, பல இடங்களில் குழப்பங்கள் விளைவித்தது. குறிப்பாக, தஞ்சையிலுள்ள பண்ணையாட்களுக்கு நியாயமான கூலி கிடைப்பதில்லை, வேலை நிரந்தரமுமில்லை. இவற்றிற்கான பாதுகாப்புகள் சட்டபூர்வமாக எதுவும் இல்லை.

அன்று தஞ்சைத் தொகுதியின் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தொழிலாளர் பகுதியின் பொறுப்பாளராகவும் இருந்த என்னை ராஜாஜி அழைத்து இப்பிரச்சனை சம்பந்தமாகப் பேசினர். பண்ணையாட்களின் நிலையை நான் விளக்கியபொழுது முதலில் ராஜாஜி சற்று நம்பக்கூட இல்லை. நான் எழுதிக் கொடுத்த விவரங்களை அதிகாரிகளுடனும், சகாக்களுடனும் தீவிரமாக விசாரித்து உண்மை உணர்ந்தவுடன் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை அவசரப் பிரகடனம் செய்தார். இது ஒரு பிற்போக்குச் சம்பிரதாயவாதி செய்யும் காரியமல்ல.

மற்றும் ஓர் உதாரணம் கூறலாம். சென்னையில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை நடந்து கொண்டிருந்த காலத்தில் பஞ்சாலைத் தொழிலில் பெரும் நெருக்கடி. தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய நூற்பு ஆலையான மதுரை மில்ஸ் கதவடைப்பு செய்திருந்தது. தொழிலாளர்களைப் பட்டினி போட்டு, பணிய வைத்து, தங்கள் நிபந்தனைகளை ஏற்கும் தொழிலாளர்களை மட்டும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதென்றும் மற்ற தொழிலாளர்களைப் பழிவாங்குவது என்றும் முடிவெடுத்து மில்லைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்தது. இணையற்ற தொழிலாளர் தலைவரும், பிற்காலத்தில் தொழிற் கோர்ட்டு தீர்ப்புகளில் சர்க்கார் குறுக்கீடு செய்யக்கூடாது என்ற கொள்கையை நிலைநாட்டுவதற்காக மத்திய அரசின் தொழிலாளர் நலன் மந்திரிப் பதவியைத் துறந்தவருமான திரு வி. வி. கிரி அவர்கள் ராஜாஜி அமைச்சரவையில் தொழிலாளர் இலாகா மந்திரியாக இருந்தார். தொழிலாளர்களுடன் ஒப்பந்தமில்லாமல் ஆலையைத் திறப்பதனால், சட்டம் ஒழுங்கு இவைகளுக்குக் குந்தகம் ஏற்படும் என்று காரணம் காட்டி மில் திறப்பதற்குத் தடை உத்தரவு விதிக்கவேண்டுமென திரு கிரி அவர்கள் ராஜாஜிக்கு ஆலோசனை கூறினர். பிரிட்டிஷார் ஆட்சி நடக்கையில் பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராக இவ்விதத் தடை உத்தரவு ஒன்று பிறப்பிப்பதென்பது அக்காலத்தில் யாரும் கேட்டிராத விஷயம். ஆனல் துணிவுடன் ராஜாஜி அவர்கள் உடனடியாகத் தடை உத்தரவு பிறப்பித்து, ஆயிரக்கணக்கான ஆலை ஊழியர்களைப் பழிவாங்குவதிலிருந்தும், பட்டினி போடுவதிலிருந்தும் காப்பாற்றினர்! தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திரத்தில் இவ்வித புரட்சிகரமான செயல் மற்றொன்று இடம் பெறவில்லை.

சமுதாய சீர்திருத்தத்தின் வழிகாட்டியாகவும், கருவியாகவும் அரசு திகழவேண்டுமென்பது ராஜாஜியின் கொள்கை. ஆலயப் பிரவேசம், மதுவிலக்கு போன்ற சமுதாய முன்னேற்றத் திட்டங்களைச் சம்பிரதாயவாதிகளின் எதிர்ப்புக்கிடையே தீவிரமாக நிறைவேற்றினர். தன்னை ஒரு சமுதாயச் சீர்திருத்தப் போர் வீரனாகக் கருதினாரேயன்றி, அலங்காரமேடையில் அமர்ந்திருக்கும் சித்திரமாக எண்ணியதில்லை.

தனது சொந்த வாழ்க்கையில் கையாண்ட எளிமையையும் சிக்கனத்தையும் பொதுவாழ்விலும் கடைப்பிடித்தவர். எனவே, அவர் காலத்தில் படாடோபமான பெருந்திட்டங்கள் தீட்டப்படவில்லை. பெருந்திட்டங்களைவிட சிறுசிறு திட்டங்களுக்கே அவரது ஒப்புதல் எளிதில் கிடைத்தது. ராட்சதத் திட்டங்களில் ஏராளமாக செல்வம் வீணாக்கப்படுகின்றது, திறமை குறைகின்றது என்பதெல்லாம் அவருடைய கருத்து.

எனக்கு இன்னும் ஒரு விஷயம் பசுமையாக நினைவிருக்கிறது. 1953-ஆம் ஆண்டு சென்னை டிராம்வே கம்பெனி மூடப்பட்டவுடன், கம்பெனியின் சகல சொத்துக்களையும் 20 இலட்ச ரூபாய்க்குக் குறைவாக அரசாங்கத்துக்குக் கொடுப்பதாகக் கூறினர்கள்.

அதை ஏற்றுக் கொள்ளும்படி நான் ராஜாஜியிடம் வாதாடினேன்.

''20 லட்சமா''? என்று வியந்தார். ''நீங்கள் அமைச்சராக விருந்தால், கஜானவைக் காலி செய்து விடுவீர்கள் போலிருக்கிறது'' என்று வேடிக்கையாக ஆனல் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

ஆனல் இதே ராஜாஜி மதுவிலக்கு அமல்செய்து ஏழை எளிய மக்கள் துயர் துடைக்க வேண்டுமென்பதற்காக கலால் வருமானத்தை இழப்பதற்குத் துணிந்தார். அவரை பொருளாதார நிபுணர் என்று கூறமுடியாவிட்டாலும், ஆச்சரியப்படத்தக்க அளவுக்கு நிதி நிர்வாகத்திறன் அவரிடமிருந்தது. சென்னை சட்டசபையில் பொருளாதார மேதை திரு டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவர்கள் விற்பனை வரிக்கு எதிராகப்புரிந்தவாதத்தை முறியடித்து ராஜாஜி கொடுத்த விளக்கங்கள் வரலாற்றுப்பெருமை உடையதாகும். வரி விதிப்புக் கொள்கைகள், முறைகள் இவற்றின் நுணுக்கங்களை அவர் எடுத்துக் கூறிய முறை அவர் அறிவாற்றலுக்கு அழியாச் சான்றாகும்.

ராஜாஜி அவர்கள் மத்திய அரசின் அமைச்சராகவும், வங்கத்தின் ஆளுநராகவும், அனைத்திந்தியாவின் கவர்னர்ஜெனரலாகவும் பணியாற்றியிருக்கிறார். ஒவ்வொரு பதவியின் வழிமுறைகளையும் நேர்மையுடனும் உறுதியாகவும் ஜனநாயக அடிப்படையில் கடைப்பிடித்து வந்திருக்கிறார்.

பொதுவாக ராஜாஜி அவர்கள் பிடிவாதக்காரர், தன் வாதத்தைச் சாதிப்பவர் என்ற எண்ணம் நிலவியது உண்டு. ஆனால் அவர் சட்டசபைகளில் நல்ல கருத்தைக் கூறினால் ஏற்க மறுத்ததில்லை. தாற்காலிக பார்லிமெண்டில் குற்றத்துறை விதி முறைகள் சட்டத் திருத்தம் விவாதிக்கப்படும் பொழுது, ஓர் உயர்நீதி மன்றத்திலிருந்து வேறு உயர்நீதி மன்றத்துக்கு வழக்கை மாற்றும் அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கலாமென்ற திருத்தத்தை ராஜாஜி சற்று அவசரப்பட்டு ஒப்புக் கொண்டு விட்டார். அதற்கு நான் ஆட்சேபணை எழுப்பினேன். நீதி நிர்வாகப் பிரிவினை என்பது நமது அரசியல் சட்ட சாசனத்தில் பொறிக்கப்பட்ட லட்சியமாகவிருக்கும் பொழுது வழக்கை மாற்றும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளிப்பது கொள்கைக்கு மாறானதென்றும் அந்தப் பொறுப்பு சுப்ரீம்கோர்ட்டுக்கே உரியதென்றும் வலியுறுத்தினேன். நியாயத்தை உணர்ந்தவுடன் ராஜாஜி தன் ஒப்புதலை வாபஸ் பெற்றதுமன்றி, எதிராகவும் ஓட்டளித்தார்.

அவ்வாறே விற்பனை வரி, சென்னை சட்டசபையில் ஆய்வுக்குழுவின் பரிசீலனையிலிருந்த பொழுது, திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்த போதிலும் நியாயமாகக் கொடுத்த பல திருத்தங்களை ஏற்றுக் கொண்டார். ஜனநாயகத்தின் பண்பு கட்சிப்பாகுபாடின்றி நேர்மையான நிர்வாகம் நடத்துவது: அதேபோலக் கட்சி வேற்றுமையின்றி நியாயமான ஆலோசனைகளை ஏற்பது, இவ்விரண்டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் ராஜாஜி அவர்கள்.

பாரதத்தின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுது பாரதப் பிரதமர் நேரு அவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததோடு எடுப்பான யோசனைகள் கூறி அவருக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

ஆனால் பிரதமருடைய அதிகார எல்லைக்குட்பட்ட எவ்விஷயத்திலும் தலையிட்டதில்லை. பொதுவாகப் பிறர் தலையிடக்கூடாது என்று வற்புறுத்துபவர்கள், தாங்கள் குறுக்கிடாமல் இருக்க மாட்டார்கள். ராஜாஜி இதற்கு இலக்கணம் வகுத்தவர். சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு அறியாதவர்.

சுருங்கச் சொன்னால் ராஜாஜி ஓர் அரசியல் மேதை.


செயல் வீரர்

பற்றற்ற துறவி

வரலாற்றில் நிரந்தர இடம் பெற்ற அரிய பிறவி

இதனால்தான், காந்திஜி அவர்கள் ராஜாஜியைத் தனது மனச்சாட்சிக் காப்பாளர் (Conscience keeper) என்று கூறினர்.

நன்றி : சென்னை வானொலி நிலையம்.



பாரதத்தின் பெருமையைப் பாரெங்கும் பரப்பிய 'பாரத ரத்ன'க்கள்!

## ராஜாஜி கடைசியாகப் போட்ட கையெழுத்து!

ராஜாஜி கடைசியாகப் போட்ட கையெழுத்து அவரது 'திக்கற்ற பார்வதி'யைப் படமாக்க ஒப்புக் கொண்டு, கதையின் போக்கு மாறாமல் படமாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, போட்டதுதான்.

இந்த ஒப்புதல் கடிதத்தைத் 'திக்கற்ற பார்வதி'யின் பட டைரக்டர் சிங்கீதம் சீனிவாசராவ் பிரேம் போட்டு தனது அலுவலகத்தில், மாட்டி வைத்திருக்கிறார்.

'திக்கற்ற பார்வதி' ராஜாஜியின் ஊரான தொரப்பள்ளியில் இருபத்தேழு நாட்களில் படமாக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குடியானவனின் இரண்டு மகன்களில் இளைய வன் சோம்பேறி. திருமணமானவன். உழைப்பின் பலனை அறிய வேண்டுமென்பதற்காக அவனைத் தனிக் குடித்தனம் நடத்த அனுப்புகிறார்கள் பெற்றோர். அவன் வண்டி ஓட்டிக் கைநிறையச் சம்பாதிக்கிறான். நண்பர்கள் பலரின் கெட்ட பழக்கத்தினால் குடிக்கக் கற்றுக் கொள்கிறான். கடன் படுகிறான். கடன் கொடுத்தவனிடம் கற்பைப் பறிகொடுக்கிறாள் அவன் மனைவி — இப்படிச் செல்கிறது 'திக்கற்ற பார்வதி'யின் கதை.

(நன்றி : தினமணிகதிர்)

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. $20\frac{1}{2}$ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. $20\frac{1}{2}$ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

# ராஜாஜி —சில நினைவுகள்

—சுப்புடு

ஆங்கிலத்தில் 'Meticulous' என்பார்கள். அதன் தமிழாக்கம் பொருத்தமாகச் சொல்ல வேண்டுமானால், ராஜாஜிதான். அவருடைய நுண்ணறிவு உலகப் பிரசித்தி! ஆய்ந்தோய்ந்து பாராமல் எந்தக் காரியத்திலும் செயல்படமாட்டார்.

அவருடன் சற்றே 'தூரத்தில்' இருந்து 'நெருங்கிப்' பழக எனக்குப் பல வாய்ப்புகள் கிட்டின.

கல்கியின் 'கள்வனின் காதலி'யை நாடகமாக அரங்கேற்றத் தீர்மானித்திருந்தோம். திரு பூர்ணம் விசுவநாதன் அதை நாடகமாக்கினார். அதில் பிரதான பாத்திரமாகவும் நடித்தார். அப்போது டில்லியில் கல்வி-கலை மந்திரியாகப் பணியாற்றியவர் ராஜாஜி. அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்க மனம் உவந்து ஒப்புக் கொர்ண்டார். நாடக ஒத்திகைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. நாடகத்திற்கு இரண்டு மூன்று நாட்கள்தான் இருந்தன. அந்தச் சமயம் இந்து-முஸ்லீம் தகராறு தலையெடுத்திருந்தது. எந்த நிமிடம் அது வகுப்புக் கலவரமாக மாறுமோ என்ற அச்சம் எல்லோர் மனத்திலும் குடிகொண்டிருந்தது. ஏதோ கடவுளை நம்பி நாங்கள் எங்கள் முயற்சியை விடாப்பிடியாகக் கடைப்பிடித்து வந்தோம். நாடகம், திருச்சி நேஷனல் கல்லூரி உதவி நிதிக்காக.

நாடகத்திற்கு இரண்டே நாள் முன்பு டில்லி முஸ்லீம் பத்திரிகையான 'டான்' இதழில் ஓர் அதிர்ச்சி தரும் தலையங்கம் காரசாரமாகத் தீட்டப்பட்டிருந்தது. அத் தலையங்கத்தின் சாராம்சம் வருமாறு:

''டில்லி வாழ் தமிழர்கள் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியின் 'கள்வனின் காதலி' என்ற நாடகத்தை அரங்கேற்றப் போவதாகக் கேள்வியுறுகிறோம். மத்திய சர்க்கார் நிதி இலாகாவைச் சேர்ந்த சுப்புடு என்னும் நபர் அதை டைரக்ட் செய்வதாகவும் அறிகிறோம். வானொலியைச் சேர்ந்த பூர்ணம் விசுவநாதன் என்பவர் அதை நாடகமாக்கியுள்ளதாக

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்த வீடு (தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்ற ஊரில் உள்ளது).



வும் அறிகிறோம். இந்த நாடகத்திற்கு ராஜாஜி தலைமை தாங்கப் போகிறாராம்.


''துரதிருஷ்ட வசமாக இந்த நாடகத்தில் எங்கள் மதிப்புக்குரிய தலைவர் காயிதே ஆஜம் ஜின்னா அவர்களை நையாண்டி செய்து சில காட்சிகள் புகுத்தப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இது எவ்வளவு தவறான காரியம் என்பது நாங்கள் சொல்லத் தேவையில்லை. ஆச்சரியம் என்னவென்றால், இந்த நாடகத்திற்கு மத்திய கல்வி-கலை மந்திரி ராஜாஜி தலைமை தாங்கப்போவது தான்! இந்த நையாண்டி நாடகத்திற்கு இந்த மந்திரி தலைமை வகிக்க எப்படி ஒப்புக்கொண்டார் என்பது எங்களுக்கு வியப்பையும் வருத்தத்தையும் தருகிறது. இது தான் காங்கிரசின் கொள்கையா என்று சந்தேகிக்க இடம் தருகிறது.

''ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறோம். இரண்டு கைகள் சேர்ந்தால்தான் சத்தம். இம்மாதிரி கேலிக்கூத்துக்களில் தமிழர்கள் ஈடுபட்டால், நாங்கள் வெறுமே பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம்.''

வயதில் சிறியவர்களாகிய எங்களுக்கு இந்தத் தலையங்கம் எவ்வளவு அதிர்ச்சியையும் பயத்தையும் தந்திருக்கும் என்பதை வாசகர்களின் ஊகத்திற்கே விட்டு விடுகிறேன். ஒன்றுமே தோன்றவில்லை. அப்படியே செயலற்றுப் போய்விட்டோம். 'டான்' பத்திரிகையைக் கையிலேந்திக் கொண்டு காலை ஆறரை மணிக்கு ராஜாஜியின் இல்லத்தை நோக்கி விரைந்தேன். தலையங்கத்தை அவரிடம் சமர்ப்பித்தேன். சாவதானமாகக் கூர்ந்து படித்தார். ஏதோ சொல்ல முயற்சித்தேன். வாய் உளறியது; கை நடுங்கியது.

''ஏன் இவ்வளவு பதற்றப்படுகிறாய்? பொதுக் காரியத்தில் ஈடுபடுபவர்கள் நிதானம் இழக்கக் கூடாது. அது சரி, உன் நாடகத்தில் உண்மையாகவே இம் மாதிரி நையாண்டிக் காட்சிகளை இணைத்திருக்கிறாயா? அது ஆபத்து என்று தோன்றவில்லையா?''

''கடவுள் சத்தியமாக அப்படி ஒன்றும் செய்யவில்லை. ஆதாரத்திற்கு நாடக நகல் ஒன்று கையோடு கொண்டு வந்திருக்கிறேன். இது யாரோ எனக்கு வேண்டாதவர்கள் செய்த சூழ்ச்சி.''



**சென்னையில் உள்ள ராஜாஜி நினைவாலயம்.**

''அப்படி இல்லை என்று நீ வாக்குறுதி கொடுத்தாலே போதும். நீ கவலைப்படாமல் போய் நாடகத்தை நடத்து. இரண்டு நாள் போடுகிறாய். அல்லவா? இரண்டு நாளும் வந்திருந்து தலைமை தாங்குகிறேன். இதற்கு வேண்டிய பரிகாரத்தை நான் கவனிக்கிறேன். நீ போகலாம்.''

நான் வெளியேறிய கையோடு 'டான்' ஆசிரியர் அல்டாப் ஹுசேனை ஓர் உலுக்கு உலுக்கியிருக்கிறார் போலும்! ''ஆய்ந்தோய்ந்து பாராமல், சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்காமல் இப்படி ஒரு தவறான தலையங்கம் எழுதினது பத்திரிகை தர்மத்துக்கு விரோதமானதல்லவா?'' என்று தொலைபேசி மூலம் ஆசிரியரைக் கண்டித்திருக்கிறார் என்று பின்னர் அறிந்தேன். அடுத்த நாள் 'டான்' பத்திரிகையில் கட்டம் கட்டி மன்னிப்புத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை சட்டசபையில் மது விலக்கு மசோதா விவாதிக்கப்பட்டு வந்தது. பதனீருக்குத் தடையில்லை என்பது அம் மசோதாவில் ஒரு ஷரத்து. பதனீர் சாப்பிடலாம், கள் சாப்பிடக் கூடாது என்பது அம் மசோதாவின் அடிப்படை.

ஓர் அங்கத்தினருக்குக் கொஞ்சம் கிண்டலாகப் பேசவேண்டும் என்று தோன்றியது போலும். அல்லது சட்டசபை விவாதத்தில் லேசாகக் கொஞ்சம் நகைச்சுவையைப் புரையோடலாம் என்று தோன்றியிருக்கலாம். ஒரு கேள்வி பாணம் தொடுத்தார். 'பதனீர் சாப்பிடலாம், கள் சாப்பிடக் கூடாது என்று சொல்கிறீர்களே? ஒருவன் பதனீர் சாப்பிட்டுவிட்டு அது வயிற்றுக்குள் போனபின் சற்று நேரம், கழித்து, அது கள்ளாக மாறிவிட்டால், காவல் துறையாளர்கள் எப்படிக் கண்டு பிடிப்பார்கள்? நிரூபிப்பீர்களா?''

சபையில் லேசாகச் சிரிப்பொலி உண்டாகியது. அதையொட்டி ராஜாஜி என்ன பதில் அளிப்பார் என்ற ஆவல் முந்தியது. ஆனால் ராஜாஜியா சலசலப்புக்கு அஞ்சுபவர்? பட்டென்று பதில் வந்தது.

''ரொம்ப சுலபமாயிற்றே? பதனீர் அருந்திய பின் அங்கத்தினர் இப்போது பேசியது போல் பேசினால், பதனீர் கள்ளாக மாறி விட்டது என்று எளிதில் கண்டு பிடித்து விடலாமே!''

**(நன்றி: தினமணி கதிர்).**

# வாதியும் அவரே வக்கீலும் அவரே



ஒரு நாள் காலை சுமார் பத்து மணி இருக்கும். ராஜாஜி அவர்கள் கோர்ட்டுக்குக் கிளம்புவதற்கான நிலையில் தயாராக இருந்தார். அப்போது யாரோ ஒருவர் வாசலில் குடும்பத்தோடு வந்து நின்றார் மனைவி, குழந்தைகள், வந்தவர் காணக் கௌரவமுள்ளவராகத் தோன்றினார்.

வந்தவரை ராஜாஜி வரவேற்று என்ன காரியம் என்று வினவினார். வந்தவர், குடும்பத்துடன் பிரார்த்தனைக்குத் திருப்பதி வந்ததாகவும் பிரார்த்தனை முடிந்து திரும்பும்போது வழியில் பணப்பையைப் பறி கொடுத்து விட்டதாகவும், ஆகவே ஊருக்குச் செல்ல ராஜாஜி தான் உதவவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

வழக்கமான நிதானத்துடன் ராஜாஜி அவர்கள் உணர்ச்சி வசப்படாமல் எவ்விதப் பரபரப்புமடையாமல், ''இவ்வளவுதானே? கவலைப்படாதீர்கள். வண்டி மாலையில்தான்! நீங்கள் வேறு எங்கும் போய் அலையவேண்டாம். என் வீட்டிலேயே குளித்துச் சாப்பிட்டு விட்டு இளைப்பாறிக் கொண்டிருங்கள். இன்றைக்கு முக்கியமான கேஸ் ஒன்றுஇருக்கிறது. நான் கோர்ட்டுக்குப் போய் விட்டுப் பகல் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று கூறி அவர்களை உபசரிக்குமாறு உள்ளேயும் உத்தரவு செய்து விட்டு வெளியேறினார்.

கோர்ட்டுக்கா போனார்? அது தான் இல்லை. வந்தவரின் வார்த்தைகளில் ஏனோ அவருக்கு நம்பிக்கை விழவில்லை. எதையும் அறிவுக் கூர்மையோடு ஆராயும் ஆச்சாரியாருக்குத்தான் இந்தத் திறன் உண்டு போலும்! இனம் புரியாத சந்தேகத்துடன் தபால் நிலையத்துக்குச் சென்றார். வந்தவர் கூறியது போல் யாராவது அந்த ஊரில் இருக்கின்றார்களா, என்று கேட்டு, வந்தவர் கூறிய ஊருக்கு அவசரத் தந்தியொன்று கொடுத்தார். பதிலுக்காகக் காத்திருந்தார்.

குறித்த நேரத்தில் பதில் வந்தது, அந்தப் பெயர் கொண்டவர் அங்கு யாருமில்லை என்று! தன் சந்தேகம் வீண் போகவில்லை என்ற மனநிறைவோடு கோர்ட்டுக்குப் போனார் ராஜாஜி.

அதே நேரத்தில் இரண்டு போலீஸ் ஜவான்கள் ராஜாஜியின் வீட்டுக்குப் போனார்கள். குடும்பத்தோடு உண்டு இளைப்பாறிக் கொண்டிருந்தவரைப் போலீஸ்காரர்கள் கைது செய்தார்கள். தாம் ஆடிய நாடகம் வெற்றிகரமாக நிறைவேறியதாக எண்ணி மகிழ்ச்சியோடிருந்தவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. மோசம் செய்ய நினைத்தவரைக் கொண்டு வந்து மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நிறுத்தினார்கள். அங்கு அவரை வரவேற்க ராஜாஜியும் இருந்தார். அவர் அனுப்பித்தானே தாணாக்காரர்கள் மோசம் செய்ய நினைத்தவரை அங்கு அழைத்து வந்திருந்தார்கள்!

பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் சம்பாதிக்க முயன்றதாகக் கூறி அவர்மீது ராஜாஜி வழக்கைத் தாக்கல் செய்தார். வக்கீலின் வழக்கு, அதுவும் சாதாரணமான வக்கீலா? பிரபலமான வக்கீலாயிற்றே! உடனே வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ராஜாஜி தான் தாக்கல் செய்த வழக்கின் சாராம்சத்தைக் கோர்ட்டில் விளக்கினார். கூடி இருந்தோர் வியப்பிலாழ்ந்தார்கள். இப்படித் தாங்கள் பல தடவை பல பேர்களுக்கு உதவி செய்ததை நினைத்துத் தாங்கள் எவ்வளவு சுலபமாக ஏமாற்றப்பட்டிருப்போம் என்று நினைக்கலானார்கள். ராஜாஜியின் நுண்ணறிவையும் கூடவே முறையான நடவடிக்கை எடுத்து, மோசக்காரரைக் கோர்ட்டுக்குக் கொண்டு வந்ததையும் எண்ணிப் பாராட்டினார்கள்.

இத்தனைக்குப் பிறகுமா பொய் பேசியவர்தான் நிரபராதி என்று சொல்ல முடியும்? அதுவும் ராஜாஜியின் முன்னிலையில்! தாம் குற்றவாளிதான் என்பதை அவர் அழமாட்டாக் குறையாக ஒப்புக் கொண்டார்.

மாஜிஸ்ட்ரேட்டுக்கும் இப்படி மோசடி செய்த அந்த நபர் மீது அசாத்தியக் கோபம் ஏற்பட்டது. அந்த வேகத்தில் 'இருநூறு ரூபாய் அபராதம்'; கட்டத் தவறினால் மூன்று மாதச் சிறைவாசம்' என்று தீர்ப்பளித்தார்.

தீர்ப்பைக் கேட்டதும் கோர்ட்டுக்கு வந்திருந்த குற்றவாளியின் மனைவி 'குய்யோ முறையோ' என்று கத்தலானாள். பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

ஏமாற்ற வந்து மாட்டிக் கொண்டவரும் நிலைமை இப்படியாகுமென்று நினைக்காததால் தவித்துப் போய்விட்டார்.

''ஏதோ தெரியாமல் செய்துவிட்டேன், என்னை மன்னித்து நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று ராஜாஜியின் காலிலேயே விழுந்தார் அவர். இளகிய மனம் கொண்ட ராஜாஜியை அவர் நிலை உருக்கிவிட்டது, எழுந்திருந்தார்.

''கோர்ட்டார் அவர்களே! குற்றவாளிக்குத் தண்டனை மிகவும் கடுமை என்று எண்ணுகிறேன். கொஞ்சம் கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று வக்காலத்து வாங்கிப் பேசினார் ராஜாஜி!

வழக்குத் தொடுத்தவரே கூறும்போது நீதிபதி மறுப்பாரா? ''சரி, அபராதத் தொகையைக் கணிசமாகக் குறைக்கிறேன். ஐம்பது ரூபாயைக் கட்டச் சொல்லுங்கள்'' என்றார் நீதிபதி.

அதைக் கேட்ட வேஷக்காரர் ''ஐயோ ஐம்பதா?'' என்றார், ''அத்தனை ரூபாய் இருந்திருந்தால், நான் இந்தக் காரியம் ஏன் செய்திருக்கப் போகிறேன்?'' என்று கண்ணீர் விட்டார்.

ராஜாஜிக்கும் குற்றவாளியின் நிலைமை நியாயம் என்றேபட்டது. ஆகவே மறுபடியும் ''காருண்யம் மிக்க கோர்ட்டார் அவர்களிடம் அபராதத்தை இன்னமும் குறைக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றார் ராஜாஜி.

மாஜிஸ்ட்ரேட்டுக்கு எரிச்சலாக வந்தது. இப்படி ஒரு வழக்கைக் கொண்டுவந்து விட்டுக் குற்றவாளிக்குச் சாதகமாகவே இப்படிப் பேசும் ராஜாஜியை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நேர்மையை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பது வேறு, கருணை உள்ளத்துடன் நடந்து கொள்ளுவது வேறு என்பதைப் பாவம் அவர் உணரவில்லை.

''சரி...அபராதம் ரூபாய் பத்து. இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது'' என்று கூறி எழுந்து விட்டார் மாஜிஸ்ட்ரேட்.

நீதிபதிக்குத் தன் நன்றியைத் தெரிவித்த ராஜாஜி அபராதத் தொகை, ரூபாய் பத்தையும் தாமே கட்டி குற்றவாளியை வெளியே அழைத்து வந்தார். ஏமாற்ற வந்த நபருக்கு எப்படிப் பேசுவது, என்ன செய்வது என்றே புரியவில்லை. ஆனால் ராஜாஜி அவரை ஏதும் பேச விடவில்லை. அவரையும் குடும்பத்தினரையும் மறுபடி தம் வீட்டிற்கே அழைத்துப் போய் உபசரித்து இம்மாதிரியான காரியங்களில் இனியும் இறங்க வேண்டாமென்று உபதேசம் செய்து, உண்மையில் அவர் போக வேண்டிய ஊருக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்துக் கைச் செலவுக்கும் அளித்து அனுப்பி வைத்தார்.

**—(கௌசிகன் எழுதிய ராஜாஜி என்னும் நூலிலிருந்து)**



## ராஜாஜியின் சொல்லாற்றல்!

ராஜாஜி அவர்கள் சென்னையில் முதலமைச்சராக இருந்தபோது சட்டசபையில் இரண்டு முக்கியச் சட்டங்களைக் கொண்டு வந்தார். ஒன்று, மதுவிலக்குச் சட்டம்; மற்றொன்று விற்பனை வரிச் சட்டம். சட்டம் கொண்டு வருவதற்கு முதல் நாளே பொதுமக்களை அணுகி, அந்தச் சட்டத்தைப் பற்றி விளக்கமாகப் பேசிவிட்டு வருவது அவர் வழக்கமாயிருந்தது.

மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வருமுன் ராயபுரம் 'ராபின்சன்' பார்க்கில் பொதுக் கூட்டம் நடந்தது. திரு. சி. பி. சுப்பையா அதற்குத் தலைமை தாங்கினார். ராஜாஜி பேசினார்:

"முதலில் சேலத்தில் ஏன் மதுவிலக்கைக் கொண்டு வருகிறேன் என்று என்னைப் பலர் கேட்கிறார்கள். சேலம் என் சொந்த ஜில்லா என்பதற்காக அல்ல. சுடச் சுடத் தட்டு நிறையக் கூழ் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறவர்கள் முதலில் ஓரத்தில்தான் விரலால் தடவி எடுத்துச் சாப்பிடுவார்கள். நடுவில் தொட்டால் கையைச் சுட்டுவிடும். அது போல மதுவிலக்கை அமல் படுத்தும் போதும் உஷாராக இருக்க வேண்டும், ஓரத்திலிருந்துதான் மத்தியப் பகுதிக்கு வரவேண்டும். சேலம் ஜில்லா ஓரப்பகுதி. ஆகவே, அங்கே முதலில் கை வைத்திருக்கிறேன்."


"விற்பனை வரி பற்றி வியாபாரிகள் பயப்பட வேண்டாம்; அதைக் கொடுக்கப் போகிறவர்கள் வாங்குகிறவர்கள்தான்!" என்பதை விளக்குவதற்காக அன்று அவர் கொத்தவால் சாவடிக் கூட்டத்தில் பேசிய பேச்சு என்றும் மறக்க முடியாத ஒன்று.



கடைசியாக, 1962-ல் அணுகுண்டு சோதனையை நிறுத்த வேண்டும் என்பதற்காக அமெரிக்காவுக்குச் சென்று, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் கென்னடியைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தாரே, அப்போது நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "போன காரியம் என்ன ஆயிற்று? காயா, பழமா?" என்று கேட்ட போது, "*If you can coin a new word, you may say not fruitful, but flowerful. The flower may become fruit later on*" என்று கூறினாரே, அவரைத் தவிர அப்படி வேறு யாரால் கூறமுடியும்?

நன்றி: தினமணிகதிர்

# ராஜாஜி பாட்டு



நாம், பெரியவர்கள் யாரையாவது சந்திக்கச் செல்லும் பொழுது கையில் மாலையுடனோ அல்லது பழங்களுடனோ போவது வழக்கமல்லவா?

ஆனால், கவிதையை யாரேனும் எடுத்துப் போவார்களா?

அமரகவி பாரதியாரின் மகள் திருமதி. சகுந்தலா பாரதி அவர்கள், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் ஏதேனும் கவிதை ஒன்றை எழுதிக் கொண்டு போவாராம்.

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்பது போலக் கவிச்சக்கரவர்த்தி பாரதியின் மகளும் கவிதை எழுதுவார், பாடுவார்.

சில சமயங்களில் தந்தை பாரதியும், மகள் சகுந்தலாவும் சேர்ந்தே கவிதை கட்டுவார்களாம். அப்படிப் பாடிய ஒரு பாடல்தான்: 'காலைப் பொழுது'.

தேசியக் கவிஞன் பாரதியின் பாடல்களைப் படிக்கும்போதே வீரம் பொங்கி எழுகிறதே, அதை அவரே பாடக் கேட்டால் எப்படி இருக்கும்?

திருமதி. சகுந்தலா பாரதி அவர்கள் தம் தந்தையின் பாடல்களைக் கணீரென்று பாடுகிறார். அங்கே பாரதியே நேரில் வந்து பாடுவதுபோல இருக்கிறது! ஆம். நம் எதிரே காட்சி தரும் கம்பீரமான பாரதியின் திருவுருவம் நம் முன்னே பாடுவது போன்ற ஒரு பிரமை ஏற்படுகிறது.

அப்பா வைத்து விட்டுப் போன சொத்து, அருந்தமிழ்ப் பாடல்கள் அன்றோ? அன்னைத் தமிழுக்கு அவர் உருவாக்கிய அணிகலன்கள் அன்றோ? அந்த அரிய சொத்தை—அழகிய அணிகலன்களை எப்படி யெல்லாம் பாதுகாத்து வைத்திருக்கிறார் அவரது அருமை மகளார்!

நாளையத் தலைமுறைக்கு இவை பயன்பட வேண்டும் என்ற மேலான கருத்தில், அவற்றையெல்லாம் கண்மணிபோல் காத்து வந்திருக்கிறார் திருமதி. சகுந்தலா பாரதி அவர்கள். இன்று அவர் நம்மிடையே இல்லை. ஆனால் அவர் எழுதிய எண்ணற்ற பாடல்களிலே ஒன்று—அதுவும் திரு. இராஜாஜி அவர்களைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று நம் சிந்தைக்கு விருந்தாய் விளங்குகின்றது.

ஒரு சமயம் இவர் திரு. இராஜாஜி அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தாராம். அப்போது இவர் வழக்கம் போல ஒரு கவிதையை எழுதிக் கொண்டு வந்திருந்தாராம். கவிதையை திரு. இராஜாஜி அவர்களிடம் கொடுத்தாராம். அந்தக் கவிதையை திரு. இராஜாஜி அவர்கள் படித்து விட்டுப் பெரிதும் மகிழ்ந்து, திருமதி. சகுந்தலா பாரதி அவர்களை வெகுவாகப் பாராட்டினாராம். அந்தக் கவிதையின் தலைப்பு என்ன தெரியுமா? 'ராஜாஜி'. இதோ அந்தப் பாடல்:

கண்ணன் காட்டும் வழியை நமக்குக்
காட்டுகின்ற ராஜாஜி
திண்ணமுடைய நெஞ்சில் உண்மை
தெய்வம் கண்ட ராஜாஜி.

வேதமுனிவர் விரித்துரைத்த
வேதாந்தத்தின் தத்துவத்தை
ஓதியுணர்ந்து உலகோர் உய்ய
உறுவழி காட்டும் இராஜாஜி.

வழவழப் பேச்சும் வஞ்சக எண்ணமும்
வாழும் வழியை விட்டகல
அழஅழப்பேசி ஆறுதல் அளிக்கும்
ஆற்றல் படைத்த ராஜாஜி.

அருகில் நெருங்கிப் பழகுவதில்லை
அன்புமொழிகள் பேசுவதில்லை
தொலைவில் தெரியும் சூரியனைப் போல்
தோற்றமளிக்கும் ராஜாஜி.

—பேட்டி: பி. வி. கிரி.

# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
# காஞ்சிபுரம் பட்டுச் சேலை
# தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.




பண்டைச் சிறப்பும் நவீன நளினமும் இணைந்து திகழ்வது வண்ணத்துப்பூச்சி

# அவர் கையாண்ட யுக்தி

**1927**-ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தென்னகத்துக்கு வந்திருந்தார். மைசூர் மகாராஜாவின் விருந்தாளியாக 'குமார பார்க்'கில் தங்கி இருந்தார். ராஜாஜியும் காந்தியுடன் சென்றிருந்தார்.

காந்திஜியைச் சந்திப்பதற்கு ஏராளமானவர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நேரமும் காலமும் வரையறுக்கப்பட்டிருந்தன. இப்படி முன் ஏற்பாடு இல்லாதவர்களால் காந்திஜியைக் காண முடியாது. அதற்கெல்லாம் இப்படி ஏற்பாடு செய்தவர் ராஜாஜிதான். காரணம், காந்திஜி ரத்தக் கொதிப்பு நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அதிர்ச்சியான பேச்சு, சம்பவம் எதுவும் ஏற்படக்கூடாது என்பது டாக்டர்களின் உத்தரவு. அதனால்தான் பேட்டியாளர்களைக் கண்காணித்துக் கணக்காக காந்திஜியிடம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள், இரவு 8-30-லிருந்து 9 மணி வரை ஒரு பெரியவருக்குக் காந்திஜியுடன் பேட்டிக்கு நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரும் அந்த நேரத்தில் தயாராகக் காத்திருந்தார். ராஜாஜி அவரை 8-30 மணிக்கு காந்திஜியின் அறைக்குள் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தார். பத்து நிமிஷங்கள் ஆகி இருக்கும். உள்ளே பேச்சுக் குரல் பலமாயிற்று. விவாதம் சூடாக இருக்கும் என்று பட்டது. வாக்குவாதம் காரசாரமாக இருப்பதை வெளியிலிருந்தவர்கள் உணரலானார்கள். காந்திஜியின் உடல் நிலைக்கு இம்மாதிரி ஒரு சூழ்நிலை நல்லதல்ல. வெளியிலிருந்தவர்கள் தவித்தார்கள். உள்ளே சென்று அந்தப் பெரியவரை வெளியே இழுத்து வருவது நாகரிகமல்ல. அவருக்கு பேட்டி நேரம் 30 நிமிஷங்கள். இன்னும் 20 நிமிஷங்கள் இதே ரீதியில் போகுமானால் என்ன ஆகுமோ என்று காந்தி அன்பர்கள் தவிக்கலானார்கள். தவித்தவர்களில் ராஜாஜியும் இருந்தார்.

திடீரென்று 'குமாரபார்க்'கில் விளக்குகள் எல்லாம் அணைந்தன. ஒரு வினாடிதான். சட்டென்று மறுபடி எரியத் தொடங்கின. எல்லோரும் தங்கள் தங்கள் கைக் கடிகாரங்களைப் பார்த்துக் கொண்டார்கள். சுவரில் மாட்டியிருந்த கடிகாரங்களையும் பார்த்தார்கள். எல்லாவற்றிலும் மணி 8-45தான்! ராஜாஜியும் கூடத் தம் பாக்கெட் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். பிறகு பரபரப்புடன் காந்திஜியின் அறைக்குள் புகுந்தார்.

மின்சார விளக்குகள் இரவு ஒரு விநாடி அணைந்து மறுபடி எரிந்தால் அப்போது மணி ஒன்பது என்பதை மைசூரிலுள்ள அனைவரும் அறிவர். சில ஊர்களில் நேரத்தை அறிவிக்கச் சங்குகளும், ஆலய மணிகளும், பீரங்கி முழக்கங்களும் இருப்பதைப்போல் மைசூரில் மணி ஒன்பது என்பதை அறிவிப்பதற்காக விளக்குகள் இரவு நேரத்தில் ஒரு விநாடி அணைந்து எரியும் ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். உள்ளே சென்ற ராஜாஜி காந்திஜியுடன் பெரியவருக்கான சந்திப்பு, நேரம் முடிந்து விட்டது என்று கூறி, அவரை வெளியே அழைத்து வந்து ரொம்ப மரியாதையுடன் அவரை அனுப்பியும் வைத்தார். அந்தப் பெரியவர் சென்ற கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வழக்கப்படியான விளக்கணைப்பு மறுபடி நடந்தது. அப்போதுதான் மைசூர் நகரில் உண்மையாக மணி ஒன்பது! ஆனால் 'குமாரபார்க்'கில் மட்டும் பதினைந்து நிமிஷங்களுக்கு முன்பே மணி ஒன்பதாகிவிட்டதே, அது எப்படி?

காந்திஜியின் அறைக்குள் வாக்குவாதங்களைக் கேட்டதும் ராஜாஜியின் வலக்கை அந்த மாளிகைகளின் மின்சார மெயினை இயக்கி, மணி ஒன்பதாகச் செய்தது என்பதை நாம் விளக்கவா வேண்டும்?

**—(கௌசிகன் எழுதிய 'ராஜாஜி' என்னும் நூலிலிருந்து.)**

## சென்னையில் காந்தி மண்டபம் பிறந்த கதை...

**கா**ந்தி அஸ்தி மற்றப் பகுதிகளுக்குக் கிடைத்தது போல தமிழ்நாட்டுக்கும் கிடைத்தது. அப்பொழுது முதல் அமைச்சராயிருந்த ஓமந்தூரார் அதை வாங்கி வந்து தன் வீட்டிலேயே வைத்துப் பூஜை செய்து வந்தார்.


அதை வைத்து ஒரு ஞாபகச் சின்னம் எழுப்ப வேண்டுமென்பது அவர் ஆசை. அதை நிறைவேற்ற அப்போதைய முதலமைச்சர் குமாரசாமி ராஜா முன் வந்தார்.

இடம் வேண்டுமே '...

பல்கலைக் கழகத்துக்கு எதிரே அமைப்பது என முடிவு செய்தனர். அதற்கான நிலமும் ஒதுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு ராஜாஜி அவர்களின் யோசனைப்படி அந்த ஞாபகச்சின்னம் கிண்டி ராஜ்பவன் தோட்டத்தில் கட்டுவது என்று தீர்மானம் ஆயிற்று. அதன்படி அமைதி தவழும் அந்த இடத்தில்தான் இப்பொழுது காந்தி நினைவு மண்டபம், காந்தியின் அஸ்தியை வைத்து எழும்பி இருக்கிறது.

—'கல்கி' இதழ் தலையங்கம்,
1949—அக்—2








# படமும் செய்தியும்


▲ 'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனார் அவர்களின் நினைவு நாள் விழா 18-11-'76 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், வ. உ. சிதம்பரனாரின் மகனார் திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் உள்துறைச் செயலாளர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் வ. உ. சி. அவர்களின் திருவுருவம் எழுதப்பெற்ற படத்தைத் திறந்து வைத்தார்.

▶ ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தலைமைத் தூதர் திரு. டெய்ட்ரிச் வென்ஸ்லாப் அவர்கள், வெள்ளத் துயர்த் துடைப்பு நிதிக்காக ரூபாய் 36,001-க்கான காசோலையைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களிடம் 3-12-'76 அன்று வழங்கினார்.






தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 2-12-'76 அன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் அவர்களுக்குச் சேலை, வேட்டி முதலியவற்றை ஆளுநர் அவர்கள் வழங்கினர்.




சென்னை ராஜாஜி அரங்கில் 2-12-'76 அன்று நடைபெற்ற நகரப் பெருமக்கள் சிறப்புக் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால்சுகாதியா அவர்கள், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் வெள்ளத்துயர் துடைப்புப் பணிகளைப் பற்றி விளக்கி உரையாற்றினர்.



இந்தியாவில் உள்ள 'ஐ. சி ஐ' கம்பெனிகளின் சார்பாக, வெள்ளத்துயர்த் துடைப்பு நிதியாக ரூபாய் 1.5 இலட்சத்திற்கான காசோலையைத் திருவாளர்கள் வி. எஸ். வாசுதேவன், ஜே. எப். மாதன், கே. வி. சாரி ஆகியோர் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களிடம் 4-12-'76 அன்று அளித்தனர்.





சென்னையை அச்சுறுத்திய செம்பரம்பாக்கம் ஏரியின் கரை 5 மைல் 4 பர்லாங் நீளம் உடையது. இந்த ஏரியின் நீர்பிடி பரப்பு 29.28 சதுர மைல். இதனால் பாசனம் பெறும் ஆயக்கட்டின் பரப்பு 13,222.98 ஏக்கர்.

எதிர்பாராத நிலையில் வெள்ளத்தால் நிரம்பிய செம்பரம்பாக்கம் ஏரியைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 5-12-'76 அன்று பார்வையிட்டார்.



செம்பரம்பாக்கம் ஏரியின் கரையை வலுப்படுத்துவதற்காக லாரிகளில் மண் கொண்டு வந்து குவிக்கப்படுகிறது. குவிக்கப்பட்ட மண்ணை புல்டோசர் மூலம் நிரவியும் அழுத்தியும் கரைக்கு வலுவூட்டப்படுகிறது.




சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லாட்டிகா டி. படால்கர் அவர்களிடம், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கொடிநாள் நிதி வழங்கினார்.



1976-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற அரிசன-ஆதிவாசி மாணவர்களில் மிக அதிக மதிப்பெண் பெற்ற மாணவர் திரு. சி. செழியன், மாணவி செல்வி சி. சத்தியபாமா ஆகியவர்களுக்கு சென்னை நகர மக்களின் கல்வி, சமுதாய, கலாச்சார சங்கத்தின் சார்பாக அளிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஓம்மேத்தா அவர்கள் 5-12-'76 அன்று வழங்கினர்.





செம்பரம்பாக்கம் ஏரிக்கரையில் 400 அடி நீளத்திற்கு 10 அடி ஆழத்திற்கு வெடிப்பு ஏற்பட்டதால் கரை உடைந்து விடுமோ என்று அப்பகுதி மக்கள் பயந்தனர். அப்பகுதியைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 5-12-'76 அன்று பார்வையிட்டார். கரையில் ஏற்பட்ட வெடிப்பில் மணல், கிராவல், சிமெண்ட் ஆகியவற்றைக் கலந்து போட்டு கரைக்கு வலுவூட்டப்படுவதைப் பொதுப்பணித்துறையின் நீர்ப்பாசனப் பிரிவுத் தலைமைப் பொறியாளர் திரு. பி. கே. வேதநாயகம் அவர்கள், ஆளுநர் ஆலோசகருக்கு எடுத்துரைத்தார்.




▲ தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி நடைபெறுவதால், தமிழ்நாட்டிற்குரிய சட்டங்களை உருவாக்கும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் மூன்றாவது கூட்டம் 7-12-'76 அன்று மதுரையில், மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மத்திய அரசின் உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஓம்மேத்தா அவர்களும் கலந்து கொண்டார்.

கடந்த நவம்பர் 23, 24, 25 தேதிகளில் பெய்த வரலாறு காணாத பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சென்னை மாநகரிலும், செங்கை மாவட்டத்திலும் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்கு வருகை தந்த மத்திய அரசின் ஆய்வுக் குழுவினருடன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் மற்றும் தமிழ்நாடு அரசின்உயர் அலுவலர்களும் 9-12-'76 அன்று, தலைமைச் செயலகத்தில் வெள்ளச்சேதம், அரசு மேற்கொண்ட துயர்துடைப்புப் பணிகள் ஆகியவற்றை எடுத்துரைத்து மத்திய அரசின் நிதி உதவி வேண்டினர். ▼









**மீ. ப. சோமசுந்தரம்**

(சென்னை வானொலி)


**தே**ச பக்தரும் காந்தீயவாதியுமான கல்கி அவர்கள் அரசியலும் இலக்கியமும் இரண்டும் இணைந்து கலந்த எழுத்தாளராக விளங்கினார்.

*9-9-1899*-ல் தஞ்சாவூர் மாவட்டம், புத்தமங்கலம் என்ற சிற்றூரில் ஒரு கிராமக் கர்ணத்துக்கு மகனாகப் பிறந்து தமது எழுத்தாற்றல் ஒன்றினாலேயே மிகப் பெரிய உன்னத நிலைகளை அடைந்தார். அந்த எழுத்தாற்றல் பல ஸ்தாயிகளில் சஞ்சரித்த போதிலும் அவருடைய வாழ்க்கைப் பாடலின் ஆதார சுருதி தேசீயமும் காந்தீயமுமேயாகும். *1921*இல் திருச்சி தேசீயக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே காந்தீய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈர்க்கப்பட்டுக் கரூரிலே சிறை செய்யப்பட்டார். பிற்கால வாழ்விலும் மேலும் இரண்டு முறைகள் சிறை புகுந்தார்.

பத்திரிகை எழுத்தாளராக அவர் முதன்முதல் சேர்ந்தது திரு. வி. க. அவர்களின் 'நவசக்தி'யிலே தான். பிறகு மதுவிலக்குப் பிரச்சாரத்துக்கென்றே ராஜாஜி நடத்தி வந்த 'விமோசனம்' என்னும் பத்திரிகையில் சேர்ந்து ராஜாஜியிடமே பயிற்சி பெறும் பேறு அவருக்குக் கிட்டியது. இந்த இரண்டு பத்திரிகைகளிலும் தாம் பெற்ற பயிற்சியின் நினைவுகளை அவர் எப்போதும் நன்றியுணர்ச்சியோடு போற்றி வந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு வாசன் அவர்கள் நடத்திய ஆனந்தவிகடனில் சேர்ந்து தமது சலியாத ஊக்கத்தாலும், ஏராளமான எழுத்தாலும் அந்தப் பத்திரிகையை இந்தியாவிலேயே மிகுந்த வாசகர்கள் கொண்ட வார இதழ்களில் ஒன்றாக வளர்த்துவிட்டார். அவருடைய தலையங்கங்களை மக்கள் வேட்கையோடு படித்தார்கள். ஏனென்றால் அவர் எந்த அரசியல் சிக்கல்களையும் தகைமையோடும் தெளிவோடும் ஆராய்ந்து அம்பு பாய்வதுபோல் நெஞ்சுக்குள் செல்கிற நேரான தமிழ்நடையில் எழுதினார். அந்தப் பத்திரிகை அத்தனை ஆதரவு பெற்றதற்கு முக்கிய காரணம் கல்கியின் நகைச்சுவையே! எல்லாருக்கும் வியப்பூட்டிய ஒரு விஷயம் என்னவென்றால், எத்தனை பயங்கரமான அரசியல் தத்துவங்களையும் புன்முறுவலோடு அணுகி, அகில உலகச் சமுதாயப் பொருளாதாரச் சிக்கல்களையெல்லாம் எளிமையோடும் அழகோடும் விளக்கினார் கல்கி அவர்கள்! அதோடு நிற்கவில்லை அவர் தொண்டு. அவருடைய எழுதுகோலானது சாதிப் பூசல்களையும் பிரிவினைச் சக்திகளையும் எதிர்த்துப் போராடி, பாரத ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் அரண் செய்தது; நமது விடுதலைப் போரில் இவ்வாறு அவர் செய்த சேவையானது, ஆற்றல் மிகுந்த பேராசிரியர் ஒருவர் தமது எழுத்தின் மூலம் பொது மக்களுடைய கருத்துக்களை உருவாக்குவதிலும் நாட்டு நடவடிக்கைகளில் சாமானிய மக்களும் பங்குகொள்ளும்படி செய்வதிலும் எத்தகைய அரிய சாதனைகளைப் புரிய முடியும் என்பதை எடுத்துக் காட்டியது. இந்த அரிய சேவையில் கல்கி தமது அரசியல் குருவான ராஜாஜியின் வழியில் நின்று தொண்டாற்றினார். கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் ரசிகமணி டி. கே. சி. யின் கொள்கைகளை உறுதியோடு கடைப்பிடித்தார்.

கல்கியின் பெருமை அவருடைய பல்கலை ஆற்றலாகும். சிறுகதை, நாவல், விமரிசனம், நகைச்சுவைக் கட்டுரை, கவிதை, அரசியல் எழுத்து, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற எழுத்துப் பொறுப்பு ஆகிய அத்தனை வகையிலும் அவர் தமது திறமையை நிலைநாட்டினார். அவருடைய காலத்தில் அவர் பங்குகொள்ளாத, பங்கு கொண்டு வேகம் பெறாத எந்த அரசியல் அல்லது சமுதாயப் போராட்டமும் இருந்ததில்லை. எட்டையபுரம் பாரதி மண்டபம், கிண்டி காந்தி மண்டபம் போன்ற பல நினைவாலயங்களை நிறுவுவதற்கு அவர் பொறுப்பாக இருந்தார். அதோடு பல இலக்கிய ஆசிரியர்களுக்கும், தியாகிகளுக்கும் நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறார். எத்தனையோ எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் கண்டு பிடித்து ஊக்கமூட்டிப் பிரபலப்படுத்தியிருக்கிறார். எல்லாம் அவருடைய எழுதுகோலின் ஆற்றல்! 1941இல் ஆனந்த விகடனைப் பிரிந்து தமது தோழர் சதாசிவத்தின் ஒத்துழைப்புடன் சொந்தப் பத்திரிகை தொடங்கியபோது அவருடைய புனைபெயர் வீடுமனைகளில் எல்லாம் வழங்கிய ஒரு குடும்பப் பெயராகவே விளங்கியதால், சில மாதங்களிலேயே அந்தப் பத்திரிகை ஒரு பெரிய சக்தியாக வளர்ந்து துலங்கியது. இத்தனை பெரிய இமாலய சாதனைகளைக் கல்கி புரிய முடிந்ததற்குக் காரணம், அவர் ஒரு எழுத்தாளர் என்பது மட்டும் அல்ல, அவர் ஒரு பத்திரிகைக் குறிப்பாளராகவும் இருந்ததுதான். ஒரு பத்திரிகை ஆசிரியரின் வெற்றிக்கு அந்த ஆசிரியரின் கற்பனை எழுத்துக்களோடு கூட அவர் மற்றத் துறைகளில் தக்க குறிப்புகள் எழுதும் ஆற்றல் உடையவராகவும் இருக்க வேண்டும் அல்லவா? கல்கியிலும் இரட்டை ஆற்றல் வளமாக இருந்தது. எனவே அவர் எதை எழுதினாலும் வெளியிட்டாலும் மக்களிடம் அது எடுபட்டது.

கல்கிக்குத் தமிழ்மொழிமீதும் தமிழர் கலைகளின்மீதும் மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்த ஈடுபாட்டை அப்படியே வாசகர்கள் உள்ளத்திலும் உண்டாக்கி விடுவார். தமிழுக்கோ தமிழ்க் கலைகளுக்கோ ஏதேனும் இழுக்கு ஏற்பட்ட போதெல்லாம் தமது பேனா முனையிலே வீரத்தோடு போர் தொடுத்தார். எனினும் அவர் குறுகிய மனப்பான்மை கொண்டவர் அல்ல. தமிழ் இசையின் மறுமலர்ச்சியிலும், தமிழ் பாடமொழியாக இடம்பெறுவதிலும், இதுபோன்ற பிற கிளர்ச்சிகளிலும் அவர் முழு மூச்சோடு போரிட்ட போதிலும், தமது மொழிப்பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் தம்முடைய பாரததேசப் பற்றை, அந்த ஐக்கிய சிந்தனையை அமுக்கும்படி அவர் விட்டதில்லை. தேசிய ஒருமைப்பாடும் காந்தீய பக்தியுமே அவர் எழுத்துக்கள் அனைத்திலும் பிரதிபலித்தன. விடுதலை வீரர்களை நாயகர்களாகக் கொண்ட சிறுகதைகள் தவிர அத்தகைய தேசிய நெடுங்கதைகளும் அவர் எழுதி வழங்கினார். ''தியாக பூமி'' பலரும் விரும்பிப் படித்த அத்தகு நாவல்களில் ஒன்று. இது திரைப்படமாகவும் ஓடியது. இது போலவே தான் சாகித்திய அகாதமியின் விருதுபெற்ற அவருடைய ''அலை ஓசை'' என்ற நவீனமும். விடுதலைப் போரின் வீர நிகழ்ச்சிகள் இந்தக் கதைக்கு விறுவிறுப்புத் தந்து, காந்தீய சித்தாந்தம் கதையின் ஆழத்திலே சுழித்து ஓடுகிறது. இவைதவிர மகாத்மாவின் வரலாறும், சத்தியசோதனை மொழிபெயர்ப்பும் அவர் எழுதியுள்ள தேசிய நூல்களில் முக்கியமானவை.

கல்கியின் தனிப்பண்பு அவருடைய இனிய எளிய தமிழ்நடை. பழமையான கரடுமுரடுச் சொற்களை நீக்கினார். அதேசமயம் புதுமை என்ற பெயரில் வெளிநாட்டு வாடை வீசுகிற மயக்க நடையையும் புறக்கணித்தார். அவருடைய கையிலே பேச்சுத் தமிழானது இலக்கிய வல்லமை பெற்று ஆழமும் விசாலமும், ஒலியும் ஓட்டமும், ஒளியும் நிழலும் பெற்றுத் திகழ்ந்தது. அவர் தமது மனக் கண்ணுக்கு முன்னால் சாமானிய வாசக நேயரையே நிறுத்திக்கொண்டு எழுதினார். எனவே எல்லாருக்கும் புரியும்படி எழுதவேண்டும் என்பது அவருடைய அடிப்படை நோக்கம். கற்பனைத்திறம் மிகுந்த கலைஞராக அவர் இருந்த காரணத்தினால், பேச்சுத் தமிழ் அவர் எழுதுகோலிலே கலைத் தமிழாகவும் மிளிர்ந்து பண்டிதரையும், பாமரரையும் கவர்ந்தது.

கல்கியின் சாதனைகளை இன்று எண்ணிப்பார்த்தால் வியப்பு மேலிடுகிறது. ஒவ்வொரு கோணத்திலும் ஒரொரு வர்ணக் கோலத்தைக் காட்டுகிற ஓவியக் கண்ணாடியைப்போல பல்துறைக் கலைஞராக அவர் விளங்கினார். பீரங்கி நெருப்பைக் கக்கும் அரசியல் தலையங்கங்கள், இளம் எழுத்தாளருக்கும் கலைஞருக்கும் தெம்பு ஊட்டுகிற வைடமின் மதிப்புரைகள், மேனி அலுங்காமல் வானவெளியிலே நம்மை அழைத்துச் செல்லும் பிரயாணக் கட்டுரைகள், ஆடல் பாடல் குறிப்புகளிலிருந்து கச்சேரியை நேரிலே கேட்பதுபோல் அனுபவம் தருகிற விமரிசனங்கள், புகைப்படம் பிடித்தாற்போல நம் கண்முன் சொற்படமாகச் சுழலும் விழா வர்ணனைகள் என்று அவர் எல்லாத் துறைகளிலும் ஒளிவீசிப் பிரகாசித்தார்.

1954-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதிதான் பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமிழுலகை வெறிச்சோடவிட்டு இவ்வுலகிலிருந்து மறைந்தார்.

கடைசி மூச்சுவரை தமிழ் இலக்கிய வானிலே ஒரு முழு நிலாவாகவே தேய்பிறையில்லாமல், கல்கி ஒளி வீசினார். முழு மதியாகவே வானிலே எழுந்தார். மறையும்போதும் முழுமதியாகவே மறைந்தார். எனவே நம் நினைவில் அவர் முழுமதியாகவே எப்போதும் வாழ்ந்து வருகிறார். *





# பித்தளை ஒட்டியாணம்

## கல்கி

தங்கம்மாள் நடு நிசியில் திடுக்கென்று கண் விழித்துக் கொண்டாள். கதவு திறக்கும் ஓசையைப் போல் கேட்டது. படுத்தபடியே நிமிர்ந்து பார்த்தாள். சௌந்தரம் கதவைத் திறந்து கொண்டிருந்தான். வெளியே சென்று மெதுவாய்க் கதவைச் சாத்தினான்.

மாடிப் படிகளில் அவன் இறங்கிச் செல்லும் சத்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் அவன் கீழே ஆபீஸ் அறையைத் திறந்தான்; உள்ளே போய் விளக்குப் போட்டுக் கொண்டான்.

தங்கத்துக்கு இருதயம் பதை பதைத்துக் கொண்டிருந்தது. 'இந்தப் பாதி நிசியில், இவர் எங்கே எதற்காக இறங்கிப் போகிறார்? ஆபீஸ் அறையில் இப்போது என்ன செய்கிறார்? இவ்வளவு இரகசியம் என்ன? நான் எழுந்திருக்கக் கூடாது என்பதற்காகத் தானே ஓசைப்படாமல் அவ்வளவு ஜாக்கிரதையாய்க் கதவைத் திறந்துகொண்டு நிதானமாய் நடந்து போனார்? இதெல்லாம் எதற்காக? என்னிடம் என்னத்தை ஒளிப்பதற்கு முயல்கிறார்?

சென்ற ஐந்தாறு நாட்களாகவே சௌந்தரம் ஒரு மாதிரியாயிருப்பது பற்றித் தங்கத்தின் உள்ளம் ரொம்பவும் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தது. அவர் பழைய மனுஷராகவே இல்லை; அடியோடு மாறிப் போய்விட்டார். எப்போதும் சிரிப்பும் விளையாட்டுமாயிருப்பவருடைய முகத்தில் ஐந்தாறு நாளாய் மலர்ச்சி என்பதையே காணவில்லை. சுய ஞாபகமே கிடையாது. என்ன சாப்பிடுகிறோம், என்ன பேசுகிறோம் என்பது கூட நினைவிருப்பதில்லை. இராத்திரியில் சரியாகத் தூங்குவதுமில்லை. புரளுகிறார்; பிதற்றுகிறார். தூங்கும்போது உடம்பு திடீரென்று நடுங்குகிறது. கேட்டால் சொல்ல மாட்டேனென்கிறார். 'ஒன்றுமேயில்லை' என்று சாதிக்கிறார். பொய், பொய், பொய்! ஒன்றுமேயில்லாததற்கா இவ்வளவு கவலை? இவ்வளவு குழப்பம்? இவ்வளவு மெய்ம் மறதி?

என்னமோ சமாசாரம் இருக்கிறது, சந்தேகமில்லை. அது என்னவாயிருக்கும்? தங்கம் போன மாதத்தில் பார்த்திருந்த ஒரு 'தமிழ் டாக்கி' ஞாபகம் வந்தது. அதில் கதாநாயகன் ஒரு தாசியின் மோக வலையில் வீழ்ந்து விடுகிறான். அது முதல் அவனுடைய நடை உடை பாவனைகளில் மாறுதல் ஏற்பட்டுவிடுகிறது. அடிக்கடி மெய்ம்மறதி உண்டாகிறது. மனைவியிடம் 'ஒன்றுமில்லை' என்றுதான் அவனும் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

**'கல்கி' அவர்களால் எழுதப்பெற்று 'ஆனந்தவிகடன்' 21-7-1940 தேதிய இதழில் வெளியாகிய கதை.**

அப்படி ஏதாவது இருக்குமோ என்று தங்கம் ஒரு நிமிஷம் எண்ணியபோது, அவளுக்கு உயிரே போய்விடும் போலிருந்தது. ''சீச்சீ! ஒரு நாளுமிராது! பத்து நாளைக்கு முன்புதானே அவர் என்னிடம் வைத்திருக்கும் அளவிலாத அன்பை ருசுப்படுத்தினார்? தங்க ஒட்டியாணம் போட்டுக் கொள்ள எனக்கு என்ன யோக்யதை இருக்கிறது? இத்தனை நாளும் எனக்குத் தெரியாமல் பணம் சேர்த்து வைத்திருந்து, பிறந்த நாள் பரிசாக அளித்தாரே'' என்று எண்ணி, ஒரு நாளும் அவர் தனக்கு துரோகம் செய்ய மாட்டார் என்று தீர்மானித்தாள். ஆனால் வேறு என்ன தான் இருக்கும்?

ஆபீஸ் அறையில் அவர் என்ன செய்கிறார் என்று பார்க்க அவளுக்கு ஆவல் உண்டாயிற்று. எப்படியும் இன்று ராத்திரி உண்மையைத் தெரிந்து கொண்டுவிட வேண்டும். மனதில் இந்தப் பாரத்துடன் இனிமேல் தூங்க முடியாது.

தங்கம், எழுந்திருந்தாள். அடி மேல் அடி வைத்துக் கீழே இறங்கிச் சென்றாள். ஜன்னல் வழியாக ஆபீஸ் அறைக்குள் பார்த்தாள். சௌந்தரம், மேஜை மேல் காகிதம் வைத்துக்கொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். சற்று நேரம் தங்கம் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். சௌந்தரம் எழுதி முடித்துவிட்டுத் தலையை நிமிர்ந்தான். அவனுடைய கண்களில் நீர்த் துளிகள் ததும்பின.

தங்கத்துக்குக் கதி கலங்கிற்று. ஒன்றும் செய்யத் தோன்றாமல் பிரமை பிடித்தவள்போல் நின்றாள்.

சௌந்தரம் ஒரு கவர் எடுத்து அதன் மீது விலாசம் எழுதினான். பிறகு அதை ஒட்டுவதற்காகப் பிசின் கொட்டாங்கச்சியை எடுத்தான். பிசினில் தண்ணீரே விடாமல் காய்ந்து போயிருந்தது. கொட்டாங்கச்சியைக் கையில் எடுத்துக் கொண்டு தண்ணீருக்காகச் சமையலறைக்குச் சென்றான். போகும்போது, வெளியே ஜன்னல் கதவுக்குப் பின்னால் நின்ற தங்கத்தை அவன் பார்க்கவில்லை.

அவன் சமையலறைக்குள் நுழைந்ததும், தங்கம் மின்னல் வேகத்தில் ஆபீஸ் அறைக்குச் சென்றாள். மேஜை மேல் கிடந்த உறையை எடுத்துப் பார்த்தாள். அதன் மேல் இவள் பெயர்தான் எழுதியிருந்தது. பதைபதைப்புடன் கடிதத்தை உறையிலிருந்து எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்:—

சௌ. தங்கத்துக்கு
அநேக ஆசீர்வாதம்,

உனக்கு இந்தக் கடிதம் மிகவும் ஆச்சரியத்தை அளிக்கலாம். நீ இந்தப் படிக்கும் போது நான் வெகு தூரம் போய் விடுவேன். உன்னைப் பிரியும் படியான காரணம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பெரிய விபத்தில் அகப்பட்டுக்கொண்டு விட்டேன். நான் இங்கிருந்தால் உன் மனது ரொம்பவும் கஷ்டமடையும், ஆகையால் தான் போகிறேன். நீ உன் தாயார் வீட்டுக்குச் சென்று சௌக்கியமாயிரு. உன் பேரில் எனக்கு ஒரு கோபமும் இல்லை.

கடவுள் கிருபை இருந்தால் மறுபடியும் சந்திப்போம். என்னைப் பற்றி ஏதாவது அபவாதம் கேள்விப் பட்டால் உன் பேரில் நான் வைத்த பிரியத்தினால்தான் செய்தேன் என்று அறிந்து, நீயே தெரிந்து கொள்வாய்.

இப்படிக்கு,
உன்னை ஒரு நாளும் மறவாத
. சௌந்தரராஜன்.''

மேற்படி கடிதத்தைத் தங்கம் ஒரு தரம் படித்தாள். அவளுடைய தலை சுழன்றது. கீழே விழுந்து விடாமல் மேஜையைப் பிடித்துக் கொண்டாள். இதற்குள் சமையலறைக்குச் சென்றிருந்த சௌந்தரம் திரும்பி வந்தான். தங்கம் கையில் கடிதத்துடன் நிற்பதைக் கண்டு அவன் திடுக்கிட்டு நின்றான்.

பிரமை கொண்டவள் போல் நின்ற தங்கத்துக்குப் பளிச் சென்று உயிர் வந்தது. அவள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்து, அந்த அறையின் கதவைச் சாத்தினாள். சாத்திய கதவின் மேல் சாய்ந்து கொண்டு, 'எங்கே நீங்கள் போவதைப் பார்க்கலாம்' என்று கூறும் பாவனையில் நின்றாள். அவள் கடிதத்தைப் படித்து விட்டாள் என்பதை சௌந்தரம் தெரிந்து கொண்டான். தட்டுத் தடுமாறி, ''தங்கம்! நான் சொல்கிறதைக் கேள்'' என்று ஆரம்பித்தான்.

''கேட்க மாட்டேன்! கேட்க மாட்டேன்'' என்று அலறினாள் தங்கம். உடனே 'கோ' வென்று அழத் தொடங்கினாள். விம்மலுக்கு இடையிடையே, ''என்னை நிர்க்கதியாய் விட்டுப் போகப் பார்த்தீர்களே? நீங்கள் போய் நான் சௌக்யமாயிருக்க வேணுமா?'' என்பது போன்ற ஆத்திரமான சொற்கள் உளறிக் குளறிக் கொண்டு அவள் வாயிலிருந்து வெளி வந்தன.


## 2

சௌந்தரராஜனுக்குக் 'குபேரா பாங்கி'யில் குமாஸ்தா வேலை, பள்ளிக் கூடத்தில் படித்த காலத்திலிருந்து ரொம்ப யோக்யன் என்று பெயர் வாங்கியவன். அவனுக்கு 'சர்டிபிகேட்' கொடுத்த உபாத்தியாயர்கள் எல்லாரும் அவனுடைய கல்வித் திறமையையும், புத்திசாலித் தனத்தையும் விட அவனுடைய நற்குணத்தையே அதிகமாகச் சிலாகித்திருந்தார்கள். உண்மையிலேயே அவன் தெய்வ நம்பிக்கையுள்ள பிள்ளை. பாவ, புண்ணியத்திற்கு அஞ்சியவன். அப்படிப்பட்டவன் அவன் வேலை செய்த பாங்கியின் பணத்தில் ஆயிரத்தைந்நூறு ரூபாய் திருடினான் என்று சொன்னால், அவனை அறிந்தவர்கள் யாரும் அதை நம்பவே மாட்டார்கள். 'ஒரு நாளும் இராது' என்றுதான் சொல்லுவார்கள். ஆனாலும், அத்தகைய நம்பத்தகாத காரியத்தை அவன் செய்து தானிருந்தான். அப்படி அவன் செய்ததற்குக் காரணம், கடிதத்தில் அவன் எழுதியிருந்ததுபோல் தங்கத்தின் பேரில் அவன் வைத்திருந்த அளவிலாத பிரியமே யாகும்.

### பெயர் வந்த காரணம்!

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் 'நவசக்தி' பத்திரிகையில் சில காலம் தொண்டு புரிந்தார். அதனால் தம் குருநாதர் பெயரான கல்யாணசுந்தரம் என்பதில் 'கல்' என்ற முதல் இரண்டு எழுத்துக்களையும், தம்முடைய பெயரின் முதல் எழுத்தையும் சேர்த்து ''கல்கி'' என்ற புனைப் பெயரைச் சூட்டிக் கொண்டார் !

தங்கம் டிபுடி கலெக்டர் சதாசிவய்யரின் பெண். சதாசிவய்யர் உயிரோடு இருந்து, உத்தியோகமும் பார்த்திருந்தாரானால், தங்கத்துக்கும் சௌந்தரத்துக்கும் கல்யாணமே ஆகியிராது. அவர், தம்முடைய மூத்த பெண்கள் இருவரையும் பெரிய இடத்தில் கொடுத்ததுபோல், தங்கத்தையும் கொடுத்திருப்பார். ஒரு ஐ.சி.எஸ்., ஒரு எப்.சி.எஸ்., அல்லது ஒரு எம்.பி.பி.எஸ்.ஸுக்காவது வாழ்க்கைப் பட்டிருப்பாள். ஆனால் தங்கத்துக்கு அவ்



வளவு பாக்கியம் கிட்டவில்லை. யமன் திடீரென்று ஒரு நாள் வந்து, டிபுடி கலெக்டராச்சே என்றுகூடப் பார்க்காமல், சதாசிவய்யரைக் கொண்டு போய் விட்டான். அவர் மாரடைப்பினால் இறந்து போனதாக ஜனங்கள் சொன்னார்கள்.

போனவர், நிறையப் பணமாவது வைத்து விட்டுப் போனாரா? பெரிய தொகைக்கு இன்ஷ்யூராவது செய்திருந்தாரா? ஒன்றுமில்லை. இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள், தங்களுடைய பிரச்சாரத்துக்கு அனுகூலமாக அவருடைய பெயரை உபயோகிக்கும் படியாகக் குடும்பத்தை விட்டு விட்டுப் போனார். 'டிபுடி கலெக்டர் சதாசிவய்யரைப் பாருங்கள். இப்படித்தான் 'இன்ஷ்யூரன்ஸில் எனக்கு நம்பிக்கையில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு நாளைக்குக் கண்ணை மூடினார். இதோ அவருடைய பெண்டாட்டி பிள்ளைகள் திண்டாடுகிறார்கள்'', என்று இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் சொல்வது சர்வ சகஜமாயிற்று.

தங்கத்துக்கும் சௌந்தரத்துக்கும் முடிச்சுப் போட்டிருந்தபடியால்தான், சதாசிவய்யர் அப்படி இறந்து போனாரோ, என்னமோ? அதுதான் யாருக்குத் தெரியும்? சில பேர், ''பெரிய இடமாக, இளையாளாய்ப் பார்த்துத் தங்கத்தைக் கொடுத்து விடலாம்'' என்று யோசனை சொன்னார்கள். அதற்குத் தங்கத்தின் தாயார் சம்மதிக்கவில்லை. இரண்டு பெண்களைப் பணக்கார இடத்தில் கொடுத்து அனுபவம் பெற்றிருந்த அந்த அம்மாள், 'வேண்டவே வேண்டாம். ஏழையாயிருந்தால் இருக்கட்டும், நல்ல பிள்ளையாய், கண்ணுக்கும் சுமாராயிருந்தால் போதும், தங்கத்துக்கு அதிர்ஷ்டம் இருந்தால், பணங் காசெல்லாம் தானே வந்து விடுகிறது' என்றாள். சதாசிவய்ய

ருக்குத் தன்னைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகுதான் அதிர்ஷ்டம் அடித்தது. பெரிய உத்தியோகம் ஆயிற்று என்று அந்த நாளில் எல்லாரும் சொன்னதை நினைத்துக் கொண்டு தங்கத்தின் தாயார் அவ்விதம் சொன்னாள்.

தங்கத்தின் தமக்கைமார்களில் ஒருத்தி ஐ. சி. எஸ். ஸுக்கும், இன்னொருத்தி பெரிய, வருமானமுள்ள வக்கீலுக்கும் வாழ்க்கைப் பட்டிருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் தங்கத்தை அவ்வளவு சின்ன இடத்தில் கொடுப்பதில் திருப்தியில்லை. தங்களுடைய கௌரவத்துக்கு அது குறைவு என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள் பணம் கொடுத்து ஒத்தாசை செய்யவும் தயாராயில்லை. அம்மாவிடம் மட்டும் தங்கைக்குப் பரிந்தவர்கள் போல் பேசினார்கள். தாயாரோ, "நான் என்னடி அம்மா, செய்வேன்? மூன்று பிள்ளைகளைப் படிக்க வைத்தாக வேண்டும். கையில் இருக்கிற அற்ப சொற்பத்தையும் தொலைத்து விட்டால், அப்புறம் என்ன கதியாகிறது? ஏதோ நீங்கள் இரண்டு பேரும் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டு ஒசத்தியாயிருக்கிறது போதும். அவளுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், தானே பணம் காசெல்லாம் வருகிறது" என்று சமாதானம் சொன்னாள்.

கடைசியில் சௌந்தரத்துக்கும் தங்கத்துக்கும் நல்ல சுப லக்னத்தில் கல்யாணம் ஆயிற்று.

தாயாரின் வாக்குப் பலிக்கும் போலவே இருந்தது. பெண் அதிருஷ்டசாலியாகக் காணப்பட்டாள். கல்யாணம் ஆனதும், பையனுக்குப் பாங்கியில் உத்தியோகம் ஆயிற்று. சம்பளம் இரண்டு வருஷத்தில் உயர்ந்து அறுபது ரூபாய்க்கு வந்தது.

இது வரையில் ஒண்டுக் குடியிருந்ததில் தங்கத்துக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. 'அரை வயிற்றுச் சாப்பாடு கிடைத்தாலும் போதும்; தனி வீட்டில் தானிருக்க வேண்டும்' என்று தீர்மானித்து, இருபத்தைந்து ரூபாய்க்கு ஒரு சின்ன வீடு எடுத்துக் கொண்டு, அதில் குடித்தனம் செய்தார்கள். அவர்களுடன், மைத்துனன் ஒருவனும் இருந்து படித்துக் கொண்டிருந்தான். அவர்களுடைய வாழ்க்கை சந்தோஷ மயமாக இருந்தது. ஒரு குறைவும் இருக்கவில்லை. தங்கத்தின் தாயார் அவர்களை வந்து பார்த்துவிட்டுப் போன போதெல்லாம், 'பணக்கார இடத்தில் கொடுத்த பெண்களைவிட என் தங்கந்தான் சந்தோஷமாயிருக்கிறாள்' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இப்படி யிருக்கும்போதுதான் ஒரு பித்தளை ஒட்டியாணம் வந்து அவர்களுடைய வாழ்க்கையே குலைந்து போகும்படியான பெரும் விபத்துக்குக் காரணமாயிற்று.

ஒரு நாள் சௌந்தரம் ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய போது, தங்கம் இடுப்பில் பள பளவென்று ஜொலித்த ஒட்டியாணம் தரித்துக் கொண்டிருந்தாள்.

"பலே! ரொம்ப ஜோராயிருக்கிறதே!" என்றான் சௌந்தரம்.

"ஆயிரத்திருநூறு ரூபாய்தான் விலை. வாங்கித் தருகிறீர்களா?" என்று தங்கம் கேட்டாள்.

"உன் பிறந்தாத்துக்கு எழுதினால் உடனே தந்தி மணியார்டர் கதறிக் கொண்டு வருகிறது" என்றான் சௌந்தரம்.

இம்மாதிரி சிறிது நேரம் வேடிக்கைப் பேச்சு நடந்த பிறகு, அந்தப் பித்தளை ஒட்டியாணத்தின் விலை ஏழு ரூபாய் என்றும், இரண்டு வருஷத்துக்கு மெருகு 'காரண்டி' என்றும் அடுத்த வீட்டு அம்மாள் வாங்கியிருந்ததைப் பார்த்துத் தானும் ஒன்று வாங்கிக் கொண்டிருப்பதாகவும் தங்கம் தெரிவித்தாள்.

## 3

கொஞ்ச நாளைக்கெல்லாம், தங்கத்தின் தமக்கை மிஸஸ் கமலா ராமச்சந்திரனின் வீட்டில், அவளுடைய மூன்றாம் குழந்தைக்கு ஆண்டு நிறைவுக் கல்யாணம் நடந்தது. அதற்குத் தங்கமும் சௌந்தரமும் போயிருந்தார்கள். தங்கம் அந்த ஏழு ரூபாய்ப் பித்தளை ஒட்டியாணத்தைப் போட்டுக்கொண்டு கிளம்பியபோது சௌந்தரத்துக்கு அவ்வளவு திருப்தியில்லை. "இது என்னத்திற்கு?" என்று கேட்டான். "பித்தளை ஒட்டியாணம் என்று ஜாதியை விட்டுத் தள்ளி விடுவார்களோ? அப்படித் தள்ளினால் தள்ளிக் கொண்டு போகட்டுமே!" என்றாள் தங்கம்.

"நன்றாயிருக்கிறது. நீயேதான் பத்தரை மாத்துத் தங்கமாயிற்றே! உன்னை உருக்கினால் நூறு ஒட்டியாணம் செய்யலாமே?" என்றான் சௌந்தரம்.

"நானே தங்கம். அதிலும் அழகைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கேன்! எனக்கு என்ன குறைச்சல்?" என்றாள் தங்கம்.

## கல்கி வளர்த்த தமிழ்!

கல்கியின் எழுத்துக்களில் கதைகள் மிகவும் சிறப்புள்ளவை. ஆனாலும் மற்றவைகளும் வெகு பொறுப்புள்ளவை. அவருடைய அரசியல் எழுத்து மிகவும் அறிவுடையது. அபிப்பிராயங்களில் பேதமுடையவர்களும் அவர் எழுதும் ஆதாரங்களையும் தர்க்க ரீதியையும் அலட்சியம் செய்துவிட முடியாது.

பொருளாதாரத் துறையிலும், நாணய மாற்று வித்தைகளிலும் அவர் நிபுணர்களுடைய பாடங்களைப் படித்தவர் என்றாலும், அவற்றின் நுணுக்கங்களைத் தெள்ளிய முறையில் கல்வி அறிவு குறைந்தவர்களுக்கும் புரியும்படி எழுதக்கூடியவர். ஏன்? கல்வியறிவு மிகுந்த என்னுடைய பல நண்பர்களும் நாணய மாற்றுச் சிக்கல்களைக் கல்கியினுடைய கட்டுரையிலிருந்துதான் சிக்கெடுத்துப் பார்க்கத் தெரிந்து கொண்டதாக என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

எழுத்தாளர் தொழில் முறையில் சொந்த முயற்சிகளால் மகத்தான வெற்றியடைந்தவர் கல்கி.

—நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை.

இந்தக் குதூகலமெல்லாம் கல்யாண வீட்டிற்குப் போகும்வரையில்தான் இருந்தது. அங்கே சென்று சற்று நேரம் ஆனதும், தங்கம் தன்னுடைய ஒட்டியாணம் மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்திருப்பதைக் கண்டாள். ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் அந்த ஒட்டியாணத்தைச் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டார்கள். "இது தான் இப்போது புதிசா வந்திருக்காம். ஒன்பது ரூபாயாம்" என்றாள் ஒருத்தி, 'இல்லை, ஏழு ரூபாய்தான்' என்றாள் இன்னொருத்தி. "இவ்வளவு சுலபமாயிருக்கும்போது என்னத்திற்காக ஆயிரம் ஆயிரத்தைந்நூறு கொடுத்து வாங்க வேண்டும்" என்றாள் வேறொரு ஸ்திரீ.

''பத்து நாளைக்கெல்லாம் பல்லை இளித்து விடுமே? அப்போது என்ன பண்ணுகிறது?'' என்றாள் மற்றொருத்தி.

இந்தப் பேச்செல்லாம் தங்கத்தின் காதில் நாராசமாக விழுந்தன. அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் தேகமெல்லாம் ஒரே வைரமாய் வைத்து இழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். ஒரு பத்து லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதற்குப் போதுமான வைரம் அவர்கள் மேல் இருந்தது! பாவம்! இவர்களுக்கு மத்தியில், பித்தளை ஒட்டியாணம் போட்டுக் கொண்டு வந்த தங்கம் அவமானத்தினால் மனம் குன்றி நின்றாள். கொஞ்சங்கூட அவளுக்கு உற்சாகம் ஏற்படவில்லை. எப்போது வீட்டுக்குக் கிளம்பப் போகிறோம் என்று தவித்துக் கொண்டிருந்தாள். கடைசியில், வீட்டுக்குக் கிளம்பும் நேரம் வந்தது. வாசலில் குதிரை வண்டியில் ஏறத் தயாராயிருந்தபோது, கையில் பட்சணப் பொட்டலத்துடன் அவளுடைய தமக்கை வந்தாள். தங்கத்தின் காதோடு இரகசியமாக, ''ஏண்டி அசடே! இந்தப் பித்தளை ஒட்டியாணத்தை ஏன் போட்டுக் கொண்டு வந்தாய்? ஆசையாயிருந்தால், என்னைக் கேட்டால் நான் கொஞ்ச நாழி போட்டுக் கொள்ளக் கொடுக்கமாட்டேனா? இந்த மாதிரியெல்லாம் இனிமேல் செய்யாதே! அற்பம் என்று எண்ணிக் கொள்ளப் போகிறார்கள்'' என்று சொன்னாள். இதையெல்லாம் இரகசியமாய்ச் சொல்வதாக அவள் எண்ணியிருந்த போதிலும் ஏற்கனவே வண்டிக்குள் ஏறியிருந்த சௌந்தரத்தின் காதில் அவ்வளவும் ஸ்பஷ்டமாக விழுந்தது.

வீடு போய்ச் சேரும் வரையில் தங்கமும் சௌந்தரமும் பேசவில்லை. தங்கம், பொங்கிக் கொண்டு வந்த அழுகையை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தாள். வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் போனாளோ இல்லையோ, ஒட்டியாணத்தைக் கழற்றி எறிந்து விட்டு, விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். வண்டிக்காரனுக்குச் சத்தம் கொடுத்து விட்டு உள்ளே வந்த சௌந்தரம் அவள் விசிப்பதைப் பார்த்து விட்டு, ''இந்தச் சனியன் பிடித்த ஒட்டியாணம் என்னத்திற்கு? அந்த தரித்திரங்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளும் என்று அப்போதே சொன்னேனே இல்லையோ; கேட்காமல் போட்டுக் கொண்டு வந்தாய். இப்போது அழுது என்ன பிரயோசனம்?'' என்றான்.



இதைக் கேட்ட தங்கம் விம்மிக் கொண்டே, ''எங்க அப்பா மட்டும் இருந்திருந்தால், இப்படி இவர்களிடம் பேச்சுக் கேட்கும்படி விட்டிருப்பாரா? இவர்களைப் போல் நானும் தங்க ஒட்டியாணம் பூட்டிக் கொண்டிருக்க மாட்டேனா?'' என்று கூறிவிட்டு, கோவென்று கதறி அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய சொல்லும், அழுகையும் சௌந்தரத்தின் நெஞ்சைப் பிளப்பது போலிருந்தன. ''நம்மைக் கல்யாணம் செய்து கொண்டதனால் தானே இவளுக்கு இந்த கதி நேர்ந்தது? இவளுக்கு ஒரு தங்க ஒட்டியாணம் வாங்கிக் கொடுக்க நமக்கு கதியில்லையே?'' என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியது.

''ஆமாம், உங்க அப்பா இருந்திருந்தால் உன்னையும் பணக்கார இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்திருப்பார். இந்த ஏழையைக் கட்டிக் கொண்டு திண்டாடும் கதி உனக்கு நேர்ந்திருக்காது'' என்றான்.

இப்படிச் சொன்னானோ இல்லையோ தங்கத்தின் அழுகை பளிச்சென்று நின்றது. அவள் ஓடி வந்து சௌந்தரத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ''உங்களுடைய அன்பு ஒன்றே எனக்குப் போதும். நகையும் வேண்டாம். நட்டும் வேண்டாம்'' என்றாள்.

அந்த நிமிடத்தில் சௌந்தரம் தன் மனத்திற்குள்ளே ''எப்படியாவது இவளுக்குத் தங்க ஒட்டியாணம் பண்ணிக் கொடுத்துவிட்டு மறு காரியம் பார்க்க வேண்டும்; இல்லாவிட்டால் நான் மனுஷன் இல்லை'' என்று தீர்மானம் செய்து கொண்டான்.

கொஞ்ச நாளாகக் 'குபேரா பாங்கை'ப்பற்றி ஊரில் வதந்திகள் உலாவிக் கொண்டிருந்தன. அந்த பாங்கியில் பணம் போட்டிருந்தவர்கள் அவசரம் அவசரமாகப் பணத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த நெருக்கடியில் தினந்தோறும் மானேஜிங் டைரக்டரே பாங்கிக்கு வந்து காரியங்களை நேரில் நடத்திக் கொண்டு வந்தார். ''ஒன்றும் பயம் இல்லை; இம்மாதிரி நெருக்கடி இதற்கு முன்பும் நமது பாங்கிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் சமாளித்தது போல் இதையும் சமாளித்துக் கொள்வோம்'' என்று அவர் பாங்கியின் சிப்பந்திகளுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டு வந்தார்.

பாங்கியின் மேல் நம்பிக்கையை ஸ்திரப்படுத்துவதற்காக, மானேஜிங் டைரக்டர், பணம் போட்டிருந்தவர்கள் பணத்தைக் கேட்டவுடனேயே கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். 'பிக்ஸட் டெபாஸிட்'டுகளை நியாயப்படி கொடுக்க வேண்டியதில்லையானாலும், அநேகம் பேருக்கு 'பிக்ஸட்' டெபாஸிட்'டுகளையும் திருப்பிக் கொடுத்து வந்தார். இது மட்டுமல்ல. சில பேருக்கு 'ஓவர் டிராப்ட்'களும் தாராளமாய் அனுமதித்து வந்தார். சில பேருக்குப் புதிய கடன்கள் கூட 'ஸாங்க்ஷன்' செய்தார். இப்படியெல்லாம் செய்தால் பாங்கியைப் பற்றி ஜனங்களின் சந்தேகங்கள் தீர்ந்து மறுபடியும் அவர்கள் பணம் போட ஆரம்பிப்பார்கள் என்பது அவர் அபிப்பிராயமெனத் தெரிந்தது.

இவ்விதம் 'குபேரா பாங்கி சம்பந்தமாக ஊரில் பரபரப்பு ஏற்பட்டிருந்த நிலைமையில்தான், ஒருநாள் சாயங்காலம் சௌந்தரம் வெகு குதூகலமாக வீட்டுக்கு வந்தான். ''தங்கம்! இன்றைக்கு உனக்குப் பிறந்த நாள் ஆயிற்றே! கடைத் தெருவுக்குப் போகலாம், வருகிறாயா?'' என்று கேட்டான்.

''கடைத் தெருவுக்குப் போய் பிறந்த நாள் பரிசு என்ன வாங்கித் தரப் போகிறீர்கள்? வைரத் தோடும் தங்க ஒட்டியாணமும் வாங்கித் தரப் போகிறீர்களா?'' என்று கேட்டாள் தங்கம்.

''ஆமாம்!'' என்றான் சௌந்தரம்.

"பரிகாசம் பண்ணுகிறீர்கள்! அப்படி ஒன்றும் நான் நகை ஆசை பிடித்துக் கிடக்கவில்லை" என்றாள் தங்கம்.

"உனக்கு ஆசையில்லாதபடியினால்தான் நான் பண்ணிக் கொடுக்கப் போகிறேன்" என்று சௌந்தரம் சொல்லி, சட்டைப் பையிலிருந்து ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துப் போட்டான். ஒரு நிமிஷம் தங்கம் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள். பிறகு, அந்த நோட்டுக்களைக் கையில் எடுத்துக் கொண்டு எண்ணினாள். பதினைந்து நோட்டுகள் இருந்தன. ஆயிரத்தைந்நூறு ரூபாய்!

"ஏது இந்தப் பணம்! நிஜமாக நகை வாங்கப் போகிறீர்களா?" என்று தங்கம் நாத் தழுதழுக்கக் கேட்டாள்.

"ஆமாண்டி அசடே! உன்னை ஏமாற்றுவேனா? மாதம் கொஞ்சம் கொஞ்சமாகச் சம்பளத்தில் மீத்து பாங்கில் போட்டுக் கொண்டு வந்தேன். இரண்டாயிரம் ரூபாய் ஆனதும் உனக்குச் சொல்ல வேணும் என்றிருந்தேன். அது வரையில் பொறுமையில்லை. இன்றைக்கு உன் பிறந்த நாளாயிருக்கிறதே என்று கொண்டு வந்து விட்டேன். கிளம்பு, போகலாம்!" என்றான் சௌந்தரம்.

பத்து நாளைக்குள் தங்கம் இரண்டாவது முறையாக சௌந்தரத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கண்ணீர் பெருக்கினாள். இந்தத் தடவை அவள் கண்ணில் பெருகியது ஆனந்தக் கண்ணீர் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

இரண்டு பேரும் கடைத் தெருவுக்குப் போய்ப் பல கடைகளில் பார்த்துத் தங்க ஒட்டியாணம் ஒன்று, ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு வைரத்தோடு செய்வதற்கு 'ஆர்டர்' கொடுத்து விட்டு வந்தனர்.

அந்த இரண்டு மூன்று தினங்கள் சௌந்தரம் சந்தோஷமாயிருந்ததைப் போல் அவனுடைய வாழ்நாளில் வேறெந்த நாளிலும் இருந்ததில்லை. தங்கத்தின் இடுப்பில் தங்க ஒட்டியாணத்தைப் பாத்துப் பார்த்து அவன் மகிழ்ந்தான். தங்கத்தின் முக மலர்ச்சியைக் கண்டு அவன் உளம் பூரித்தான்.

காரியம் எவ்வளவு சுலபமாக முடிந்து விட்டது என்பதை நினைக்கும்போது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. நல்லவேளை! அவ்வளவு மனோ தைரியம் தனக்கு இருந்ததே என்று எண்ணிப் பெருமையடைந்தான். அந்த ஒரு நிமிஷம் தப்பவிட்டிருந்தால், போனது தான். சம்பளத்தில் பணம் மீத்து எந்தக் காலத்தில் தங்க ஒட்டியாணம் செய்து கொடுத்திருக்க முடியும்? மாதம் பத்து ரூபாய் பல்லைக் கடித்துக் கொண்டு மீத்து வந்தாலும், வருஷத்துக்கு 120 ரூபாய்தான் சேரும். ஆயிரத்தைந்நூறு ரூபாய் சேர்வதற்கு 12 வருஷம்- ஒரு மாமாங்கம் ஆகிவிடுமே! சிவ சிவா! அதற்குள்ளே எந்த ராஜா எந்தப் பட்டணம் போய் விடுவானோ, யார் கண்டது? அப்புறம் தங்கம் அவளுடைய வாழ்நாளில் பித்தளை ஒட்டியாணத்துடனே திருப்தி யடைந்திருக்க வேண்டியதுதான்!

ஒவ்வொரு சமயம் "விஷயம் ஒரு வேளை வெளியாகிவிட்டால்?' என்ற நினைவு வந்து அவனைத் திடுக்கிடச் செய்தது. ஆனால் அந்த நினைவுக்கு அவன் அதிகம் இடம் கொடுக்கவில்லை. விஷயம் வெளியாவதற்கு வழியே கிடையாது. அன்று நடந்தது எல்லாவற்றையும் அவன் ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தான். பகல் பன்னிரண்டு மணிக்கு, பணம் வாங்க வந்தவர்களின் கூட்டம் பாங்கியில் அசாத்தியமாயிருந்தது. சௌந்தரத்தின் பெட்டியில் இருந்த பணமெல்லாம் ஆகி விட்டது. இன்னும் ஐந்து நிமிஷம் போனால், கேட்பவர்களுக்குக் கையை விரிக்க வேண்டியதுதான். இந்தச் சமயத்தில் மானேஜிங் டைரக்டரின் அறையிலிருந்து "ரிஸர்வ்" பாங்கியிலிருந்து பணம் வந்துவிட்டது; ஒவ்வொரு குமாஸ்தாவாக வந்து பணம் வாங்கிக் கொண்டு போகவேண்டியது" என்று தகவல் வந்தது. சௌந்தரத்தின் முறை வந்த போது, அவனும் பணம் வாங்கப் போனான். நூறு ரூபாய், ஐம்பது ரூபாய், பத்து ரூபாய், ஐந்து ரூபாய் நோட்டுகளாக ஐயாயிரம் ரூபாய் அவன் எண்ணி எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவன் பணத்தை எண்ணிக்கொண்டிருந்தபோது, டெலிபோனில் மணி அடிக்கவே, மானேஜிங் டைரக்டர் டெலிபோன் குழாயை எடுத்துப் பேசத் தொடங்கினார். யார் என்ன சொன்னார்களோ தெரியாது. மானேஜிங் டைரக்டர் ராவ்சாகிப் ஸகஸ்ரநாமத்தின் முகம் கவலையால் வாடியது. அந்தச் சமயத்தில், அதாவது ஸகஸ்ரநாமம் டெலிபோனில் கவனமாக இருந்தபோது, சௌந்தரம் அதிகப்படியாக இரண்டு கட்டுகளை எடுத்துப் போட்டுக் கொண்டான். பிறகு, ஐயாயிரம் ரூபாய்க்குக் கையெழுத்துப் போட்டுவிட்டு, கீழே பணம் வாங்க வந்திருந்தவர்கள் காத்துக் கொண்டிருப்பதால் அவசர அவசரமாக இறங்கிச் சென்றான். மாடிப்படி இறங்கும்போதே அந்த அதிகப்படி நோட்டுக்கள் அவனுடைய பெரிய கோட்டுப் பைகளில் சென்று விட்டன. கோட்டுப் பை பெரியதாயிருப்பது சில சமயத்தில் எவ்வளவு சௌகரியமாக இருக்கிறது!

அன்று மாலை பாங்கி சாத்தும் நேரம் வரையில் சௌந்தரத்துக்கு திக்கு திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. "யாரிடமாவது அதிகப்படி பணம் இருக்கிறதா?" என்று மானேஜிங் டைரக்டர் கேட்டனுப்பினால், உடனே பையிலிருந்த நோட்டுக்களைப் பெட்டியில் போட்டு விட்டு "ஆமாம்; அதிகம் இருக்கிறது" என்று ஒப்புக் கொண்டு விட அவன் தயாராயிருந்தான். சோதனை கீதனை என்று பேச்சு ஏற்பட்டாலும், அப்படிச் செய்வதற்கு அவன் சித்தமாயிருந்தான். ஆனால் தங்கத்திற்கு அதிருஷ்டம் இருக்கும்போது அப்படியெல்லாம் ஏன் நடக்கிறது?

## இனிய வசன நடை

நமது இலக்கியத்தில் வசனம் அரிதாக இருக்கிறது. ஆனால் கல்கி இந்த வழியிலிருந்து விலகி தமக்கே உரிய எளிய அழகான அர்த்த புஷ்டியுடன் கூடிய நடையில் வசனம் எழுதினார். கல்கியின் வசன நடை வாழைப்பழத்தைப்போன்றது. யார்வேண்டுமானாலும் வாழைப்பழத்தை எட்டிப் பறித்துப் புசித்து, அதன் இனிமையை அனுபவிக்கலாம் அல்லவா அதைப் போலவே கல்கியின் வசன நடையின் இனிமையை யார் வேண்டுமானாலும் அனுபவிக்கலாம்.

—ராஜாஜி.

மறுநாளும் அதற்கடுத்த நாளும் பாங்கியில் ஏதாவது 'கசமுசா' ஏற்படுகிறதா என்று ஆவலுடன் கவனித்தான். ஒன்றுமே கிடையாது. கிணற்றிலே கல்லைப் போட்டதுபோல் இருந்தது.

பணங் கேட்பவர்களின் கூட்டங் கூட குறைந்து போயிற்று. கேட்பவர்களுக்கெல்லாம் வட்டியின்றிப் பணம் கொடுத்து வந்ததிலிருந்து, ஜனங்களுக்கு பாங்கியில் நம்பிக்கை வந்துவிட்டதாகத் தோன்றியது. சிலர், வாங்கிய பணத்தைத் திருப்பிப் போடுவதற்குக்கூட வந்தார்கள்.

சௌந்தரத்தின் மனம் நிம்மதி அடைந்தது. அந்த நிம்மதியின் மத்தியில் ஒரு விநோத குறையும் உண்டாயிற்று. ''எடுத்ததுதான் எடுத்தோம்; இன்னும் இரண்டு கட்டு, சேர்த்து எடுத்திருக்கக் கூடாதா?'' என்று விசாரப்பட்டான். தங்கத்துக்கு ஒட்டியாணமும் வைரத் தோடும் வாங்கிக் கொடுத்த பிறகு, கையிலும் ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால், வருங்காலத்தில் ஆபத்து சம்பத்துக்கு உதவுமல்லவா? மறுபடியும் அந்த மாதிரி சந்தர்ப்பம் தன் வாழ்நாளில் எங்கே வரப் போகிறது..?

## 4

'ருபேரா பாங்கிக்கு' எதிர்ப்புறத்தில் இருந்த பெரிய கட்டடத்தில் ஒரு பிரசித்தமான ஹோட்டல் இருந்தது. இந்த நவநாகரிகமான ஹோட்டலில் சாப்பாடுபோட்டதுடன் தங்குவதற்கு இடமும் கொடுத்தார்கள். மேல் மாடியில் இருந்த சிறு அறைகள், தினசரியிலும் மாதவாரியிலும் வாடகைக்கு விடப்பட்டன. அந்த மேல் மாடி அறைகளையும் தாழ்வாரத்தையும் சௌந்தரம் வேலை செய்யும் கவுண்டரிலிருந்து நன்றாகப் பார்க்கலாம். பாங்கியில் அதிகக் கூட்டமில்லாத போது, சௌந்தரம் அந்த ஹோட்டல் அறைகளுக்கு அன்றாடம் புதிது புதிதாக வரும் மனிதர்களைப் பார்த்தும், அவர்களுடைய நடை உடை பாவனைகளைக் கவனித்தும், பொழுது போக்குவது வழக்கம். அருகிலுள்ள மற்ற பாங்கி குமாஸ்தாக்களிடம் கூட ''அவனுடைய இட்லர் மீசையைப் பார்'' என்றும், 'இவன் யாழ்ப்பாணத்து மனிதன் போலிருக்கிறது!'' ''அடேயப்பா! எவ்வளவு உயரம்! நம்முடைய புது கவர்னரை விட உயரமாய் இருப்பான் போலிருக்கிறதே!'' என்றெல்லாம் வம்பு பேசி சந்தோஷப்படுவதுண்டு.

தங்க ஒட்டியாணம் வாங்கிக் கொடுத்த நாலாம் நாள், சௌந்தரம் வழக்கம் போல் அந்த மாடி அறைகளின் பக்கம் பார்த்தான். அந்த அறைகளில் ஒன்றில், கையில் புத்தகத்துடன் உட்கார்ந்திருந்த ஓர் ஆசாமி தன்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்ப



தைக் கண்டதும், சௌந்தரத்துக்கு துணுக்கென்றது. அந்த முகம் எங்கேயோ பார்த்த முகமாய்த் தோன்றியபடியால், அவனுடைய துணுக்கம் அதிகமாயிற்று. அப்புறம் இன்னும் சில தடவை சௌந்தரம் அந்தப் பக்கம் நோக்கினான். ஒவ்வொரு சமயம் அந்த ஆசாமி நேரடியாக இவனைப் பார்ப்பது போலவும், இன்னும் சில சமயம் புத்தகத்தில் கவனமாய் இருப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டு கடைக் கண்ணால் இவனைப் பார்ப்பது போலவும் தோன்றியது. சௌந்தரத்துக்கு இன்னதென்று சொல்வதற்கில்லாத பயம் உண்டாயிற்று. ''இவன் யார்? இந்த முகத்தை எங்கே பார்த்திருக்கிறோம்?'' என்று யோசனை செய்தான். பளிச்சென்று ஞாபகம் வந்தது. உடனே அவனுக்குக் கதி கலங்கிற்று.

ஆம்; சௌந்தரத்தின் மைத்துனி குழந்தை ஆண்டு நிறைவுக் கல்யாணத்திற்கு இந்த ஆசாமி வந்திருந்தான். அவனைப் பற்றி வேறு இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். ''ராமாநுஜம் இப்போது சி.ஐ.டி. யில் இருக்கிறான் என்று தெரியுமோ இல்லையோ? டிபார்ட்மெண்டில் அவனுக்கு ரொம்ப நல்ல பெயர்! சீக்கிரம் 'பிரமோஷன்' ஆகும் என்று சொல்கிறார்கள்,'' என்று ஒருவர் இன்னொருவரிடம் சொன்னார். அது சௌந்தரத்தின் காதில் விழவும் அவர்கள் சுட்டிக் காட்டிப் பேசிய ஆசாமியை இவனும் பார்த்தான். அதே ஆசாமிதான் இவன் என்பதில் சந்தேகமில்லை.

சௌந்தரத்துக்குப் பெரும் திகில் உண்டாயிற்று. உடம்பெல்லாம் சொட்ட வியர்த்தது. ''வெய்யில் சகிக்கவில்லை'' என்று முணுமுணுத்துக் கொண்டு, தன் கைக்குட்டையினால் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். நீண்டநாள் வழக்கத்தினால் இயந்திரத்தைப் போல் வேலை செய்தானே தவிர, அவனுக்கு வேலையில் கவனமே இருக்கவில்லை.

இந்த சி. ஐ. டி. போலீஸ்காரன் இங்கே எதற்காக வந்திருக்கிறான்? இத்தனை நாளும் இல்லாமல் இப்போது வரக் காரணம் என்ன? பணம் குறைந்த விஷயமாகத்தான் தன் பேரில் சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும். வேறெதற்காக அங்கே வந்து உட்கார்ந்திருக்கிறான்? எதற்காகத் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறான்?

அன்று சாயங்காலம் வீடு சேர்ந்ததும் தங்கம் அவனைப் பார்த்து, 'ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்? முகம் வாடியிருக்கிறதே?'' என்று கேட்டாள். ''வேலை அதிகம்; வேறொன்றுமில்லை'' என்று பதில் சொன்னான்.

மறுநாள் சௌந்தரம் பேங்கிக்குச் சென்றபோது 'இன்றைக்கு அந்த சி. ஐ. டி. காரன் அங்கே இல்லாவிட்டால் ஒரு ஆபத்தும் இல்லை' என்று எண்ணிக்கொண்டு போனான். 'இன்றைக்கு அவன் இருக்க மாட்டான்; நம்முடைய பயம் வீண் பயம்' என்று மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டான். 'அங்கே அவன் இருந்தால் தான் என்ன? வேறு காரியமாய் வந்திருக்கக் கூடாதா? பட்டணத்துக்கு வெளியூரிலிருந்து வரும் எத்தனையோ உத்தியோகஸ்தர்கள் அந்த ஹோட்டலில் தங்குகிறார்கள். அந்த மாதிரி இவனும் வந்து தங்கியிருப்பான். நாம் எதற்காகப் பயப்பட வேண்டும்?' என்று தேறுதல் சொல்லிக் கொண்டான். 'இன்றைக்கு அந்த மாடிப் பக்கம் பார்க்கவே கூடாது. பார்த்தால் நம் பேரில் சந்தேகம் உண்டானாலும் உண்டாகும்' என்று உறுதி செய்து கொண்டான்.

ஆனால், பாங்கியில் அவனுடைய வழக்கமான இடத்தில் போய் உட்கார்ந்ததும் அவனையறியாமலே கண்கள் எதிர்ப்பக்கம் நோக்கின. அங்கே சி. ஐ. டி. காரன் இல்லை. 'அப்பா! பிழைத்தோம்! என்ன வீண் பயம்! என்ன வீண் பீதி! குற்றமுள்ள நெஞ்சு என்பது சரியாய்ப் போய்விட்டதே! இந்த ஒரு தடவையோடு போதும்! இனிமேல் நம் வாழ்நாளில் இம்மாதிரி காரியம் செய்யவே கூடாது...!'

வாசலில் அப்போது மானேஜிங் டைரக்டர் கார் வந்து நின்றது. அவர் பாங்கிக்குள்ளே வந்து பத்து நிமிஷத்துக்கெல்லாம், சௌந்தரம் தற்செயலாக மறுபடியும் எதிர் மாடிப் பக்கம் பார்த்தான்.

அங்கே சி.ஐ.டி. கழுகு உட்கார்ந்து தன்னை வெறித்துப்

பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். ஸௌந்தரத்தின் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கிற்று.

மானேஜிங் டைரக்டரும் இவனும் ஒத்துப் பேசிக்கொண்டு வந்திருக்க வேண்டும்; இவன் தன்னுடைய சந்தேகத்தைத் தெரியப்படுத்தியிருப்பான். மானேஜிங் டைரக்டர் என்ன சொன்னாரோ, என்னமோ? ஒரு வேளை 'அரெஸ்டு' செய்து விடுவதென்று தீர்மானித்திருப்பார்களோ!

போலீஸ்காரர்கள் வந்து தன்னுடைய கையில் விலங்கு மாட்டித் தெருவீதி வழியாக அழைத்துப் போகும் காட்சியை ஸௌந்தரம் தன் மனத்தில் கற்பனை செய்து பார்த்துக் கொண்டான். அந்தக் காட்சியை மட்டும் தங்கம் பார்த்து விட்டால்? அவன் தேகத்திலுள்ள ரோமங்கள் எல்லாம் குத்திட்டு நின்றன.

போலீஸ்காரர்கள் விலங்குடன் வருவதை ஒவ்வொரு நிமிஷமும் ஸௌந்தரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஹோட்டல் மாடிப் பக்கம் பார்க்கக்கூடாதென்று அவன் பல்லைக் கடித்துக் கொண்டு சிரமப்பட்டான். ஆனால் அந்த, சி. ஐ. டி.க்காரனின் கண்கள் தன் பேரிலேயே இருப்பதாக அவனுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. கழுகு மூக்கும் வெறித்த கண்களும் உள்ள அந்தக் குரூரமான முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

சாயங்காலம் பாங்கி சாத்துகிற வரையில் ஒன்றும் நடக்கவில்லை. 'நம் பேரில் வெறும் சந்தேகமே மட்டும் தோன்றியிருக்கும்; ருசு ஒன்றும் அகப்பட்டிராது. அதனால்தான் 'அரெஸ்ட் வாரண்ட்' எடுக்கவில்லை' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அவர்களுக்கு என்னதான் ருசு இருக்கிறது?-ஓ! ஒருவேளை தங்க ஒட்டியாணம் வாங்கிய செய்தி தெரிந்து விட்டால்?

அன்று சாயங்காலம் ஸௌந்தரம் தங்கத்தைப் பார்த்து, சாதாரணமாய்க் கேட்பதுபோல், ''ஆமாம்; ஒட்டியாணம் வாங்கிக் கொண்ட சமாசாரம் அடுத்த வீடு அண்டை வீடுகளுக்கெல்லாம் இதற்குள் தெரிந்திருக்குமே, அப்படித்தானே?'' என்று கேட்டான்.

''நன்றாகயிருக்கிறது; வீடு வீடாகப் போய்ச் சொல்லிவிட்டு வருவேன் என்று நினைத்தீர்கள்? நேற்றைக்கு அடுத்த வீட்டு அம்மாமி பார்த்துவிட்டு 'அசல் தங்க ஒட்டியாணம் மாதிரி இருக்கிறதே' என்றாள். அப்போதுகூட நான் நிஜத்தைச் சொல்லவில்லை. என்ன அவசரம்? தானே தெரிகிறது என்று இருந்துவிட்டேன்-எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றாள்.

''விசேஷம் ஒன்றுமில்லை; ஆனால் இப்போதைக்கு யாரிடமும் சொல்ல வேண்டாம். இந்தக் காலத்திலேதான் அசூயை அசாத்தியமாயிருக்கிறதே!'' என்றான் ஸௌந்தரம்.

அதற்கப்புறம், இன்னும் நாலு தினங்கள் சென்றன. ஸௌந்தரம் வழக்கம்போல் பாங்கிக்குப் போய் வேலை செய்து வந்தான். ஒவ்வொரு நாளும் 'இன்றைக்கு அந்த சி.ஐ.டி. காரன் இருக்க மாட்டான்' என்று எண்ணிக் கொண்டு போவான். அங்கே அந்தக் கழுகு மூஞ்சியைக் கண்டதும் ஏமாற்றமடைவான்.



நாளுக்கு நாள் அவனுடைய பீதியும் பதை பதைப்பும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இரண்டில் ஒன்று சீக்கிரம் தீர்ந்து விட்டால் தேவலையென்று தோன்றிற்று. இந்த நாட்களில் இரவில் தூங்கும் போது அவனுடைய உடம்பு தூக்கிப் போடுவதையும், ஏதேதோ பிதற்றுவதையும் கண்டு தங்கத்தின் கவலையும் அதிகமாகிக் கொண்டு வந்தது.

ஒருநாள் பாங்கியில் இரண்டு குமாஸ்தாக்கள் கூடி இரகசியம் பேசிக் கொண்டிருந்ததை ஸௌந்தரம் பார்த்துவிட்டு, அவர்கள் அருகில் தானும் போய், ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டான். ''உனக்குத் தெரியாதா என்ன? பாங்கியில் ஏதோ பணம் காணாமற் போயிருக்கிறது. ஏற்கெனவே ஊரில் இருக்கிற காபராவில் அதை வெளியில் விடக்கூடாது என்று மானேஜிங் டைரக்டர் மூடி வைத்திருக்கிறாராம். திருட்டுப் போன தொகை எவ்வளவு என்று தெரியவில்லை. அது டைரக்டருக்கும் காஷியருக்கும்தான் தெரியுமாம்!'' என்று குமாஸ்தாக்களில் ஒருவர் சொன்னார்.

பின்னர் இதற்கு முன்னால் நடந்திருக்கும் பெரிய பாங்கி மோசடி வழக்குகளைப் பற்றியும், அதிலெல்லாம் எப்படி எப்படித் திருடினார்கள், எப்படி எப்படி அகப்பட்டுக் கொண்டார்கள் என்பது பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டார்கள். மேற்படி குற்றவாளிகளின் கடுந்தண்டனையைக் கேட்டபோது, ஸௌந்தரத்துக்கு சப்தநாடியும் ஒடுங்கி விட்டன. ஒரு கேஸில் 'அப்ரூவர்' ஆனவன் மன்னிக்கப்பட்டதை அறிந்தபோது, 'நாமும் ஒரு வேளை ஒப்புக் கொண்டு விட்டால் மன்னித்து விடுவார்களோ?' என்று எண்ணினான். ஆனால் அது எப்படி முடியும்? குற்றத்தை ஒப்புக் கொள்வதென்றால், தங்கத்தினிடமும் சொல்லியாக வேண்டுமே! அவளிடம் எப்படி இந்த வெட்கக் கேட்டைச் சொல்வது? அதைவிடப் பிராணனை மாய்த்துக் கொள்ளலாம்.

தற்கொலை செய்வதற்குரிய வழிகளைப் பற்றி அவன் மனம் சிந்திக்கத் தொடங்கியது. இடையிடையே 'எதற்காக இந்தப் பைத்தியக்கார எண்ணங்கள் எல்லாம்? வெறும் சந்தேகத்தின் பேரில் சிறைக்கு அனுப்ப முடியுமா? தடயம் கிடைத்தால் தானே நடவடிக்கை எடுக்க முடியும்! தடயம் என்ன இருக்கிறது? தங்கம் வாயை மூடிக் கொண்டிருக்கிற வரையில் யார் என்ன செய்ய முடியும்?' என்று எண்ணமிட்டான்.

நகைக் கடையில் ஒட்டியாணம் வாங்கியதும், வைரத் தோட்டுக்கு ஆர்டர் கொடுத்திருப்பதும் அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆர்டர் புத்தகத்தில் இவனுடைய கையெழுத்துக் கூட இருக்கிறது. ஒரு வேளை அங்கே போய் விசாரித்திருப்பார்களோ?-இந்த ஒரு வழியில்தான் விஷயம் வெளியானால் வெளியாக வேண்டும்.

அன்று மாலை பாங்க் மூடியான பிறகு ஸௌந்தரம் நேரே வீட்டுக்குப் போகாமல் கடைத் தெருவுக்குச் சென்றான். வைரத்தோடு தயாராகிவிட்டதா என்று கேட்டுக் கொண்டு, அத்துடன் யாராவது தன்னைப் பற்றி விசாரித்தார்களா என்றும் தெரிந்து கொண்டும் வரலாம் என்று, ஒட்டியாணம் வாங்கிய கடையை நோக்கிப் போனான். கடைக்குக் கொஞ்ச தூரத்தில் அவன் வந்துகொண்டிருந்தபோது, மேற்படி கடை வாசலில் மானேஜிங் டைரக்டர் ஸஹஸ்ரநாமத்தின் மோட்டார் வண்டி நிற்பதைக் கண்டு, திடுக்கிட்டான். அங்கேயே ஒரு சந்தில் ஒதுங்கி நின்றான். சற்று நேரத்

துக்கெல்லாம் வண்டி சாலேயோடு போயிற்று. அதற்குள் ஸஹஸ்ர நாமம் இருந்தார். சரி, நம்மைப் பற்றித்தான் விசாரித்திருக்கிருர் என்று அவனுக்கு நிச்சயம் ஆயிற்று. பயத்திஞல் அவன் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. கடைக்குப் போக லாமா வேண்டாமா என்று ஒரு கணம் யோசித்தான். போய்த் தான் பார்த்து விடலாம் என்று துணிந்து போனுன். கடை வாச லில் போனதும் மறுபடியும் ஒரு கணம் தயங்கி நின்று உள்ளே நோக்கினுன். அவனுடைய நெஞ்சு ஒரு நிமிஷம் அடித்துக் கொள்ளாமல் நின்றுவிட்டது. ஏனெனில், அங்கே கடை முத லாளிக்கு அருகில் அந்த சி.ஐ.டி. கழுகு உட்கார்ந்து அவருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தது.

கடைக்குள் நுழையாமலே சௌந்தரம்: விரைவாகத் திரும் பினுன். வீட்டுக்கு எப்படித்தான் வந்து சேர்ந்தானே தெரியாது. தான் செய்த காரியம் தெரிந்து போய்விட்டது என்பதைப்பற்றி அவனுக்கு இப்போது சந்தேகமே இருக்கவில்லை. எப்படியும், நாளேக்குக் கட்டாயம் கைது செய்து விடுவார்கள். அந்த அவ மானத்தைச் சகித்துக் கொண் டிருக்க முடியாது. தங்கம் என்ன நினைப்பாள்? அவளுடைய தமக் கைமார்கள் என்ன நினைப் பார்கள்? ''ஏழைக்குக் கொடுத்த என்னுடைய கடைசிப் பெண் தான் சந்தோஷமாயிருக்கிருள்'' என்று சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்த மாமியார் என்ன நினைப்பாள்?

உயிரை விடுவதா, அல்லது ஓடிப்போவதா என்பதுதான் இப் போது கேள்வி. உயிரை விடு வதற்கு வழி என்ன என்று யோசிப்பதற்குக் கூட அவனுக்கு இப்போது சக்தியில்லை. மனது அவ்வளவு கலக்கமாக இருந்தது. கடைசியில், ''இப்போதைக்கு எங்கேயாவது கண் காணுத இடத்துக்கு ஓடிப் போகலாம்; பிறகு நிலைமைக்குத் தகுந்தாற் போல் பார்த்துக் கொள்ளலாம்'' என்று தீர்மானித்தான்.

அன்று இரவுதான் சௌந் தரம், தங்கத்துக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு அவளுக்குத் தெரியாமல் வெளியேற முயன் ருன்.

## 5

தங்கத்தினிடம் சௌந்தரம் இலேசில் உண்மையைச் சொல்லி விடவில்லை. கேள்வி கேட்டும், கண்ணீர் விட்டும், ஆணை வைத் தும் கொஞ்சம் கொஞ்சமாக அவள் விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அப்படியிருந்துங்கூட, ஒரு விஷ யம் சௌந்தரம் அதிகப்படி யாகக் கற்பனை செய்துதான் சொன்னுன். ஒரு சிநேகிதன் 2,000 ரூபாய் கடன் கொடுப்ப தாகச் சொல்லியிருந்ததாகவும், அது மறுநாள் வந்துவிடுமென்று நம்பி பாங்கிப் பணத்தைப் போட்டு ஒட்டியாணம் வாங்கிய தாகவும், அந்தப் பாவி பிறகு கையை விரித்துவிட்டான் என் றும் கூறினுன். தன்னுடைய குற் றத்தைக் குறைத்துக் கொள்ளும் எண்ணத்துடனேதான் சௌந் தரம் இப்படிக் கற்பனை செய்து சொன்னுன். ஆனல் இது தங் கத்துக்குப் பெரிய ஆறுதல் அளித் தது. கவலையினுலும் கண்ணீரினு லும் பயத்தினுலும் வாடி வதங் கிப் போயிருந்த அவளுடைய முகம் ஒரு நிமிஷம் பிரகாச மடைந்தது. 'அப்படியானுல் எடுத்தது தெரியாமல் இப்போது கூடப் பணத்தைப் போட்டு விட லாமா?'' என்று கேட்டாள்.

''இப்போது ரொம்ப நாளாகி விட்டதே!'' என்று சொன்னுன் சௌந்தரம்.

''அதனுல் என்ன மோசம்? நான் பெண் பேதை, ஒன்றும் தெரியாதவள்தான். இருந்தா லும் இந்த ஒரு விஷயத்தில் நான் சொல்கிறதைக் கேளுங்கள். இந்த ஒட்டியாணத்தை நாளைக் குக் காலையில் கொண்டு போய் விற்றுவிடுங்கள். நல்ல வேளை யாகத் தங்க நகையாக வாங்கி ஞேம்! வைரமாயிருந்தால் பாதிப் பணம்கூட வராது. விற்றுவிட்டு கையில் பாக்கியுள்ளதையும் எடுத்துக் கொண்டு நேரே மேனே ஜரிடம் போய், நடந்தது நடந்த படி சொல்லிவிடுங்கள். பகவான் இருக்கிருர்; நமக்கு ஒன்றும் கெடுதி வராது'' என்ருள் தங்கம்.

ஒருவிதத்தில் அது சரியான யோசனை என்றுதான் சௌந்த ரத்துக்கும் தோன்றியது. இப் போதுள்ள பாங்கி நெருக்கடி காபராவில், மானேஜிங் டைரக் டர் கேஸ் நடத்துவதற்கு விரும்ப மாட்டார். பணம் வந்தால் போதும் என்று விட்டு விடுவார். உண்மையைச் சொல்லி மன் னிப்புக் கேட்டுக் கொண்டால் அதற்குப் பலன் இல்லாமலா போகும்? ஆனுலும் எவ்வளவோ ஆசையுடன் தங்கத்துக்கு வாங் கிக் கொடுத்த ஒட்டியாணத்தை விற்கிறதா? இப்போது அவள் சம்மதித்தாலும் பிறகு வாழ் நாளெல்லாம் சொல்லிக் காட்ட மாட்டாளா?

''என்ன யோசிக்கிறீர்கள்? நான் சொன்னபடி செய்கிறதாகச் சத்தியம் செய்து கொடுங்கள். இல்லாவிட்டால் விடமாட்டேன்' என்ருள் தங்கம். அந்தப்படியே அவன் சத்தியம் செய்து கொடுக் கிற வரையில் அவள் விடவில்லை.

அடுத்தநாள் காலை சௌந் தரம் ஒட்டியாணத்தைக் கடைத் தெருவுக்கு எடுத்துக் கொண்டு போய் வேருெரு நகைக் கடையில் அதை விற்ருன். வழக்கம்போலக் கூலியைக் குறைத்துக் கொண்டு தங்க விலைக்கு எடுத்துக் கொண் டார்கள். அதிர்ஷ்டவசமாக அந்தப் பத்து நாளில் பவுன் விலை மூன்று ரூபாய்க்கு மேல் உயர்ந்து இருந்தது. ஆகையால் ஒட்டி யாணத்துக்குக் கொடுத்த பணம் அப்படியே திரும்பி வந்துவிட்டது.

மானேஜிங் டைரக்டரிடம் கொண்டு போய் ஆயிரத்தைந் நூறு ரூபாயையும் வைத்து சௌந்தரம் விஷயத்தைச் சொன்னபோது, அவர் ஆச்சரி யத்தினுல் பிரமித்துப் போனுர். ''நல்ல வேளை; இன்றைக்கே கொண்டு வந்து கொடுத்தாய்; நாளைக்கு 'டூ லேட்' ஆகிப்போயி ருக்கும்'' என்ருர். அவனை மன் னித்து விடுவதாகவும், அவன் மேல் வழக்குத் தொடுப்பதில்லை யென்றும் வாக்குக் கொடுத்தார்.

இவ்வளவு சுலபமாகக் காரியம் நடந்து விடுமென்று சௌந்தரம் எதிர்பார்க்கவேயில்லை. ஆகவே கொஞ்சம் தைரியம் அடைந்து ''சார்! தயவு செய்து அந்த சி.ஐ.டி. காரனை உடனே போகச் சொல்லிவிடுங்கள். அவன் முழிச் சுப் பார்த்துக் கொண்டேயிருந் தால், ஒரு வேலையும் ஓடமாட் டேனென்கிறது'' என்ருன்.

மானேஜிங் டைரக்டரின் புரு வங்கள் மறுபடியும் ஆச்சரியத்தி ஞல் நெரிந்தன.

''எந்த சி.ஐ.டி. யைச் சொல் கிருய்?'' என்று ஒன்றும் தெரி யாதவர்போல் கேட்டார்.

''எதிர் ஹோட்டல் மாடியில் இருக்கிறவனைத்தான் ஸார்! அவன் முகத்தை நினைத்துக் கொண்டால் இராத்திரியில் தூக்கம் வரமாட்டேனென்கிறது' என்ருன் சௌந்தரம்.

மானேஜிங் டைரக்டர் மூக் கிலே விரலை வைத்து, தம்முடைய ஆச்சரியத்தைத் தெரியப்படுத் தினர்.

''பலே கெட்டிக்காரன் நீ! சி.ஐ.டி. போட்டிருக்கிறதைக்

கூடக் கண்டு பிடித்துவிட்டாயா? இன்றைக்கு ஒரு நாள்தான் அவன் இருப்பான், நாளைக்கு, வர மாட்டான்'' என்றார்.

''ரொம்ப வந்தனம் 'கவுண்டரு'க்குப் போகிறேன் ஸார்!'' என்றான் சௌந்தரம்.

''இவ்வளவு புத்திசாலி இந்தச் சின்ன வேலையில் இருக்கக்கூடாது. சீக்கிரம் உன்னை ஒரு கிளை ஆபீஸ் ஏஜெண்டாகப் போடுகிறேன்'' என்றார் ராவ்சாகேப் ஸகஸ்ரநாமம்.

சௌந்தரம் மிக்க உற்சாகத்துடன் கீழே சென்றான். அன்று நிம்மதியாக வேலை பார்த்தான். சி.ஐ.டி. காரனையோ அவனுடைய கழுகுப் பார்வையையோ கொஞ்சம் கூட லட்சியம் செய்யவில்லை.

சாயங்காலம் வீட்டுக்குப் போனதும் தங்கத்தினிடம் எல்லா விவரங்களையும் சொன்னான். அந்தச் சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்காக இரண்டு பேரும் ஒரு ஹிந்தி டாக்கிக்குப் போய் விட்டு வந்தார்கள். ஹிந்தி டாக்கியில் ஒரு பெரிய சௌகரியம் உண்டு. திரையில் பேசுகிறது என்னவோ இவர்களுக்குத் தெரியாது; இவர்கள் பாட்டுக்குத் தங்கள் சமாசாரம் பேசிக்கொண்டிருக்கலாமல்லவா?

இராத்திரி இரண்டு பேரும் வெகு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தால் நிம்மதியாகத் தூங்கினார்கள்.

* * *



மறுதினம் காலையில் அடுத்த வீட்டு அய்யாசாமி அய்யர் கையில் காலை தினசரிப் பத்திரிகையுடன் அவசரமாய் வந்தார். ''என்ன மிஸ்டர் சௌந்தரம்! கடைசியில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டீர்களே!'' என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

சௌந்தரம் ஒன்றும் புரியாமல் ''என்ன என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

''உங்களுக்குத் தெரியாதா என்ன? 'குபேரா பாங்க், கோவிந்தா ஆகி விட்டதாமே? ஸகஸ்ரநாமம் எல்லோருக்கும் பெரிய நாமத்தைப் போட்டு விட்டுப் போய் விட்டானாமே!'' என்று சொல்லிப் பத்திரிகையைக் கொடுத்தார். சௌந்தரம் அளவில்லாத திகைப்புடன் பத்திரிகையை வாங்கிப் படித்தான். அதில் பின்வரும் செய்தி கட்டம் கட்டிப் பெரிய எழுத்தில் போட்டிருந்தது.

''குபேரா பாங்கியில் சில நாளைக்கு முன் பரபரப்பு ஏற்பட்டிருந்தது நேயர்களுக்குத் தெரியும். அந்தப் பரபரப்பு ஒரு வாரமாக அடங்கியிருந்தது. பாங்கிக்கு நெருக்கடி தீர்ந்து விட்டது என்று எல்லாரும் எண்ணியிருந்த சமயத்தில் திடுக்கிடும்படியான சம்பவங்கள் நேற்று இரவு நடந்திருக்கின்றன. குபேரா பாங்கியின் மானேஜிங் டைரக்டர் ராவ் சாகிப் ஸகஸ்ரநாமம் நேற்று இரவு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டார். பாங்கியின் கையிருப்பிலிருந்து அவர் ஏராளமான தொகையைக் கையாடியிருப்பதாகத் தெரிந்து, சில நாளாக இரகசியப் போலீஸார் அவரைக் கண்காணித்து வந்தனர். நேற்று இரவு கைது செய்யப்பட்டபோது அவர் வசம் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமான ஸவரன்களும் தங்க நகைகளும் இருந்தன என்று தெரிகிறது. முந்தைய இரண்டு தினங்களில் அவர் மார்க்கெட்டில் ஏராளமாக ஸவரன்கள் வாங்கிச் சேகரித்திருந்தாராம்.

அவர் மதுரைக்கு டிக்கட் வாங்கியிருந்த போதிலும் உண்மையில் புதுச்சேரிக்குப் போக உத்தேசித்திருந்தாரென்று தெரிகிறது. அவரை நல்ல சமயத்தில் கைது செய்த ஸி.ஐ.டி. போலீசாரின் சாமர்த்தியம் பெரிதும் பாராட்டப்படுகிறது.''

இதைப் படித்ததும் சுமார் கால்மணி நேரம் வரையில் ஸௌந்தரம் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான். யோசிக்க யோசிக்க அவனுக்கு எல்லா விஷயங்களும் தெளிவாகத் தெரிய வந்தன. சி.ஐ.டி. காரன் பாங்கியைக் காவல் புரிந்ததெல்லாம் தனக்காக அல்ல, மானேஜிங் டைரக்டருக்காகத்தான். தான் ஒட்டியாணம் வாங்கிய நகைக் கடையில் மானேஜிங் டைரக்டர் ஸவரன் வாங்கியிருக்க வேண்டும். அவர் அங்கே என்ன செய்தார் என்றுதான் சி.ஐ.டி. காரன் விசாரித்திருக்க வேண்டும்! தனக்கு ஒரு ஆபத்தும் ஏற்பட்டிருக்கவில்லை; பணம் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. வீண் பயம்! வீண் நஷ்டம்!

அவனுடைய மனம் ஒருவாறு தெளிவடைந்ததும் உள்ளே போய் தங்கத்தைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னான். அவளும் ரொம்ப ஆச்சரியப்பட்டாள்.

''நாம் பயப்பட்டது எல்லாம் வீண்'' என்று சௌந்தரம் சொன்னபோது அவனுடைய மனத்தில் இருந்ததைத் தெரிந்து கொண்ட தங்கம், ''நல்ல வேளை, நேற்றைக்கே ஒட்டியாணத்தை விற்றுப் பணத்தைக் கொடுத்துத் தொலைத்தீர்களே! இல்லாமற் போனால் அது நம் தலையில் எப்போதும் ஒரு பெரிய பாரமாயிருக்கும்'' என்றாள்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று சௌந்தரத்துக்குத் தெரியவில்லை. சற்று நேரம் கழித்து, திடீரென்று ''தங்கம்! இதில் இன்னொரு சங்கடம் இருக்கிறதே! பாங்கியை மூடிவிட்டபடியால் எனக்கு வேலை போய் விட்டதே!'' என்று கவலையுடன் கூறினான்.

''வேலைதானே போச்சு? போனால் போகட்டும். நீங்கள் போகாமல் இருக்கிறீர்களே, அதுவே எனக்குப் போதும்'' என்றாள் தங்கம்.



சௌந்தரத்துக்கு வேறொன்றும் சொல்லத் தோன்றாமல், ''என் தங்கமே!'' என்றான்.

**(ஆனந்த விகடன் 21-7-1940)**

**நன்றி: ஆனந்த விகடன்**



# வில்லியர்ஸ் இஞ்சின்கள்

## தமிழக அரசு, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வங்கிகளால் ஏற்கப்படுவது எதனுல்? காரணங்கள் பல.


### 3.4 மற்றும் 2 H.P. பம்பு செட்டுக்கள்

விலையில் ரூ. 1500 வரை குறைவு. மணிக்கு 12,000 காலன்கள் வரை தண்ணீர் பாய்ச்சுகின்றன. எடுத்து செல்ல எளிதானவை. சிறு விவசாயிகளுக்கும், வெவ்வேறு இடங்களில் உள்ள நிலங்களில் நீர் பாசனம் செய்யவும் மிகவும் ஏற்றவை. சுலபமாகக் கிடைக்கும் மண்ணெண்ணெய் அல்லது டீசல் கலவையில் இயங்கக் கூடியவை. 2500 பம்பு செட்டுகள் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரே மாவட்டத்தில் விற்கப் பட்டது வில்லியர்ஸின் திறமைக்கு ஒரு சான்று.

### ஸ்ப்ரேயர்களுக்கான L–34 இஞ்சின்கள்

குறைந்த விலையில் கிடைக்கின்றன. விசைத்தெளிப்பான் இயக்கத்திற்கு போதுமான சக்தி கொண்டது. தேவையற்ற அதிக சக்தி இல்லாததால் இயக்கும் செலவு குறைவு. ஒவ்வொரு பருவத்திற்கும் ரூ. 300 வரை மிச்சம். வில்லியர்ஸ் L-34 இஞ்சின் பொருத்திய 1,45,000 ஸ்ப்ரேயர்கள் நாடு முழுவதும் இயங்குகின்றன.

வில்லியர்ஸ் இஞ்சின்களின் குறைந்த விலை காரணமாக மேலும் அதிக விவசாயிகள் ஒரே கடன் திட்டத்தின் கீழ் பயனடைகிருர்கள்.
நாடு முழுவதும் சர்வீஸ் அமைப்பு கொண்டது. ஸ்பேர் பார்ட்சுகள் உடனடி கிடைக்கின்றன. வருடாவருடம் ஆயிரக்கணக்கில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.



Villiers TEXMO IS:7347

ADWAVE/AE/492

தி என்பீல்ட் இந்தியா லிமிடெட்
அக்ரோ இஞ்சின் டிவிஷன் சென்னை 600 020

# உழவர்களுக்கு உதவும் புதிய செய்திகள்!

**மக்காச்சோளம் - தட்டைப்பயறு கால்நடைகளுக்கு நல்ல கலப்புப் பயிர்.**

கால்நடை தீவனத்திற்கு ஏற்ற தீவன கலப்புப் பயிர்கள் எவை என்பது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியில் மக்காச்சோளம் - தட்டைப்பயறு கலப்புப்பயிர் அதிக பசுந்தீவனத்தையும் அதிக புரதத்தையும் கொடுப்பதாகக் கண்டறியப்பட்டது. டெக்கான் மக்காச் சோளமும், கோ. 2 தட்டைப்பயறும் 25 செ. மீ. இடைவெளியில் சாகுபடி செய்தபோது 55 நாட்களில் எக்டருக்கு 35 டன் மகசூல் கொடுத்துள்ளது. ஆனால் மக்காச் சோளம் தனிப்பட்ட முறையில் எக்டருக்கு 33 டன் மகசூலும் தட்டைப்பயறு எக்டருக்கு 24 டன் மட்டுமே கொடுத்துள்ளது. நீர்ப்பாசன வசதியிருந்தால் வருஷத்தில் 5 முறை இவ்வாறு பயிர் செய்து அதிக பசுந்தீவனமும், புரதச்சத்தும் கால்நடைகளுக்கு அளிக்க முடியும் என்று தெளிவாக அறியப்பட்டது. கால்நடைகளும் இந்த கலப்புத் தீவனத்தை, தனித் தீவனத்தைவிட மிகவும் விரும்பி உண்ணுகின்றன. மேலும் புரதச் சத்து மிகுதியாக இருப்பதால், கால்நடைகளுக்கு இத்தீவனமே போதுமானது; பிண்ணுக்கு போன்றவை தேவையில்லை.

**தழைச்சத்து உர அளவை நிர்ணயிக்கப் புதிய முறை**

நெற்பயிருக்கு மேலுரமிட விவசாயிகள் பொதுவாக குறிப்பிட்ட ரகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவையோ அல்லது பயிரின் வளர்ச்சி மண்ணின் வளம் ஆகியவற்றைப் பொறுத்தோ ஓரளவு தோராயமாக அளிக்கின்றனர். ஆனால் இதனை மிகவும் துல்லியமாகக் கணக்கிட ஒரு புது முறையைக் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த முறைப்படி, நெற்பயிரின் முக்கிய சிம்புகளைத் தேர்தெடுத்து அதில் நுனியிலிருந்து நான்காவது இலையின் அடிப்பாகமாகிய காம்புப் பகுதியை(Leaf Sheact) எடுத்து விரல்களுக்கிடையில் வைத்து லேசாக நசுக்கி அயோடின் திரவத்திற்குள் 5 மணி நேரம் ஊற விட வேண்டும். இந்த திரவம் தயாரிக்க 0.1 கிராம் அயோடின் கட்டிகளையும் 0.5 கிராம் பொட்டாசியம் அயோடைடு என்ற இரசாயனப் பொருளையும் 100 மி.லி. நீரில் கரைத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு சோதனை செய்து பார்ப்பதில் 40 சதத்திற்கும் குறைவான பகுதி திரவம் மட்டுமே புது நிறமடைந்தால் மேலுரமாக தழைச்சத்து இடத் தேவையில்லை. சோதனையில் 40 சதம் திரவம் நிறமாறினுல் எக்டருக்கு 20 கிலோவும் 45 சதம் நிறமாறினுல் 30 கிலோவும் 50 சதம் மாறினுல் 40 கிலோவும், 60 சதம் மாறினுல் 50 கிலோவும் தழைச்சத்து உர மேலுரமாக இடவேண்டும். இம்முறையைக் கையாண்டால் பயிருக்கு எந்த அளவு தேவையோ அந்த அளவு மட்டும் இட்டு உரத்தின் சேதாரத்தையும் குறைத்து அதிக மகசூலைப் பெற வாய்ப்புண்டு.

**கரு நீலப் பாசி உரம்**

கரு நீலப் பாசி இனத்தைச் சேர்ந்த அனபீனு, நாஸ்டாக், போலிபோத்திரிக்ஸ், அல்போசிரா போன்ற நுண்ணுயிர்கள் நெல் வயல்களில் நைட்ரஜனை நிலைப்படுத்தி நெல்லுக்குச் சிறந்த பலனைக் கொடுக்கின்றன என்று அறியப்படுகின்றது. புது டில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் மேற்கூறிய நான்கு கருநீலப் பாசி நுண்ணுயிர்களைக் கொண்ட நுண்ணுயிர் உரக் கலவையை வழங்குகின்றனர். அதை உபயோகித்து விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பாசி உரத்தைக்கீழ்க் காணும் முறையில் தாங்களே தயாரித்துக் கொள்ளலாம்.

நன்முக சலிக்கப்பட்ட 5-6 கிலோ மண்ணுடன் 250 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும், 2 கிராம் சோடியம் மாலிப்டேட்டையும் கலந்து 6′ × 33′ × 7″ அளவுள்ள துத்தநாகத் தட்டுக்களில் பரப்பி 6 அங்குலம் அளவுக்கு நீரினைக் கலந்து, ஒருநாள் தேங்கி நிற்கும்படி விடவேண்டும். பின் ஒரு பாக்கெட்டிலிருக்கும் கருநீலப்பாசி உரக்கலவையைத் தூவி இந்தத் தட்டுக்களை சூரிய வெளிச்சம் உள்ள திறந்த வெளியில் 15-20 நாட்கள் வைத்திருக்க வேண்டும். கருநீலப் பாசிகள் ஒளிச்சேர்க்கை முறையில் செயல்பட்டு நீர்மட்டத்தின் மீது பரவலாக வளர்ச்சியடையும். நீர்மட்டம் குறையாமலிருக்க அவ்வப்போது நீர் ஊற்றி வரவேண்டும். பாசிகள் நன்முக வளர்ச்சியடைந்த பின் வெயிலில் காய வைத்துப் பிரித்தெடுத்து நெல் வயலுக்கு உடனே உபயோகிக்கலாம். பாலித்தீன் பைகளில் வைத்திருந்தும் தேவையான போது உபயோகிக்கலாம். நாற்று



நடவு செய்த ஒரு வாரத்திற்குப் பின், நெல் வயல்களில் தேங்கி நிற்கும் நீரில் ஒரு ஏக்கருக்கு 3-4 கிலோ அளவில் இந்தக் கருநீலப் பாசியைத் தூவ வேண்டும்.

இப்பாசிகள் சூரிய ஒளியைப் பயன்படுத்தி நன்ருக வளர்ச்சி பெற்று செயல் புரிந்து நெற்பயிருக்கு நல்ல பலன் கொடுக்கின்றன. இப்பாசிகள் 30-50 கிலோ நைட்ரஜனை ஒரு எக்டரில் ஒரு ஆண்டில் நெல் வயல்களில் நிலைப்படுத்தி நெற்பயிர் பலன் பெறச் செய்கின்றன. மேலும், சில வைட்டமின்களையும், நுண் ஊக்கிகளையும் தயாரித்துத் தாவரங்கள் பலனடையச் செய்கின்றன. அது மட்டுமின்றி, நெல் வயலுக்குப் போடப்படும் இரசாயன உரத்தை நெற்பயிர்கள் சிறந்த முறையில் உபயோகித்துக்கொள்ள இப்பாசிகள் துணை புரிகின்றன.

**நுண்ணுயிர் உரக்கலவையை உபயோகிக்கும் முறைகள் :**

அசட்டோபேக்டர் நுண்ணுயிர் உரக்கலவையை உபயோகிப்பதனால் தூர்களின் எண்ணிக்கையும், பயிர்களின் உயரமும் அதிகரிக்கின்றது. பல்வேறு பயிர்களுக்கு அசட்டோபேக்டர் நுண்ணுயிர் உரக்கலவையினை உபயோகிப்பதால், தழைச்சத்து கிடைக்க வழங்கப்படும் இரசாயன உரங்களின் (யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்றவை) அளவில் 25 முதல் 30 சதம் குறைக்க முடியும் எனப் பல்வேறு சோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனல் விளைச்சல் எந்த விதத்திலும்பாதிக்கப்படுவதில்லை, அசட்டோபேக்டர் நுண்ணுயிர்கள் நெல், ராகி, சோளம், சூரியகாந்தி, பருத்தி, வெண்டைக்காய், சர்க்கரை வள்ளி முதலிய பயிர்களில் நல்ல பலன் கொடுத்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பாக்கெட்டுகளிலிருக்கும் இலைமக்குடன் கலந்த அசட்டோபேக்டர் நுண்ணுயிர் உரக்கலவையை உபயோகிக்கும் முறையைப் பார்ப்போம். அசட்டோபேக்டர் நுண்ணுயிர் உரக்கலவையை மூன்று முறைகளில் உபயோகப்படுத்தலாம். (1) நுண்ணுயிர்க் கலவையை விதைகளுடன் கலந்து விதைக்கலாம்; (2) நுண்ணுயிர் கலவையுள்ள கரைசலில் நாற்றுக்களின் வேர்களை நனைத்து எடுத்து நடவு செய்யலாம்; (3) நுண்ணுயிர் கலவையை தொழுஉரம் மற்றும் மண்ணுடன் கலந்து நிலத்தில் பரப்பலாம்.

விதைகளுடன் கலக்க, சுமார் 125 கிராம் வெல்லத்தை அரை லிட்டர் நீரில் கரைத்து 30 நிமிடங்கள் கொதிக்க வைத்து குளிர வைக்கவேண்டும். பின் விதைகளுடன் கொட்டிக் கலந்து நிழலில் காயவைத்து உலர்ந்த விதைகளை உடனேயோ 24 மணி நேரத்திற்குள்ளோ விதைத்து விட வேண்டும்.

நாற்றுடன் கலக்க, இரண்டு பாக்கெட்டுகளிலிருக்கும் அசட்டோபேக்டர் கலவையினை 10-20 லிட்டர் நீரில் கரைத்துக்கொண்டு ஒரு ஏக்கருக்குத் தேவையான நாற்றுக்களின் வேர்ப்பகுதியினை 15-20 நிமிடங்கள் அக்கரைசலில் நனைய வைத்துப் பின் நடவு செய்யவேண்டும்.

மண்-தொழு உரத்துடன் கலக்க, நான்கு பாக்கெட்டுகளிலுள்ள அசட்டோபேக்டர் கலவையை 10 கிலோ நன்ருக மக்கிய தொழு உரத்துடன் சிறிதளவு நீர் தெளித்துக் கலந்துவிட வேண்டும். பின் அதே அளவு மண்ணுடன் கலந்து கொண்டு ஒரு ஏக்கர் நிலத்தில் விதைக்கும் பொழுதோ நடவு செய்வதற்கு முன்போ, களையெடுத்த பின்போ தூவி மண்ணில் கலக்கும்படி செய்ய வேண்டும். அதிகாலையிலோ மாலையிலோ இக்கலவையைத் தூவுதல் வேண்டும். இவ்வாறு செய்வதனல் அசட்டோபேக்டர் நுண்ணுயிர்கள் வேர் வெளி மண்டலத்தில் இருந்து செயல்பட்டுச் சிறந்த பலனளிக்கின்றன.

**நெல்லும் நீர் பாய்ச்சுதலும்**

தமிழ்நாட்டில் பயிராகும் பயிர்களுக்குள் நெல்லுக்குத்தான் அதிக அளவு நீர் தேவைப்படுகிறது. நெற்பயிரைப் போன்ற வயதுடைய மற்றப் பயிர்களுடன் ஒப்பிடும்போது நெல்லுக்கு இரண்டு முதல் நான்கு மடங்கு நீர் அதிகம் தேவைப்படுகிறது. சோளப் பயிருக்கும் கம்புக்கும் 500 மி. மீட்டர். நிலக்கடலைப் பயிருக்கு 540 மி.மீ. ராகி பயிருக்கு 580 மி.மீ. மக்காச்சோளத்திற்கு 625 மி.மீ. நீர் தேவைப்படுகிறது. ஆனல் நெற்பயிருக்கு 1800 மி.மீ. நீர் தேவை. மற்றும் நெற்பயிரின் உற்பத்தித் திறன் குறைவுதான். அதாவது ஒரு மி.மீ. நீர் அளவுக்கு 2.8 கிலோ நெல்லும், 12.5 கிலோ கோதுமையும், 9 கிலோ சோளமும், 8 கிலோ மக்காச் சோளம், கம்பு மகசூலும், 6.2 கிலோ ராகியும் 5.5 கிலோ நிலக்கடலையும் மகசூலாகப் பெறலாம்.

நெல்லில் அதிக மகசூல் பெற நீர் நன்கு பாய்ச்சுதல் அவசியம். நெற்பயிரைக் குறைந்த அளவு நீரை உபயோகித்தும் பயிரிடலாம். ஆனல் மகசூல் குறைந்துவிடும். நீர்த் தேவையைப் பொறுத்து நெற்பயிரை மூன்று விதமாகப் பிரிக்கலாம். முதலாவது நன்கு நீர் பாய்ச்சிப் பயிரிடப்படுவது. இரண்டாவது ஓரளவு நீர் பாய்ச்சப்பட்டுப் பயிரிடப்படுவது. அதாவது மானுவாரியாக விதைக்கப்பட்டு பின்பு நீர் பாய்ச்சப்படுவது. மூன்ருவது, முழுமையாக மழையையே நம்பிப் பயிரிடப்படும் முறை. நம் தமிழ் நாட்டில் நெல்லுக்கு நீர்த் தேவையை அறிய நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவுகளைப் பார்ப்போம்.

நம் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் நெல்லுக்கு 5 செ. மீ. முதல் 1 செ. மீ. வரை நீர் தேவைப்படுகிறது. அதாவது நீரைப் பாய்ச்சும் பொழுது 5 செ. மீ. உயரத்திற்கு நீரைத் தேக்க வேண்டியது. பின்பு ஓரிரு நாட்களில் நீர் குறைந்து 1 செ.மீ உயரமிருக்கும் பொழுது திரும்பவும் 5 செ. மீ. உயரமிருக்குமாறு நீர் பாய்ச்சுவது. இவ்வாறு தொடர்ந்து நீரைப் பாய்ச்சுவதும் வடிய விடுவதுமாக இருக்க வேண்டும். இருப்பினும் எங்கெல்லாம் களைகள் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் 10 செ. மீ. முதல் 5 செ. மீ. என்ற அளவிலோ 7.5 செ. மீ. முதல் 2.5 செ. மீ. என்ற அளவிலோ நீரை பாய்ச்சலாம்.

அதிக விளைச்சலைக் கொடுக்கும் குட்டை ரகங்களான ஐ. ஆர். 8 போன்ற ரகங்களுக்கு 5 செ. மீ. முதல் பூஜ்ஜியம் செ. மீ. என்ற அளவில் நீரை உபயோகிக்கலாம். நிலத்தில் மயிரிழை போன்ற வெடிப்புகள் உண்டாக ஆரம்பிக்கும் சமயம் திரும்ப நீர்பாய்ச்சலாம். இருப்பினும் தஞ்சை பழைய டெல்டா பகுதிகளுக்கும் இது போன்ற இதர இடங்களுக்கும் 20 செ. மீ. முதல் 10 செ.மீ. என்ற அளவிலோ 15 செ. மீ. முதல் 5 செ. மீ. என்ற அளவிலோ நீரைப் பாய்ச்சலாம். பூமியின் தன்மையைப் பொறுத்தும், களைகளின் தொல்லையைப் பொறுத்தும் நீர் அளவைப் பராமரிக்கலாம். குறைந்த நீரை உபயோகித்து அதிக உற்பத்தியை எடுக்கும் முறையை நாம் பின்பற்ற வேண்டும்.

**கொத்துக்கடலைக்கு பொட்டாசு உரத்தேவை :**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திண்டிவனம் அகில இந்திய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து ஆராய்ச்சியில் டிஎம்வி. 7 நிலக்

கடலைக்கு எந்த அளவு சாம்பல் சத்து உரமிடவேண்டும் எனக் கடந்த பருவத்தில் ஆராயப்பட்டது.

எக்டருக்கு 89 கிலோ பொட்டாஷ் உரமிட்டு நீர்பாய்ச்சிச் சாகுபடி செய்ததில் அதிக அளவான 2002 கிலோ கடலை மகசூல் கிடைத்துள்ளது. இருப்பினும் வரவு-செலவுக் கணக்கைப் பார்க்கும்பொழுது எக்டருக்கு 75 கிலோ என்ற அளவில் பொட்டாஷ் உரமிட்டதில் 1994 கிலோ மகசூல் கிடைத்துள்ளது தான் விவசாயிக்கு லாபகரமாக இருக்கும் என்று தெரிகிறது. எக்டருக்கு 89 கிலோ உரமிட்டதில் ஒரு ரூபாய் செலவுக்கு ரூ. 1.90 வருமானமும் 75 கிலோ உரமிட்டதில் ரூ. 2.38 வருமானமும் கிடைத்திருக்கின்றன. எனவே எக்டருக்கு 53 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும் என்கிற தற்போதைய பரிந்துரையை மாற்றி 75 கிலோ இட்டால் அதிக உற்பத்தியும் அதே சமயம் அதிக லாபமும் பெறலாம் எனத் தோன்றுகிறது.

### புதிய சர்க்கரைவள்ளிக் கிழங்கு

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் உயர் விளைச்சல் தரும் சிறந்த கோ. 1 என்ற ரகத்தை சமீபத்தில் கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம் வெளியிட்டது. இந்த ரகம் எக்டருக்கு 28.33 டன்கள் வரை மகசூல் கொடுக்கக்கூடியது. இது சாதாரணமாகக் கிடைக்கும் மகசூலை விட 17 சதவீதம் அதிகமாகும். 'கிழங்கு துளைப்பான்' வண்டு இதனைத் தாக்குவதில்லை. மற்ற வகைகளை கிழங்கு துளைக்கும் வண்டு சுமார் 40 முதல் 80 சதவீதம் தாக்கும். ஆனால் கோ. 1 ரகத்தை 11 முதல் 15 சதவீதம் தான் தாக்குகிறது. இதன் வயது 135 நாட்கள்.

எனவே சர்க்கரைவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் கோ. 1 ரகத்தைப் பயிரிட்டு அதிக லாபம் அடையக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### பருத்தியில் கொழுந்துவெட்டுவதால் அதிகலாபம்

கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர உடற் கூறு இயல்துறையில் 5 பருத்தி ரகங்களுக்கு கொழுந்து வெட்டுதல் செய்யப்பட்டு மகசூல் ஆராயப்பட்டது. விதைத்த 45-வது, 60-வது 75-வது மற்றும் 90-வது நாட்களில் கொழுந்து வெட்டுதல் செய்து எக்டருக்கு 60 கிலோ, 120 கிலோ தழைச் சத்து என்ற இரண்டு நிலையில் உரமிட்டு ஆராயப்பட்டது.

**எம். சி. யூ. 5** : விதைத்த 75-வது நாளில் கொழுந்து வெட்டி, எக்டருக்கு 120 கிலோ தழைச் சத்து கொடுத்ததில் எக்டருக்கு 2073 கிலோ மகசூல் கிடைத்தது. கட்டுப்படுத்தப்பட்ட அதாவது கொழுந்து வெட்டாமல், உரமிடாமல் உள்ள சோதனைப் பாத்தியின் எக்டர் மகசூல் 1515 கிலோ. கொழுந்து வெட்டுவதால் எக்டருக்கு ரூ. 2745 அதிக லாபம் கிடைத்தது.

**சுஜாதா** : கட்டுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியின் மகசூல் எக்டருக்கு 1236 கிலோவும் 75-வது நாள் கொழுந்து வெட்டி, எக்டருக்கு 60 கிலோ தழைச் சத்து உரமிட்டதில் எக்டருக்கு 1356 கிலோவும் மகசூல் கிடைத்தது. இதனால் எக்டருக்கு ரூ. 180 அதிக லாபம் கிடைத்தது.

**சி. பி. எஸ். 156**:—கட்டுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியின் எக்டர் மகசூல் 973 கிலோவும் 75வது நாள் கொழுந்து வெட்டிய பாத்தியில் எக்டருக்கு 1268 கிலோ மகசூல் கிடைத்தது.

இதனால் எக்டருக்கு ரூ. 1602 அதிக லாபம் கிடைத்தது.

**எம். சி. யூ. 7** : கட்டுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியின் எக்டர் மகசூல் 2392 கிலோவும், 90-வது நாள் கொழுந்து வெட்டி எக்டருக்கு 60கிலோ தழைச்சத்து கொடுத்த பாத்தியில் எக்டருக்கு 2535 கிலோவும் மகசூல் கிடைத்தது. இதனால் எக்டருக்கு ரூ. 481 கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**பி. ஆர். எஸ். 72** : எல்லாச் சோதனைப் பாத்திகளிலும் கொழுந்து வெட்டுதல் சிறந்தது எனத் தெரிந்தது. ஆனாலும் 90 வது நாள் கொழுந்து வெட்டியதில் எக்டருக்கு 2041 கிலோவும் களீடுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியில் எக்டருக்கு 1658 கிலோவும் மகசூல் கிடைத்தது. இதனால் எக்டருக்கு ரூ. 1703 அதிக லாபம் கிடைத்தது.



# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால் தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன: —

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும் உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162

# பாம்பு என்றால் பதறாதீர்!



—டாக்டர் எ. கருப்பண்ண பிள்ளை

உதவி அறுவை மருத்துவர்

இராயப்பேட்டை மருத்துவமனை

சென்னை

**பா**ம்பு என்றால் படையும் நடுங்கும் என்பது முதுமொழி. ஆனால் இந்த நவீன உலகத்தில் நாம் பாம்பைக் கண்டு பயப்பட வேண்டாம்! ஏனென்றால் இப்பொழுது பாம்புக் கடியின் அபாயத்திலிருந்து, காத்துக் கொள்ள நல்ல மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

நியூஸிலாந்து அயர்லாந்து தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் பாம்பு உள்ளது.

பாம்புகளில் 2,500 வகைகள் உள்ளன. ஆனால் அவற்றில் 216 வகைப் பாம்புகள்தான் விஷம் உள்ளவை. இந்தியாவில் 52 வகை பாம்புகள்தான் உள்ளன. அதிலும் சாதாரணமாக 4 வகைப் பாம்புகள்தான் மிகவும் முக்கியமான விஷமுள்ளவை.

ஆண்டிற்குச் சுமாராக 2,00,000 பேர் பாம்புக்கடியினால் துன்புறுகின்றனர். இவற்றில் 15,000 பேர் பாம்புக்கடிக்குப் பலியாகின்றனர்.

**விஷமுள்ள பாம்புகள்:** நல்ல பாம்பு, கட்டு விரியன், கண்ணாடி விரியன், சுருட்டைப் பாம்பு, குழி விரியன் ஆகியவை விஷமுள்ள பாம்புகள் ஆகும். இவற்றில் கட்டுவிரியன் கொடிய விஷமுள்ள பாம்பு.

**விஷமில்லாத பாம்புகள்:** மண் பாம்பு, சாரைப்பாம்பு, தண்ணீர்ப் பாம்பு, பச்சைப் பாம்பு, மலைப்பாம்பு, கொம்பேறி மூக்கன் ஆகியவை விஷமற்றவை.

**பாம்பைப்பற்றி சில உண்மைகள்:**

பாம்புகள் 10, 20 ஆண்டு உயிருடன் இருக்கும். பாம்புகளுக்கு ஒரே தலைதான் உள்ளது. பாம்புகள் பழி வாங்குவதில்லை. பாம்புகள் உணவின்றி நீரை மட்டுமே பருகி ஓராண்டுக் காலம்வரை உயிர் வாழ முடியும். பாம்பிலிருந்து மாணிக்கம் கிடைக்கிறது என்பதும் பொய். பாம்புகளால் தொழுநோய் வராது.

**பாம்பு கடித்தால் ஏற்படும் அறிகுறிகள்:**

**கண்ணாடி விரியன்** கடித்தால் எரிச்சலுடன் கூடிய தொடர்வலியும் வீக்கமும் ஏற்படும். கடிபட்ட இடத்தில் நிறம் மாறி, கொப்புளங்கள் உண்டாகும், தலை சுற்றி வாந்தி ஏற்படும். எச்சில், சிறுநீர் ஆகியவற்றில் இரத்தம் கலந்திருக்கும். கண்பார்வையும், சுவாசமும் பாதிக்கப்படும்.


**நல்ல பாம்பு** கடித்தால் கடிபட்ட இடத்தில் வலி, வீக்கம், கண் இமை பாதிப்பு, பாதம் சோர்ந்து போதல், நாக்கு பேச்சு குளறல், எச்சில் வடிதல், மயக்கம், நினைவற்ற தன்மை, மூச்சுத் திணறல் ஏற்படலாம். இதன் விஷம் நரம்புகளைப் பாதிக்கும். சுவாசம் பாதிக்கப்படுவதாலோ, மூச்சுத் திணறல் ஏற்படுவதாலோ உயிர் பிரியும்.

**கட்டு விரியன்** கொடிய விஷமுள்ள பாம்பு. இதன் விஷம் நல்ல பாம்பின் விஷத்தை விட 8 மடங்கு அதிக வீரியமுள்ளது. கட்டுவிரியனின் கடி நல்ல பாம்பின் கடியை ஒத்திருக்கும். அதே அறிகுறிகள் தென்படும்.

**சுருட்டைப் பாம்பு** ஒரு அடி நீளமுள்ள மிகச்சிறிய பாம்பு. இதன் விஷம் குறைவான அளவு உள்ளதால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. இரத்தக் கசிவு ஏற்படுகின்றது.

**பாம்பு கடித்தால் செய்ய வேண்டிய முதலுதவி:**

பாம்பு கடித்தால் பயம் கொள்ளக்கூடாது. பயம்தான் நமது முதல் எதிரி. கடிபட்டவருக்குத் தைரியம் சொல்ல வேண்டும். காரணம் பாம்புகளில் பல விஷமற்றவை. கடிபட்ட இடத்திற்கு மேல் இறுக்கமாகக் கட்டுப் போட வேண்டும். இதன் மூலம் விஷம் மேலும் பரவுவதைத் தடுக்கலாம். வீக்கம் அதிகமானால் மட்டும் கட்டைச் சிறிது தளர்த்தி விட வேண்டும்.



கடித்த பாம்பு அகப்பட்டால் விஷம் உள்ளதா, விஷம் இல்லா லாததா என்பதை அறிதல் வேண்டும்.

கடிபட்ட நபரை, கட்டில் அல்லது ஸ்ட்ரெச்சர் மூலமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். கடிபட்ட நபர் நடக்கக்கூடாது. கடிபட்ட இடத்தை அறுப்பதும் கூடாது.

பாம்புக்கடிக்கு விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட பாம்பு விஷமுறிவு மருந்தான "Anti venom serum" மிக்வும் சிறந்தது. இது பம்பாயில் உள்ள Hafficine Instituteல் தயாரிக்கப்படுகிறது.

**மருத்துவ சிகிச்சை**

பாம்புக்கடிக்கு ஆளான நபரின் அதிர்ச்சியைப் போக்குவதற்கு முதலில் சிகிச்சை அளிக்க வேண்டும். கடித்த நபரைப் போர்வை கொண்டு போர்த்த வேண்டும். கால் வைத்திருக்கும் பாகத்தை உயர்த்தி வைக்க வேண்டும்.

குளுகோஸ் உப்புநீரை (Glucose Saline) ஊசி மூலம் செலுத்த வேண்டும். அதிர்ச்சி அதிகமாக ஏற்பட்டால் 'டிக்காட்ரான்' (Decadran) 'மெப்படீன்' (Mephantine) போன்ற உயிர்காக்கும் மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மூச்சுத் திணறல் இருந்தால் பிராணவாயு, செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டும். பாம்பு விஷமுறிவு மருந்தை (Anti venom serum கடித்த பாம்பிற்கு ஏற்ப 10 மி. லிட்டர் நீரில் (Distilled Water) கலந்து ஒன்று அல்லது இரண்டு சொட்டு அட்ரினிலின் (Adrenelene) சேர்த்து மெதுவாக நரம்பு மூலம் உடலுக்கு ஒத்துக் கொள்கிறதா என்பதை (Test Dose) பரிட்சை செய்து கொண்டு, பிறகு கொடுக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் 6 மணி நேரத்திற்குப் பிறகு மீண்டும் ஒரு முறை கொடுக்கலாம்.

**பாம்பு கடிக்காமலிருக்க சில தடுப்பு முறைகள் :**

வீடுகளைச் சுத்தப்படுத்தி எலிகள் வராதபடி செய்யவேண்டும். இரவில் நடக்கும்போது கைத்தடி கொண்டு தட்டிச் செல்வதாலும் பலமாக நடந்து செல்வதாலும் பாம்புகள் நிலத்தின் அதிர்ச்சியை உணர்ந்து விலகிவிடும்.

எனவே பாம்புக்கடிக்கு நவீன முறையில் பூரண சிகிச்சை அளிக்கப்படுவதால், இனி, பாம்பைக் கண்டு பதற வேண்டாம்!

## அப்படியும் நடக்குமா?

**க**ல்கி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராயிருந்த போது ஒரு சமயம் சங்கத்தின் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெறவிருந்தது. காரியக் கமிட்டி அங்கத்தினர் வெகு சிலரே வந்திருந்தனர். மற்ற அங்கத்தினர்கள் வருவதற்காக எல்லோரும் காத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கிருந்த திரு. வெ. சாமிநாத சர்மா, ஏதோ காரியமாகத் தன் இடத்தை விட்டு எழுந்து அப்பால் சென்றார். அவர் சென்ற மறுகணம் கூரையிலிருந்த மின்சார விசிறி பெயர்ந்து, திரு. சாமிநாத சர்மா உட்கார்ந்திருந்த இடத்தில் விழுந்தது. வந்திருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். இந்தச் சம்பவத்தை எண்ணிச் சிலிர்ப்படைந்தனர். 'இன்னும் ஒரு சில விநாடிகளுக்கு முன்னர் இது நிகழ்ந்திருந்தால் திரு. சாமிநாத சர்மாவின் கதி என்ன ஆகியிருக்கும்!' என்று பேசிக்கொண்டனர்.

'கல்கி' அவர்கள் வந்ததும் இந்தச் செய்தியை அறிந்து அதிசயப்பட்டார். பக்கத்திலிருந்த திரு. நாரண துரைக்கண்ணன் அவர்களிடம் "பார்த்தீர்களா துரைக்கண்ணன்! இந்த மாதிரி திடீர்ச் சம்பவங்களை நாம் கற்பனை செய்து, கதைகளில் கதாநாயகன் மேல் அது விழுந்தது; இது விழுந்தது என்று எழுதினால் யாரும் நம்ப மாட்டார்கள். அப்படியும் நடக்குமா என்று கேட்பார்கள். இங்கே அந்த அதிசயம் நடந்திருக்கிறது!' என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி நகைச்சுவையுடன் கூறி எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

## ராஜாஜியின் ஆற்றல்!

**செ**ன்னை சர்க்காரின் பிரதம காரியதரிசியாக இருந்தார் 'பிரேகன்பரி' என்ற ஆங்கிலேயர். ராஜாஜி அவரைத் தம் மாயப் புன்னகையால் மயக்கி விட்டார்.

முதன் முதல், பிரதமக் காரியதரிசியான அந்த ஆங்கிலேயர் ராஜாஜியைச் சந்தித்தது ஒரு ரசமான சம்பவம். அவர்கள் பேச்சு அன்று கதராடையைப் பற்றி இருந்தது. ராஜாஜி கதராடையின் மகிமையை, புனிதத்தை, எளிமையை விளக்க — விளக்க, 'பிரேகன்பரி' அதில் மெய்ம் மறந்தார்; மறு நாள் ராஜாஜி அந்த ஆங்கிலேயருக்கு உடை தைத்துக் கொள்ளுவதற்கான கதர்த்துணிகளைத் தம் அன்பளிப்பாகக் கொடுத்தார். பிரேகன்பரியும் அந்தக் கதர்த்துணிகளைப் பெற்றுக் கொண்டு பிரபல தையற்காரரிடம் கொடுத்து அதில் சூட்டுத் தைத்துப் போட்டுக் கொண்டு வந்தார். ஆங்கிலேயரைக் கதராடை உடுத்தச் செய்த ராஜாஜியின் ஆற்றலைப் பற்றியே அப்போது பேச்சாக இருந்தது.

## ராஜாஜியின் ஒப்பற்ற குணம்

**ரா**ஜாஜி, யாரையாகிலும் பார்க்கவிரும்பினால் அந்த நபர் ராஜாஜியின் வீட்டுக்கு ஓடிப் போய்ச் சந்திக்கத் தயாராய் இருந்தார்கள். ஆனால் ராஜாஜி, யாரையும் கேட்காமலே, எந்த வித முன்னறிவிப்பும் இன்றி அவர் வீட்டுக்குப் போய்விடுவார். இது ராஜாஜியின் ஒப்பற்றதோர் குணம்.

—காமராஜர்

# யுனெஸ்கோ

'யுனெஸ்கோ' (UNESCO) என்றால் என்ன?

''சமாதானம், சர்வதேச நட்புறவு, முன்னேறும் நாடுகளின் சமூக, கல்வி, கலாச்சார முன்னேற்றத்துக்குப் பாடுபடும் கழகமே 'யுனெஸ்கோ''. அதாவது, ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக, கலாச்சாரக் கழகம். இது தன் 30-வது ஆண்டை வெற்றிகரமாக முடித்து, இப்போது 31-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

1946-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக, கலாச்சாரக் கழகம் (யுனெஸ்கோ) துவக்கப்பட்டது. அப்போது அதன் பொது மாநாட்டில் இந்தியா உட்பட மூன்று ஆசிய நாடுகளே பங்கேற்றன. ஆனால், இன்றைக்கோ ஆசியா சார்பில் 23 நாடுகள் யுனெஸ்கோவில் அங்கம் வகிக்கின்றன. இப்போது மொத்தம் இடம் பெற்றிருக்கும் நாடுகள் 136.

## யுனெஸ்கோவின் இலட்சியம்

''மனிதர்கள் மனத்தில் 'போர்' பற்றிய நினைவுகள் பிறப்பெடுக்கின்றபடியால், அதேபோலவே மனிதர்கள் மனத்தில் சமாதானத்துக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் பிறப்பெடுக்க வேண்டும் என்பது யுனெஸ்கோவின் பிரபலமான ஒரு சித்தாந்தம்.

ஆகவே இனம், மொழி, மதம், பால் என்ற பாகுபாடுகளின்றி உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் மத்தியில்-கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவை மூலம் நாடுகளுக்கு இடையில் கழக நட்புறவை ஏற்படுத்தி, சமாதானம், நீதிக்கு கவுரவம், அடிப்படை உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றுக்கு நல்வழி காணுவதே யுனெஸ்கோவின் இலட்சியம். இந்த இலட்சியத்துக்காக யுனெஸ்கோ கடந்த முப்பதாண்டுக் காலமாக மேற்கொண்ட நடவடிக்கைகளும், தொடர்ந்த பணிகளும் எண்ணிலடங்கா.

## இந்தியாவின் பங்கு :

யுனெஸ்கோவின் பல்வேறு வகையான திட்டங்களில் இந்தியாவும் சீரிய பங்கு கொண்டு செயலாற்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். யுனெஸ்கோ சார்பில் நடந்த வட்டார, சர்வதேசக் கூட்டங்கள் பல-1956-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை இந்தியாவில் நடத்தப்பட்டுள்ளது. காலஞ்சென்ற டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், டாக்டர் ஜாகீர் உசேன் போன்ற புகழ் மிக்க இந்தியத் தலைவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை யுனெஸ்கோவுக்குச் செய்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து இந்தியாவைச் சேர்ந்த 47 நிபுணர்கள்-கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம், தகவல் தொடர்பு போன்ற துறைகளில்உலகின் பல்வேறு பாகங்களில் யுனெஸ்கோ நிபுணர்களாகச் செயலாற்றி வருகின்றனர்.

உலக நாடுகளுடன் கூட்டுறவுக்கென தேசிய கமிஷன் அமைத்த யுனெஸ்கோ உறுப்பினர்களில் முதல் நாடு இந்தியாதான். கல்வி அமைச்சர் தலைமையிலான இந்தக் கமிஷன், உலக சமாதானம், சர்வதேச நட்புறவு போன்ற யுனெஸ்கோவின் இலட்சியங்களைச் செயலாக்கப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

## வகுப்பறையில் உலகம்

கல்வி, சர்வதேச நட்புறவு, மற்றும் கூட்டுறவுத் துறையில் யுனெஸ்கோ ஆற்றி வரும் பணிகளை எடுத்துக்கூறும் ,வகையில் ''வகுப்பறையில் உலகம்'' என்ற தலைப்பில் ஒரு பத்திரிகையை இந்திய தேசியக் கமிஷன் வெளியிட்டு வருகிறது. அத்துடன் 3 மாதங்களுக்கு ஒருமுறை செய்திக் கதிர்களையும் வெளியிடுகிறது.

யுனெஸ்கோவின் இலட்சியம், செயல்முறைகள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் வகையில் இந்தியாவில் 128 யுனெஸ்கோ சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## இந்தியா செய்த பேருதவி

யுனெஸ்கோ பட்ஜெட்டுக்கென இந்த ஆண்டு இந்தியா 9,26,891 ஷில்லிங் வழங்கியுள்ளது. இந்தோனேஷியாவில் உள்ள போரோபுதூர் நினைவுச் சின்னங்கள் அடிக்கல் ஆட்டம் கண்டு அழிந்து போகாமல் காக்கும் பொருட்டு 5 இலட்சம் ரூபாய் பெறுமான இரும்புப் பாளங்களை இந்தோனேசியாவுக்கு இந்தியா வழங்கியுள்ளது. யுனெஸ்கோ திட்டத்தில் பங்கேற்கு முகமாக இந்த உதவி செய்துள்ளது இந்தியா.

இதேபோலவே காலனி பிரதேசங்களிலிருந்து வெளியேறிய ஆப்பிரிக்க அகதிகளுக்கான யுனெஸ்கோ கல்வித் திட்டங்களின்கீழ் ரூபாய் 1 இலட்சம் மதிப்புள்ள பென்சில், அளவுகோல், ஜாமெட்ரி பெட்டிகள் போன்ற கல்விக்கான சாதனங்களை இந்தியா வழங்கியுள்ளது.


ஆஸ்வான் அணை தண்ணீரில் மூழ்கிய நுபியா நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க 1960-ஆம் ஆண்டு யுனெஸ்கோ மேற்கொண்ட திட்டத்தில் இந்தியா பங்கேற்றது. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது சில கோவில்கள் இடித்துத் தள்ளப்பட்டு, பின் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டி முடிக்கப்பட்டன.

## பல்வேறு துறைகளுக்கு நிதி உதவிகள்

முதியோர் கல்வி, விஞ்ஞான போதனை, புத்தக வளர்ச்சி, பொறியியல், கல்வி, விஞ்ஞான விளக்கப்படம், பல்கலைக்கழகக் கல்வி, கலாச்சாரப் படிப்பு, தகவல் தொடர்பு சாதனம்-இப்படி பலப்பல துறைகளுக்கும் நிதியுதவி அளித்து யுனெஸ்கோ சீரிய பணியாற்றி வருகிறது. பலனடைந்த துறைகளும் ஏராளம்.

## ரங்கநாதர் கோவில் புனரமைப்பு

ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாத சுவாமி கோவிலைப் புனரமைக்கும் புனிதமானதோர் பணியிலும் யுனெஸ்கோ உதவியுள்ளது. யுனெஸ்கோவின் கலாச்சாரப் பணிகளும் நினைவில் நிற்கின்றன. யுனெஸ்கோ கலாச்சாரப் பணிகளின் பயனாக புதுடெல்லியில் கலாச்சார ஆய்வுக்கான ஆராய்ச்சிக்குழு துவக்கப்பட்டது. இக்குழு பல்வேறு கலாச்சார திட்டங்களை மேற்கொண்டது. உலக இலக்



**யுனஸ்கோவின் பெரும் மீட்சித் திட்டத்தின் மூலம், தமிழ் நாட்டின் புகழ்மிக்க கோவில் தன் தொன்மை யான அழகுச் சிறப்பை மீண்டும் பெற்று வருகிறது.**

கியப் பணியிலும் யுனெஸ்கோ நற்சேவை புரிந்துள்ளது.

இந்திய மொழியிலான 65 நூல் களை பிரஞ்சு மொழியிலும் (18 நூல்கள்) ஆங்கிலத்திலும் (42 நூல்கள்) ஜெர்மனியிலும் (5 நூல்கள்) இதுவரை மொழி பெயர்த்துள்ளது யுனெஸ்கோ.

**'ஆரோவில்' நகரம்**

யுனெஸ்கோ ஒத்துழைப்புடன் இந்தியாவில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டம் — பாண்டிச்சேரி யில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'ஆரோவில்' நகரம். ஸ்ரீ அரவிந் தர் சங்கத்தின் ஆதரவில் நிர் மாணிக்கப்பட்ட இந்த எழில் மிகு ஆரோவில் நகரம்—குறிப் பிடத்தக்க ஓர் அம்சம்.

பாரீஸ் நகரில் கடந்த யுனெஸ் கோவின் பொது மாநாட்டில் இந்தியக் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற கல்வி அமைச்சர் பேராசிரியர் நூருல் ஹாசன் சிறப்புரையாற்றினர்.

**பொருளாதார நெருக்கடி :**

''நாட்டில் நிதி பற்றுக்குறை யால் கல்வி முறை அச்சுறுத்தப் பட்டு வருகிறது. பல்கலைக் கழ கங்களுக்கு மானியங்கள், விஞ் ஞான ஆராய்ச்சி மற்றும் கலாச் சார மேம்பாட்டுக்கு ஒதுக்கீடு, போன்றவை எளிதில் கிடைப்ப தாக இல்லை. தங்களது தொழில் திறமையை சரிவரக் காட்ட இய லாத ஒரு வேலையை மேற் கொள்ளுமாறு விஞ்ஞான நிபுணர் களும், தொழில் வல்லுனர்களும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.


சாதாரண மனிதன் நெருங்க முடியாத இடத்தில் புத்தகங்கள் இருக்கின்றன. கலாச்சார நிலை யங்களோ சொல்லொண்ணு இடையூறுகளை எதிர் நோக்கி யிருக்கின்றன'' என்று அவர் குறிப்பிட்டார்.

**இந்தியக் குழு கோரிக்கை**

யுனெஸ்கோ திட்டங்கள் சம் பந்தப்பட்ட அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தல், முன்னே றும் நாடுகள் தங்கள் சொந்த வளங்களைப் பயன்படுத்த உதவு வதே திட்டங்களின் அவசியம்; முன்னேறும் நாடுகளில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களை உதவித் திட்டத்தில் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள் வது போன்ற தங்களது எண் ணத்தை இந்தியப் பிரதிநிதிகள் யுனெஸ்கோவிடம் எடுத்துரைத் தனர்.

சமீபத்தில் புதுடெல்லியில் துணை வட்டார மாநாடு நடை பெற்றது. இந்த மாநாட்டின் பங்கேற்ற டைரக்டர் ஜெனரலின் பிரதிநிதி, பணிகளைப் பரவலாக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு யுனெஸ்கோ ஒப்புதல் அளித் துள்ளதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து வட்டார அலுவல கங்கள் பலவற்றுக்கும் கூடுத லாகப் பணிகள் ஒதுக்கப்பட்டன.

கல்வி, இயற்கை, விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் தங்கள் தேவைகளுக்காகத் திட்ட மிட தொலைவில் உள்ள நாடுகள் பலவற்றை யுனெஸ்கோ நெருங்கி வரச் செய்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு நாடும் தனது வருங்காலத்தை, தானே உருவாக்கிக் கொள்வதற்கு இது தான் தேவை என்பதை இந்தியா பூரணமாக நம்புகிறது.



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"



பதிவு எண். M. 8676

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி




ஆசிரியரும் [illegible]யிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் [illegible]ட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.